# அத்தியாயம் 2

## தேசிய உற்பத்தியும் செலவினமும்

### 2.1 பொதுநோக்கு

**இலங்கைப் பொருளாதாரமானது வெளிநாட்டில் மற்றும் உள்நாட்டிலிருந்து ஏற்பட்ட பல்வேறு சவால்களுக்கு மத்தியிலும் 2009இல் 3.5 சதவீத வளர்ச்சியைப் பதிவு செய்தது. இரண்டாம் காலாண்டிலிருந்து உருவான உறுதியான மீட்சி, நான்காம் காலாண்டில் 6.2 சதவீத வளர்ச்சியைப் பதிவு செய்தமை இந்த வளர்ச்சிக்குக் காரணமாக அமைந்தது. இது** தொடர்ச்சியாக 4 வருடங்களில் பதிவு செய்த 6.0 சதவீதமான அல்லது அதற்குக் கூடுதலான ஆண்டு வளர்ச்சியைக் கொண்ட அபரிமித வளர்ச்சியின் தொடர்ச்சியாகும். 2009இல் இவ் வளர்ச்சியை அடைவதில் எதிர்கொள்ளப்பட்ட சவால்கள், பாரிய பொருளாதாரங்களில் சமகாலத்தில் ஏற்பட்ட சரிவு மற்றும் 2009இன் முதலரைப்பகுதியில் வடக்கில் போர் தீவிரமடைந்ததால் தீவிரமடைந்த பாதுகாப்புக் கரிசனைகள் அதுபோல் வேளாண்மைத் துறையில் வானிலை தொடர்பான பின்னடைவு என்பவற்றை உள்ளடக்கியுள்ளன. போர் முடிவுக்கு வந்ததைத் தொடர்ந்து மேம்பாடடைந்த வியாபார நம்பகத்தன்மை மற்றும் உலகப் பொருளாதாரத்திலான படிப்படியான மீட்சி என்பன 2010இல் இலங்கைப் பொருளாதாரத்தின் வளர்ச்சி வாய்ப்புக்களுக்கு மேலும் தூண்டுதலை வழங்குமென எதிர்பார்க்கப்படுகிறது.

**இவ்வாண்டின் முதலரைப்பகுதியில் கைத்தொழில் மற்றும் பணிகள் துறைகள், வடக்கில் தீவிரமடைந்த போர் அது போல் உலகப் பொருளாதார மந்தநிலை ஏற்பட்டமை என்பவற்றால் மோசமாக பாதிப்படைந்த போதிலும் அனைத்து மூன்று துறைகளும் வளர்ச்சிக்குப் பங்களிப்புச் செய்தன.** இக் காலப்பகுதியில் கைத்தொழில் துறையால் பதிவு செய்யப்பட்ட வளர்ச்சி 2.4 சதவீதமாக விளங்குகையில், பணிகள்துறை 1.1 சதவீதம் கொண்ட மெதுவான வளர்ச்சியைப் பதிவு செய்தது. உன்னதமான பெரும்போக அறுவடை இவ் வளர்ச்சிக்கு கணிசமானளவில் பங்களிப்புச் செய்ததன் மூலம் வேளாண்மைத்துறை 3.7 சதவீத வளர்ச்சியை அறிவித்தது. எனினும், இவ்வாண்டின் முதலரைப்பகுதியில் இத் துறையிலான வளர்ச்சி தேயிலையிலான மோசமான செயலாற்றத்தால் பாதிப்புக்குள்ளானது.

**போர் முடிவுற்றமை மற்றும் உலகப் பொருளாதாரத்திலான படிப்படியான மீட்சியுடன் இவ்வாண்டின் இரண்டாம் அரைப்பகுதியில் கைத்தொழில் மற்றும் பணிகள்துறை இரண்டிலும் மீட்சி காணப்பட்டது.** இவ்வாண்டின் இரண்டாம் அரைப்பகுதியில் கைத்தொழில் துறையிலான வளர்ச்சி 5.9 சதவீதத்திற்கு விரைவடைந்த வேளையில் பணிகள் துறையிலான வளர்ச்சி 5.4 சதவீதத்தை அடைந்தது. இவ்வாண்டின் இரண்டாம் அரைப்பகுதியிலான வளர்ச்சி, மொத்த வளர்ச்சியில் அநேகமாக 63 சதவீதத்திற்கு வகைகூறிய பணிகள் துறையால் பெரும்பாலும் பெறப்பட்டதாகும். எனினும், முதலரைப்பகுதியில் பதிவு செய்யப்பட்ட குறைந்த வளர்ச்சி காரணமாக பணிகள் துறையிலான ஆண்டு வளர்ச்சி முன்னைய ஆண்டில் பதிவு செய்யப்பட்ட 5.6 சதவீத வளர்ச்சியைவிடக் குறைவாக 3.3 சதவீதத்தில் காணப்பட்டது. 2009இல் கைத்தொழில் துறையில் பதிவு செய்யப்பட்ட வளர்ச்சி 4.2 சதவீதமாக விளங்கியதுடன் இது 2008இல் பதிவு செய்யப்பட்ட 5.9 சதவீத வளர்ச்சியை விடவும் குறைவானதாகும். இதேவேளை 2009 சிறுபோகத்தில் நெல் உற்பத்தியிலேற்பட்ட கூர்மையான வீழ்ச்சி இவ்வாண்டின் முதலரைப்பகுதியில் வேளாண்மைத் துறையை 2.6 சதவீதத்தால் வீழ்ச்சியடையச் செய்தது. இதன்படி, இவ்வாண்டில், வேளாண்மைத்துறை 2008இல் பதிவு செய்யப்பட்ட 7.5 சதவீத

அட்டவணை 2.1

**நிலையான (2002) விலைகளில் கைத்தொழில் மூலங்களின்படி மொத்த உள்நாட்டு உற்பத்தியின் துறைவாரியான உள்ளடக்கமும் அதிகரிப்பும்**

| துறை | மாற்ற வீதம் (%) | | மொத்த உள்நாட்டு உற்பத்தி மாற்றங்களுக்கான பங்களிப்பு (%) | | மொத்த உள்நாட்டு உற்பத்தியின் பங்கு (%) | |
|---|---|---|---|---|---|---|
| | 2008(அ) | 2009(ஆ) | 2008(அ) | 2009(ஆ) | 2008(அ) | 2009(ஆ) |
| **வேளாண்மை** | **7.5** | **3.2** | **15.1** | **10.8** | **12.1** | **12.0** |
| 1. வேளாண்மை, கால்நடை வளர்ப்பு மற்றும் காடாக்கல் | 7.3 | 2.8 | 13.2 | 8.5 | 10.9 | 10.9 |
| 1.1 தேயிலை | 4.2 | - 8.9 | 0.8 | - 2.9 | 1.2 | 1.0 |
| 1.2 இறப்பர் | 10.3 | 7.9 | 0.4 | 0.5 | 0.2 | 0.3 |
| 1.3 தெங்கு | 5.2 | 5.2 | 1.2 | 2.0 | 1.4 | 1.4 |
| 1.4 சிறு ஏற்றுமதிப் பயிர்கள் | - 2.1 | 5.2 | - 0.2 | 0.7 | 0.4 | 0.5 |
| 1.5 நெல் | 23.1 | - 5.1 | 6.1 | - 2.7 | 1.8 | 1.7 |
| 1.6 கால்நடை வளர்ப்பு | 5.6 | 6.2 | 0.8 | 1.5 | 0.9 | 0.9 |
| 1.7 ஏனைய உணவுப் பயிர்கள் | 4.7 | 7.0 | 3.0 | 7.5 | 3.8 | 3.9 |
| 1.8 பெருந்தோட்ட அபிவிருத்தி | 3.5 | 5.2 | 0.2 | 0.4 | 0.3 | 0.3 |
| 1.9 விறகு மற்றும் காடாக்கல் | 7.1 | 5.9 | 0.7 | 1.0 | 0.6 | 0.6 |
| 1.10 ஏனைய வேளாண்மைப் பயிர்கள் | 2.1 | 4.9 | 0.1 | 0.5 | 0.4 | 0.4 |
| 2. மீன்பிடி | 9.9 | 6.9 | 1.8 | 2.2 | 1.1 | 1.2 |
| **கைத்தொழில்** | **5.9** | **4.2** | **28.3** | **33.8** | **28.4** | **28.6** |
| 3. சுரங்கமகழ்தலும் கல்லுடைத்தலும் | 12.8 | 8.2 | 4.1 | 4.7 | 2.0 | 2.1 |
| 4. தயாரிப்புத்துறை | 4.9 | 3.3 | 14.6 | 16.3 | 17.5 | 17.4 |
| 4.1 பதனிடுதல் (தேயிலை,இறப்பர்,தெங்கு) | 5.3 | 0.7 | 0.6 | 0.1 | 0.6 | 0.6 |
| 4.2 தொழிற்சாலைக் கைத்தொழில் | 5.0 | 3.4 | 13.3 | 15.2 | 15.8 | 15.8 |
| 4.3 குடிசைக் கைத்தொழில் | 4.5 | 3.3 | 0.8 | 1.0 | 1.1 | 1.1 |
| 5. மின்வலு வாயு மற்றும் நீர் | 2.7 | 3.7 | 1.1 | 2.5 | 2.4 | 2.4 |
| 5.1 மின்வலு | 3.9 | 3.7 | 1.4 | 2.2 | 2.1 | 2.1 |
| 5.2 வாயு | - 10.2 | 5.4 | - 0.3 | 0.3 | 0.2 | 0.2 |
| 5.3 நீர் | 3.6 | 2.9 | 0.1 | 0.1 | 0.1 | 0.1 |
| 6. கட்டடவாக்கம் | 7.8 | 5.6 | 8.4 | 10.3 | 6.5 | 6.6 |
| **பணிகள்** | **5.6** | **3.3** | **56.6** | **55.4** | **59.5** | **59.3** |
| 7. மொத்த மற்றும் சில்லறை வர்த்தகம் | 4.7 | - 0.3 | 19.4 | - 2.1 | 24.2 | 23.3 |
| 7.1 இறக்குமதி வர்த்தகம் | 4.7 | - 6.6 | 7.2 | - 16.8 | 9.0 | 8.1 |
| 7.2 ஏற்றுமதி வர்த்தகம் | 0.9 | - 5.2 | 0.7 | - 6.5 | 4.4 | 4.1 |
| 7.3 உள்நாட்டு வர்த்தகம் | 6.4 | 7.0 | 11.5 | 21.1 | 10.8 | 11.1 |
| 8. உணவகங்களும் விடுதிகளும் | - 5.0 | 13.3 | - 0.3 | 1.4 | 0.4 | 0.4 |
| 9. போக்குவரத்து, மற்றும் தொடர்பூட்டல் | 8.1 | 6.6 | 17.5 | 24.3 | 13.1 | 13.5 |
| 9.1 போக்குவரத்து | 6.3 | 6.0 | 11.5 | 18.5 | 10.9 | 11.1 |
| 9.2 சரக்குக் கையாளல் - துறைமுகங்களும் பயணிகள் வான்போக்குவரத்தும் | 8.0 | 3.4 | 0.9 | 0.6 | 0.7 | 0.7 |
| 9.3 அஞ்சல் மற்றும் தொலைத் தொடர்பூட்டல் | 22.3 | 11.7 | 5.1 | 5.2 | 1.6 | 1.7 |
| 10. வங்கித்தொழில், காப்புறுதி, மற்றும் உண்மைத்துறை, ஏனையவை. | 6.6 | 5.7 | 9.5 | 14.0 | 8.7 | 8.9 |
| 11. வதிவிட சொத்துரிமை | 1.1 | 1.3 | 0.6 | 1.1 | 3.1 | 3.0 |
| 12. அரச பணிகள் | 5.7 | 5.9 | 7.4 | 12.8 | 7.7 | 7.8 |
| 13. தனியார் பணிகள் | 6.5 | 5.8 | 2.6 | 3.9 | 2.4 | 2.4 |
| **மொத்த உள்நாட்டு உற்பத்தி** | **6.0** | **3.5** | **100.0** | **100.0** | **100.0** | **100.0** |
| **வெளிநாட்டிலிருந்தான தேறிய காரணி வருவாய்** | **- 131.2** | **49.7** | | | | |
| **மொத்த தேசிய உற்பத்தி** | **4.6** | **4.8** | | | | |


(அ) திருத்தியமைக்கப்பட்டவை
(ஆ) தற்காலிகமானவை

மூலம் : தொகைமதிப்புப் புள்ளிவிபரத் திணைக்களம்

வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 3.2 சதவீதத்தால் மட்டுமே வளர்ச்சியடைந்தது. இத் துறையின் வளர்ச்சியில் ஏற்பட்ட மெதுவடைவு பெரும்பாலும் இரு முக்கிய பயிர்களான தேயிலை மற்றும் நெல்லின் மோசமான ஒட்டுமொத்தச் செயலாற்றத்தால் ஏற்பட்டது.

**உள்நாட்டு வர்த்தகம், போக்குவரத்து, சரக்கு கையாளல் - துறைமுகங்கள் மற்றும் சிவில் வான் போக்குவரத்து மற்றும் சுற்றுலா விடுதிகள் மற்றும் உணவகங்கள் துணைத் துறைகள் இவ்வாண்டின் இரண்டாம் அரைப்பகுதியில் பணிகள் துறையில் மேம்பட்ட செயலாற்றத்திற்குப் பங்களிப்புச் செய்திருக்கையில் கைத்தொழில் துறையில் அனைத்து முக்கிய துணைத் துறைகளிலான மீட்சி அதன் சிறந்த செயலாற்றத்திற்குப் பங்களிப்புச் செய்தது.** போர் முடிவடைந்தமை மற்றும் வடக்கிலும் கிழக்கிலும் செயற்பாடுகளின் விரிவாக்கத்தால் நன்மையடைந்த பணிகள் துறையிலுள்ள துணைத் துறைகளிடையே உள்நாட்டு வர்த்தகம் மற்றும் போக்குவரத்து காணப்பட்டது. குறைவடைந்து செல்லும் உலகளாவிய மந்தநிலை நிலைமைகள் இவ்வாண்டின் இறுதிக் காலாண்டில் சரக்குக் கையாளல் - துறைமுகங்கள் மற்றும் சிவில் வான் போக்குவரத்து துணைத் துறையை கணிசமானளவில் விரிவடையச் செய்தது. சமாதானம் ஏற்பட்டமையால் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டுச் சுற்றுலாச் செயற்பாடுகளின் விரிவாக்கத்துடன் சுற்றுலா விடுதிகள் மற்றும் உணவகங்கள் துணைத் துறையிலும் வியக்கத்தக்க முன்னேற்றம் காணப்பட்டது. தொழிற்சாலைக் கைத்தொழில் துணைத் துறையால் ஏற்படுத்தப்பட்ட அதிகரித்த ஏற்றுமதிக்

வரைபடம் 2.1 ஆண்டு வளர்ச்சி வீதம்




கேள்வி மற்றும் உணவு மற்றும் குடிபானத் துறையில் ஏற்பட்ட அபரிமித வளர்ச்சியின் சாதகமான பதிலிறுத்தலுடன் தயாரிப்புத் துணைத் துறையிலான வளர்ச்சி மேம்பட்டது. முன்னேற்றமடைந்த ஏற்றுமதிக் கேள்வி இவ்வாண்டின் இரண்டாம் அரைப்பகுதியில் இரத்தினக்கற்கள் அகழ்தல் கைத்தொழிலின் மீட்சிக்கான தூண்டுதலையும் வழங்கியது. இவ்வாண்டில் பல பாரிய கட்டடவாக்கச் செயற்பாடுகள் நடைமுறைப்படுத்தப்பட்டதுடன், கிழக்கில் கட்டடவாக்கச் செயற்பாடுகள் விரைவுபடுத்தப்பட்ட வேளையில் வீடமைப்பு நிர்மாணத்தில் ஏற்பட்ட மெதுவடைவு கட்டடவாக்கத் துணைத் துறையின் வளர்ச்சியை மெதுவடையச் செய்தது.

**2009இல் பணவீக்கத்திலான வீழ்ச்சியுடன் உள்நாட்டுக் கேள்வி உண்மை நியதிகளில் 3.4 சதவீதத்தால் வளர்ச்சியடைந்தது.** இவ் வளர்ச்சி நுகர்வுக் கேள்வியிலான மிதமான வளர்ச்சி மற்றும் முதலீட்டுக் கேள்வியிலான சிறிய வளர்ச்சியிலிருந்து ஏற்பட்டது. ஏற்றுமதிகள் இறக்குமதிகளைக் காட்டிலும் உயர் வீதத்தில் வீழ்ச்சியடைந்ததால் உண்மை வெளிநாட்டுக் கேள்வி வீழ்ச்சியடைந்தது. இதேவேளை போர் முடிவுற்றதைத் தொடர்ந்து செயற்பாடுகள் புத்துயிர் பெற்றதன் மூலம் பங்குச் சந்தை, சுற்றுலாத்துறை மற்றும் உள்நாட்டு வர்த்தகத்திலான வரவேற்கத்தக்க செயலாற்றம் இவ் வளர்ச்சிக்குப் பங்களிப்புச் செய்தது.

**வெளிநாட்டிலிருந்தான தேறிய காரணி வருமானத்துக்காக சீராக்கப்பட்டது என வரைவிலக்கணம் செய்யப்பட்ட மொத்த உள்நாட்டு உற்பத்தியான மொத்தத் தேசிய உற்பத்தி 2008இன் 4.6 சதவீத விரிவாக்கத்துடன் ஒப்பிடுகையில் 2009இல் உண்மை நியதிகளில் 4.8 சதவீதத்தால் விரிவடைந்தது.** சென்மதி நிலுவையின் வருமானக் கணக்கிலான நிலுவைக்குச் சமனான வெளிநாட்டிலிருந்தான தேறிய காரணி வருமானம் 2009இல் குறிப்பிடத்தக்களவில் முன்னேற்றமடைந்தது. பன்னாட்டு வட்டி வீதங்களிலான வீழ்ச்சி வெளிநாட்டுக் கணக்குகள் மீதான வட்டிக் கொடுப்பனவுகள் வீழ்ச்சியடைவதற்கு வழிவகுத்த அதேவேளையில் வெளிநாட்டு ஒதுக்குகளிலான குறிப்பிடத்தக்க அதிகரிப்பு உயர் முதலீட்டு வருமானத்தை உருவாக்கியது. இவற்றின் இணைந்த விளைவு, வெளிநாட்டிலிருந்தான தேறிய காரணி வருமானத்தையும் அதைத் தொடர்ந்து மொத்தத் தேசிய உற்பத்தியையும் மேம்படுத்துவதற்கு வழியமைத்தது.

**2009இல் தலைக்குரிய மொ.உ.உற்பத்தி முன்னைய ஆண்டின் ரூ.218,167 உடன் ஒப்பிடுகையில் ரூ.235,945 ஆக மதிப்பிடப்பட்டு 8 சதவீத அதிகரிப்பைக் கொண்டிருந்ததுடன் பணவீக்கத்தினையும் (3.4 சதவீதம்) விஞ்சியது.** தலைக்குரிய வருமானம் முன்னைய ஆண்டின் ஐ.அ.டொலர் 2,014 உடன் ஒப்பிடுகையில் 2009இல் ஐ.அ.டொலர் 2,053 என்ற மட்டத்தை அடைந்து வாழ்க்கைத் தரங்களில் ஒட்டுமொத்த மேம்பாட்டை எடுத்துக்காட்டுகிறது.

**2009இல் நடைமுறைச் சந்தை விலைகளிலான மொ.உ.உற்பத்தி ரூ.4,825 பில்லியனாக (ஐ.அ.டொ.42 பில்லயன்) மதிப்பிடப்பட்டு பெயரளவு நியதிகளில் 9.4 சதவீதம் கொண்ட அதிகரிப்பைப் பதிவு செய்தது.** மொ.உ.உற்பத்தியிலான இப் பெயரளவு அதிகரிப்பு, மொ.உ.உற்பத்திச் சுருக்கியால் அளவிடப்படும் பொது விலை மட்டத்திலான 5.7 சதவீத அதிகரிப்புடன் இணைந்த 3.5 சதவீதம் கொண்ட உண்மைப் பொருளாதார வளர்ச்சியால் பிரதிபலிக்கப்பட்டது.

**இறக்குமதிப் பொருட்களுக்கான நுகர்வுக் கேள்வியிலான வீழ்ச்சியின் தாக்கத்தைப் பிரதிபலிக்கும் வகையில் உள்நாட்டுச் சேமிப்புகள் 2008இன் 2.8 சதவீத வீழ்ச்சியுடன் ஒப்பிடுகையில் 42.2 சதவீதத்தால் விரிவடைந்து 2009இல் ரூ.870 பில்லியனை அடைந்தது.** நுகர்வு, இடைநிலை மற்றும் முதலீட்டுப் பொருட்களை உள்ளடக்கும் இறக்குமதிகள் மீதான செலவினம் 2008இன் 22.0 சதவீத அதிகரிப்புடன் ஒப்பிடுகையில் 2009இல் 23.1 சதவீதத்தால் வீழ்ச்சியடைந்தது. இதன்படி, உள்நாட்டுச் சேமிப்பு விகிதமும் முன்னைய ஆண்டின் 13.9 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 18.0 சதவீதமாக மதிப்பிடப்பட்டது.

**தேசிய சேமிப்புகள் விகிதம் முன்னேற்றமடைந்த 2008இன் 17.8 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 23.9 சதவீதத்தில் காணப்பட்டது.** இது வெளிநாட்டிலிருந்தான தேறிய காரணி வருமானத்தில் சாதகமான செயலாற்றத்தாலும் பெரும்பாலும் மத்திய கிழக்கிலிருந்தான தொழிலாளர் பணவனுப்பல்களால் உந்தப்பட்டு 2009இல் 21.2 சதவீதத்தால் விரிவடைந்து ஐ.அ.டொலர் 3 பில்லியனை அடைந்த வெளிநாட்டிலிருந்தான தேறிய தனியார் நடைமுறை மாற்றல்களிலான அதிகரிப்பாலும் ஏற்பட்டது.

## 2.2 துறைவாரியான வெளியீடு, கொள்கைகள், நிறுவன ரீதியான உதவி மற்றும் பிரச்சனைகள்

### வேளாண்மை

**வேளாண்மைத்துறை வளர்ச்சி 2008இல் பதிவு செய்யப்பட்ட 7.5 சதவீதம் உயர் வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 2009இல் 3.2 சதவீதத்திற்கு மெதுவடைந்தது.** இம் மெதுவடைவு முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் உற்பத்தியில் சுருக்கத்தைப் பதிவு செய்த தேயிலை மற்றும் நெல் துணைத் துறைகளிலான மோசமான செயலாற்றத்தின் முக்கிய காரணமாக ஏற்பட்டது. ஏற்றுமதி வேளாண்மைத் துறையினுள், இறப்பர் உற்பத்தியிலான வளர்ச்சி, வளர்ச்சிக்கான முக்கிய பங்களிப்பாளராக விளங்கியதுடன் சிறு ஏற்றுமதிப் பயிர்களும் வளர்ச்சியைப் பதிவு செய்தன. குறிப்பாக விடுவிக்கப்பட்ட பிரதேசங்களில் உற்பத்தியில் ஏற்பட்ட அதிகரிப்புடன், மீன் உற்பத்தியும் வேளாண்மைத் துறையில் வளர்ச்சிக்கு சாதகமாக பங்களிப்புச் செய்தது.

## ஏற்றுமதி வேளாண்மை

**2009இல் தேயிலை உற்பத்தி 2008 உடன் ஒப்பிடுகையில் 290 மில்லியன் கிலோகிராம்களுக்கு 9.1 சதவீதத்தால் வீழ்ச்சியடைந்தது.** குறிப்பாக 2009இன் முதலாம் காலாண்டில் தேயிலை பயிரிடப்படும் சகல மாவட்டங்களிலும் நிலவிய உலர் வானிலை நிலைமைகள் வீழ்ச்சிக்குப் பெருமளவு காரணமாக விளங்கின. 2008இன் இறுதிக் காலாண்டில் உலகளாவிய நெருக்கடி காரணமாக ஏற்பட்ட தாழ்ந்த விலைகள் 2009இன் முதலிரு மாதங்களிலும் கைத்தொழிலைத் தொடர்ந்து பாதித்தது. நெருக்கடிக் காலப்பகுதியில் தேயிலைச் செடிகளைக் கத்தரித்தல் போன்ற தேயிலை பயிர்செய்வோரால் பின்பற்றப்பட்ட சில வழிமுறைகளும் உற்பத்தியிலான வீழ்ச்சிக்குக் காரணமாகியது. இதனால் 2009இன் முதலாம் காலாண்டில் தேயிலை உற்பத்தி 42 சதவீதத்தால் கணிசமானளவில் வீழ்ச்சியடைந்த போதிலும் 2009இன் இறுதிக் காலாண்டில் 2008இன் தொடர்பான காலப்பகுதியுடன் ஒப்பிடுகையில் 17 சதவீதம் கொண்ட சாதகமான வளர்ச்சிக்குத் திரும்பியது. இதற்கு இரண்டாம் காலாண்டிலிருந்து நிலவிய சாதகமான வானிலை நிலைமை, குறிப்பாக இரண்டாம் காலாண்டிலிருந்து விலைகளிலான உறுதியான அதிகரிப்புடன் சேர்ந்து தேயிலைக்கான முன்னேற்றமடைந்த உலகக் கேள்வி, கைத்தொழிலைப் பாதுகாப்பதற்கு அரசு மற்றும் ஆர்வலர்களால் பின்பற்றப்பட்ட வழிமுறைகளின் விளைவு என்பன காரணமாகின. இதேவேளை, இவ்வாண்டின் பிற்பகுதியில் சட்டப்படி வேலை போன்ற பெருந்தோட்டத் தொழிலாளர்களின் வேலை நிறுத்தல்கள் வளர்ச்சி உத்வேகத்தை ஓரளவிற்கு மெதுவடையச் செய்தது. 2009இல் தேயிலை உற்பத்தியிலான வீழ்ச்சி இலங்கையில் மட்டுமன்றி 2008 உடன் ஒப்பிடுகையில் உலகத் தேயிலை உற்பத்தியில் 2.2 சதவீத வீழ்ச்சியை ஏற்படுத்திய தேயிலை உற்பத்தி செய்யும் ஏனைய பல நாடுகளிலும் உணரப்பட்டது.

**2009இல் இலங்கையின் நூற்றாண்டுகளைக் கொண்ட கைத்தொழிலில் கொழும்பு தேயிலை ஏலங்களில் முன்னெப்போது இல்லாத உச்ச விலைகள் பதியப்பட்டன.** 2009இல் கொழும்பு தேயிலை ஏலத்தில் அனைத்துத் தேயிலை விலைகளின் ஆண்டுச் சராசரி 2008இன் கிலோக்கிறாமொன்றுக்கான ரூ.302 இலிருந்து கிலோக்கிறாமொன்றிற்கு ரூ.360 இற்கு அதிகரித்திருக்கையில் சராசரி ஏற்றுமதி விலை கிலோக்கிறாமொன்றுக்கு ரூ.470 இற்கு 9.3 சதவீதத்தால் அதிகரித்தது. தேயிலை விலைகளில் ஏற்பட்ட வியக்கத்தக்க அதிகரிப்பு பெரும்பாலும் உள்நாட்டிலும் அது போல் உலகச் சந்தைகளிலும் கறுப்பு தேயிலையில் (மரபு ரீதியான மற்றும் வெட்டிக் கிழித்து சுருட்டப்பட்ட தேயிலை) ஏற்பட்ட கணிசமான உற்பத்திப் பற்றாக்குறைகளால் ஏற்பட்டது.

**அட்டவணை 2.2 — வேளாண்மை உற்பத்திச் சுட்டெண் (1997-2000 =100)**

| விடயம் | 2008(அ) | 2009(ஆ) | மாற்றம் (%) 2008/09 |
|---|---|---|---|
| **வேளாண்மை, மீன்பிடி** | **124.0** | **121.9** | **-1.7** |
| 1 வேளாண்மை | 125.1 | 121.5 | -2.9 |
| 1.1 வேளாண்மை பயிர்கள் | 123.2 | 118.7 | 3.7 |
| தேயிலை | 111.0 | 100.9 | -9.1 |
| இறப்பர் | 134.0 | 141.9 | 5.9 |
| தெங்கு | 104.8 | 99.5 | -5.1 |
| நெல் | 145.4 | 137.0 | -5.8 |
| ஏனைய பயிர்கள் | 123.7 | 132.6 | 7.2 |
| 1.2 கால்நடை வளர்ப்பு | 142.4 | 146.6 | 2.9 |
| 2 மீன்பிடி | 116.9 | 124.4 | 6.5 |

(அ) திருத்தியமைக்கப்பட்டவை
(ஆ) தற்காலிகமானவை

மூலம்: இலங்கை மத்திய வங்கி

**அட்டவணை 2.3 — முதன்மை வேளாண்மைப் பயிர்களின் போக்குகள்**

| வகை | அலகு | 2008(அ) | 2009(ஆ) |
|---|---|---|---|
| **1. தேயிலை** | | | |
| 1.1 உற்பத்தி (இ) | மில் கி.கி | 318.7 | 289.8 |
| 1.2 மொத்த நிலப்பரப்பு | '000 எக்டேயர்கள் | 222 | 222 |
| 1.3 பயிரிடப்பட்ட நிலப்பரப்பு | '000 எக்டேயர்கள் | 193 | 193 |
| 1.4 உற்பத்திச் செலவு (ஈ) | ரூபா/கி.கி | 262.60 | 269.00 |
| 1.5 சராசரி விலை | | | |
| - கொழும்பு ஏலம் | ரூபா/கி.கி | 301.63 | 360.85 |
| - ஏற்றுமதிகள் (க.ஏ.பெ) | ரூபா/கி.கி | 430.40 | 470.11 |
| 1.6 மீள்நடுகை | எக்டேயர்கள் | 1,385 | 1,081 |
| 1.7 புதிய பயிரிடுகை | எக்டேயர்கள் | 11 | 12 |
| 1.8 மொ.உ.உ.இன் சதவீதமாக கூட்டப்பட்ட பெறுமதி (உ) | | 1.6 | 1.7 |
| **2. இறப்பர்** | | | |
| 2.1 உற்பத்தி | மில் கி.கி | 129.2 | 136.9 |
| 2.2 மொத்த நிலப்பரப்பு (ஊ) | '000 எக்டேயர்கள் | 122 | 124 |
| 2.3 பாலெடுக்கப்பட்ட நிலப்பரப்பு (ஊ) | '000எக்டேயர்கள் | 94 | 95 |
| 2.4 உற்பத்திச் செலவு | ரூபா/கி.கி | 114.00 | 115.50 |
| 2.5 சராசரி விலை | | | |
| - கொழும்பு ஏலம் (ஆர்எஸ்எஸ்1) | ரூபா/கி.கி | 269.51 | 211.65 |
| - ஏற்றுமதி (க.ஏ.பெ) | ரூபா/கி.கி | 278.20 | 202.23 |
| 2.6 மீள்நடுகை (எ) | எக்டேயர்கள் | 6,105 | 1,002 |
| 2.7 புதிய பயிரிடுகை (எ) | எக்டேயர்கள் | 2,436 | 1,156 |
| 2.8 மொ.உ.உவின் சதவீதமாக கூட்டப்பட்ட பெறுமதி (உ) | | 0.8 | 0.5 |
| **3. தெங்கு** | | | |
| 3.1 உற்பத்தி | மில் காய்கள் | 2,909 | 2,762 |
| 3.2 மொத்த நிலப்பரப்பு | '000 எக்டேயர்கள் | 363 | 363 |
| 3.3 உற்பத்திச் செலவு | காய்க்கு ரூபா | 12.47 | 9.10 |
| 3.4 சராசரி விலை | | | |
| - உற்பத்தியாளர் விலை | காய்க்கு ரூபா | 22.71 | 18.36 |
| - ஏற்றுமதி (க.ஏ.பெ) (ஏ) | காய்க்கு ரூபா | 24.77 | 18.23 |
| 3.5 மீள்நடுகை / கீழ்பயிரிடுகை (ஐ) | எக்டேயர்கள் | 2,468 | 3,020 |
| 3.6 புதிய பயிரிடுகை (ஐ) | எக்டேயர்கள் | 3,682 | 3,945 |
| 3.7 மொஉ.உ.வின் சதவீதமாக கூட்டப்பட்ட பெறுமதி (உ) | | 1.8 | 1.3 |

(அ) திருத்தப்பட்டவை
(ஆ) தற்காலிகமானவை
(இ) பச்சைத் தேயிலை உட்பட
(ஈ) பச்சைத் தேயிலை வழங்குனர்களின் இலாபம் உட்பட
(உ) வளர்த்தல் மற்றும் பதனிடுதல் மட்டும்
(ஊ) தொகை மதிப்புப் புள்ளிவிபரத் திணைக்களம் மற்றும் இறப்பர் அபிவிருத்தித் திணைக்களத்தால் 2003இல் நடாத்தப்பட்ட இறப்பரின் நிலப்பரப்பு அளவீட்டை அடிப்படையாகக் கொண்டது.
(எ) இறப்பர் அபிவிருத்தித்தித் திணைக்களத்தின் பயிர்செய்கைஉதவித் திட்டத்தினுள் உள்ளடக்கப்பட்ட நிலப்பரப்பு.
(ஏ) மூன்று முக்கிய தெங்கு உள்ளீட்டு உற்பத்திகள் மட்டும்.
(ஐ) தெங்குப் பயிர்ச்செய்கைச் சபையின் பயர்ச்செய்கை உதவித் திட்டங்களில் உள்ளடக்கப்பட்ட நிலப்பரப்பு.

மூலங்கள்: இலங்கைத் தேயிலைச்சபை
தேயிலை சிறு உடைமையாளர் அபிவிருத்தி அதிகார சபை
தொகை மதிப்பு புள்ளிவிபரத் திணைக்களம்
இறப்பர் அபிவிருத்தி திணைக்களம்
தெங்குப் பயர்ச்செய்கைச் சபை
தெங்கு அபிவிருத்தி அதிகார சபை
பெருந்தோட்டக் கம்பனிகள்
இலங்கைச் சுங்கம்
இலங்கை மத்திய வங்கி

**2009இல் இறப்பர் உற்பத்தி 5.9 சதவீதம் கொண்ட மிதமான அதிகரிப்பைப் பதிவு செய்தது.** 2009இல் இறப்பர் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் எக்டேயருக்கு 1,437 கிலோகிராம்களாக விளங்கி 4 சதவீதத்தினால் அதிகரித்தது. குறைவடைந்த உலகளாவிய கேள்வி காரணமாக இவ்வாண்டின் முதல் அரைப்பகுதியிலான குறைந்த விலைகள் இறப்பர் உற்பத்தியில் தாக்கத்தைக் கொண்டிருந்தன. விலைகளில் ஏற்பட்ட வீழ்ச்சியும் வளமாக்கியில் குறைந்த பாவனையை ஏற்படுத்தியது. இதேவேளை, மசகெண்ணெய் விலைகளில் ஏற்பட்ட வீழ்ச்சி செயற்கை இறப்பரின் விலையைக் குறைத்ததுடன் இறப்பரை அடிப்படையாகக் கொண்ட தொழிற்சாலைகளில் அதன் பாவனையை ஊக்குவித்தது. இருப்பினும், 2009இன் இரண்டாம் அரைப்பகுதியில் இறப்பர்

உற்பத்தி 2008இன் தொடர்பான காலப்பகுதியுடன் ஒப்பிடுகையில் 8.7 சதவீதம் கொண்ட உயர் வளர்ச்சியைப் பதிவு செய்தது. குறிப்பாக இவ்வாண்டின் இறுதியில் உலகளாவிய பொருளாதார மீட்சி மற்றும் மசகெண்ணெய் விலைகளிலான படிப்படியான அதிகரிப்புடன் இயற்கை இறப்பரின் விலைகள் படிப்படியாக அதிகரித்தன. தாய்லாந்து, மலேசியா மற்றும் இந்தோனேசியா போன்ற இறப்பர் உற்பத்தி செய்யும் பிரதான நாடுகளில் ஏற்பட்ட சாதகமற்ற வானிலை நிலைமைகள் உலக வழங்கலின் பற்றாக்குறைக்கு இட்டுச் சென்றதுடன் இவ்வாண்டின் இறுதியில் இயற்கை இறப்பர் விலைகளில் அதிகரிப்பையும் ஏற்படுத்தின.

**இறப்பரின் சகல வகைகளினதும் விலைகள் இவ்வாண்டில் பெருமளவில் தளம்பலுற்றதுடன் கிறேப் இறப்பர் வகைகள் கூடிய அளவிலான தளம்பலைக் காட்டின.** ஆர்எஸ்எஸ் 1 மற்றும் ஆர்எஸ்எஸ் 2 இன் சராசரி விலைகள் 2009இன் முதலாம் காலாண்டுடன் ஒப்பிடுகையில் நான்காம் காலாண்டில் முறையே கிலோக்கிறாம் ஒன்றுக்கு ரூ.286 இற்கு 97 சதவீதத்தாலும், ரூ.278 இற்கு 95 சதவீதத்தாலும் அதிகரித்தன. கிறேப் இறப்பர் வகைகளின் சராசரி விலைகள்; லேற்றெக்ஸ் கிறேப் மற்றும் கிறேப் இல. 1 என்பனவும் இவ்வாண்டின் முதலாம் காலாண்டுடன் ஒப்பிடுகையில் நான்காம் காலாண்டில் முறையே கிலோக்கிறாமொன்றிற்கு ரூ.318 இற்கு 127 சதவீதத்தாலும் ரூ.315 இற்கு 128 சதவீதத்தாலும் அதிகரித்தன.

**2009இன் முதலரைப்பகுதியில் கவர்ச்சிகரமான செயலாற்றத்தைக் காட்டிய தெங்கு உற்பத்தி இரண்டாம் அரைப்பகுதியில் 5 சதவீத வீழ்ச்சியைப் பதிவு செய்து வீழ்ச்சியடைந்தது.** சாதகமற்ற வானிலை நிலைமைகளின் காலந்தாழ்த்திய விளைவு, அதாவது 2008இன் இரண்டாம் அரைப்பகுதியில் தெங்கு பயிரிடும் முக்கிய பிரதேசங்களிலான குறைந்த மழை வீழ்ச்சி மற்றும் உயர் வெப்பநிலை மற்றும் இதே காலப்பகுதியில் குறைந்த வளமாக்கிப் பயன்பாடு போன்ற இணைந்த காரணிகள் 2009இன் இரண்டாம் அரைப்பகுதியில் உற்பத்தியில் பெருமளவு வீழ்ச்சியை ஏற்படுத்தின. 2009இன் முதலரைப்பகுதியில் தெங்கு உற்பத்தி 2008இன் தொடர்பான காலப்பகுதியுடன் ஒப்பிடுகையில் பெரும்பாலும் சாதகமான வானிலையின் காலம் தாழ்த்திய விளைவால் 18.3 சதவீதத்தால் வளர்ச்சியடைந்தது. இருப்பினும், 2009 ஏப்பிரலிலிருந்து தாவர எண்ணெய் மீதான இறக்குமதித் தீர்வைகளில் மேற்கொள்ளப்பட்ட கூடிய அதிகரிப்பால் உதவப்பட்டு தேங்காய் எண்ணெயின் உற்பத்தி 75,490 மெ.தொன்களுக்கு (598 மில்லியனுக்குச் சமனான காய்களுக்கு) 28 சதவீதத்தால் அதிகரித்தது. இந் நிலைமை தேங்காய் எண்ணெய் கைத்தொழிலை புதுப்பித்ததுடன் பல தெங்கு ஆலைகள் இவ்வாண்டில் மீளத் தொழிற்பட ஆரம்பித்தன. இது தென்னை வளர்ப்போர் உலர்த்திய தேங்காய் மற்றும் தேங்காய் எண்ணெய்க் கைத்தொழிலை ஊக்குவித்ததுடன் ஆண்டிறுதியில் உடன் காய்களின் உற்பத்தியாளர் விலைகளிலான அதிகரிப்புடன் பண்ணைமட்ட வருமானத்தை அதிகரிப்பதற்கும் பங்களிப்புச் செய்தது. நாட்டில் தேங்காய் எண்ணெய் கைத்தொழிலை மேலும் அதிகரிக்கும் பொருட்டு உலர்த்திய தேங்காயின் தரத்தை மேம்படுத்தல், தற்போதைய பொறிகளின் இயலளவை அதிகரித்தல், எண்ணெய் பிரித்தெடுப்புக்காக தரமான சீவலைப் பயன்படுத்தல், எண்ணெய் பிரித்தெடுப்பதற்கு தேங்காய் எச்சங்களின் பயன்பாட்டை அதிகரித்தல் உள்ளிட்ட பல துறைகளில் சிறப்புக் கவனம் செலுத்துதல் முக்கியமானதாகும்.

**கறுவா, கராம்பு மற்றும் மிளகு போன்ற ஏனைய ஏற்றுமதி வேளாண்மை பயிர்களின் உற்பத்தி 2009இல் கலப்பான செயலாற்றங்களைக் காட்டியது.** கறுவா மற்றும் கொக்கோவின் உற்பத்தி அதிகரித்த ஏற்றுமதி விலைகளுடன் சேர்ந்து முன்னேற்றமடைந்த ஏற்றுமதிக் கேள்வியின் முக்கிய காரணத்தால் முறையே 5 சதவீதத்தாலும் 45 சதவீதத்தாலும் அதிகரித்தது. இவ்வாண்டில், மிளகு, ஏலக்காய், கோப்பி, கராம்பு என்பவற்றின் உற்பத்தி முறையே 5 சதவீதத்தாலும் 10 சதவீதத்தாலும் 21 சதவீதத்தாலும் 63 சதவீதத்தாலும் வீழ்ச்சியடைந்தன. மிளகு உற்பத்தியில் ஏற்பட்ட வீழ்ச்சி பெரும்பாலும் பலத்த மற்றும் தொடர்ச்சியான மழை வீழ்ச்சி காரணமாக கண்டி மற்றும் மாத்தளை மாவட்டங்களில் மிளகின் பிரதான அறுவடை காலப்பகுதியான யூலையிலிருந்து ஓகத்து வரையிலான மோசமான உற்பத்தியாலும் அது போல் இவ்வாண்டில் ஏற்றுமதி விலைகளில் ஏற்பட்ட கணிசமான வீழ்ச்சியாலும் ஏற்பட்டது.

**அட்டவணை 2.4** **நெல்துறை மீதான புள்ளி விபரங்கள்**

| விடயம் | அலகு | 2008(அ) | | | 2009(ஆ) | | |
|---|---|---|---|---|---|---|---|
| | | பெரும்போகம் | சிறுபோகம் | மொத்தம் | பெரும்போகம் | சிறுபோகம் | மொத்தம் |
| விதைக்கப்பட்ட மொத்த நிலப்பரப்பு | '000 எக்டேயர்கள் | 582 | 471 | 1,053 | 632 | 345 | 978 |
| அறுவடை செய்யப்பட்ட மொத்த நிலப்பரப்பு | '000 எக்டேயர்கள் | 568 | 465 | 1033 | 605 | 338 | 943 |
| அறுவடை செய்யப்பட்ட தேறிய நிலப்பரப்பு | '000 எக்டேயர்கள் | 508 | 417 | 925 | 539 | 303 | 842 |
| உற்பத்தி | '000 மெ.தொ | 2,125 | 1,750 | 3,875 | 2,384 | 1,268 | 3,652 |
| | '000 புசல்கள் | 101,850 | 83,871 | 185,721 | 114,254 | 60,755 | 175,009 |
| விளைச்சல் **(இ)** | கி.கி/ எக்டேயர்கள் | 4,181 | 4,195 | 4,187 | 4,421 | 4,187 | 4,336 |
| வழங்கப்பட்ட கொடுகடன் | ரூ.மில்லியன். | 788 | 816 | 1,605 | 1,161 | 685 | 1,8 47 |
| அரிசி இறக்குமதிகள் | '000 மெ.தொ | - | - | 84 | - | - | 52 |
| நெல்லிற்குச்சமனான இறக்குமதிகள் | '000 மெ.தொ | - | - | 124 | - | - | 77 |

(அ) திருத்தியமைக்கப்பட்டவை
(ஆ) தற்காலிகமானவை
(இ) பெரும்போக, சிறுபோகத்திற்கான எக்டேயர் ஒன்றின் விளைவு பயிர் அறுவடை அளவீடுகளின் அடிப்படையில் அமைந்த தொகைமதிப்புப் புள்ளிவிபரத் திணைக்களத்திலிருந்து பெற்ற தரவுகளைக் கொண்டு கணக்கிடப்படுகின்றது அதே வேளையில் மொத்த உற்பத்தியை அறுவடை செய்யப்பட்ட தேறிய நிலப்பரப்பால் பிரிப்பதன்மூலம் மொத்த விளைவு கணக்கிடப்படுகின்றது.

மூலங்கள்: தொகைமதிப்புப் புள்ளிவிபரத் திணைக்களம்
இலங்கைச் சுங்கம்
இலங்கை மத்திய வங்கி

2008ஆம் ஆண்டு பொதுவாக ஒவ்வொரு நாலு வருடங்களுக்கொரு முறை வரும் கராம்பு உற்பத்தியின் செழிப்பான அறுவடையைக் கொண்டிருந்தது. எனவே, செழிப்பான அறுவடையைப் பின் தொடர்ந்து வந்த ஆண்டில் கராம்பு உற்பத்தியில் ஏற்பட்ட வீழ்ச்சி பயிரின் வாழ்க்கைச் சுற்றோட்டத்தால் கூடியளவில் நிகழ்ந்தது என்பதனை விளங்கிக் கொள்ளலாம்.


### உள்நாட்டு வேளாண்மை

**2009இல் மொத்த நெல் உற்பத்தி 2008இன் முன்னெப் போதுமில்லாத உச்ச உற்பத்தியான 3.87 மில்லியன் மெற்றிக் தொன்களுடன் ஒப்பிடுகையில் 3.65 மில்லியன் மெற்றிக் தொன்களுக்கு 5.8 சதவீதத்தால் வீழ்ச்சியடைந்தது.** 2008இன் சிறுபோகத்திலான முன்னெப்போதுமில்லாத 51 சதவீதம் கொண்ட உச்ச வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் இவ்வாண்டு சிறுபோகத்தில் நெல் உற்பத்தியில் ஏற்பட்ட 27.6 சதவீத வீழ்ச்சி 2009இல் இவ் ஒட்டுமொத்த வீழ்ச்சிக்கு முக்கிய காரணமாக விளங்கியது. இது பெரும்பாலும் பருவமழை பெய்யத் தாமதித்தனைத் தொடர்ந்து இதனால் பயிர்ச்செய்கைக்கான நீரை விடுவிப்பதில் ஏற்பட்ட தாமதத்தாலும் பயிர்ச்செய்கைக்குப் போதுமான நீர் இல்லாமையால் ஏற்பட்டது. இருப்பினும், அதிகரித்த பயிர்ச்செய்கைப் பரப்பளவு, இப் பருவ காலத்தில் சாதகமான வானிலையால் உதவப்பட்ட அதிகரித்த உற்பத்தித்திறன் காரணமாக 2008/ 2009 பெரும்போகத்தில் நெல் உற்பத்தி முன்னைய பெரும்போகத்திலிருந்து கிட்டத்தட்ட 2.4 மில்லியன் மெற்றிக்தொன்களுக்கு 12.2 சதவீதத்தால் அதிகரித்தது.

**ஏனைய களப் பயிர்களின் உற்பத்தி இவ்வாண்டில் கலப்பான செயலாற்றத்தைக் காட்டியது.** சோளத்தின் உற்பத்தியாளர் விலைகளும் அதிகரித்தமையால் அதிகரித்த உளளூர் நுகர்வும் 2009இல் சோளம் உற்பத்தி 2008 உடன் ஒப்பிடுகையில் 129,800 மெற்றிக்தொன்களுக்கு கிட்டத்தட்ட 15 சதவீதத்தால் அதிகரித்தது. இவ்வாண்டில் உளளூர் உற்பத்தியாளர்களைப் பாதுகாப்பதற்காக சோளம் மீதான இறக்குமதி வரி அதிகரித்தல், 2009 மார்ச்சில் இறக்குமதி தடைசெய்யப்பட்டமை ஆகிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. 2009இல் உருளைக்கிழங்கு உற்பத்தி 18 சதவீதத்தினால் குறைவடைந்து 61,700 மெ.தொன்களாகவும், மிளகாய் உற்பத்தி 9 சதவீதத்தினால் குறைவடைந்து 46,400 மெ.தொன்களாகவுமிருந்தது. உருளைக்கிழங்கு உற்பத்தியிலான

வரைபடம் 2.2

அரிசி : நிரம்பலும் கேள்வியும்




அட்டவணை 2.5

**கால்நடை வளர்ப்புத்துறை புள்ளி விபரங்கள்**

| துணைத்துறை | 2008(அ) | 2009(ஆ) |
|---|---|---|
| 1. தேசிய விலங்குத் தொகுதி (எண்ணிக்கை) (மில்) | 1.5 | 1.4 |
| கறவைப் பசுக்கள் | 1.2 | 1.1 |
| எருமைகள் | 0.3 | 0.3 |
| 2. தேசிய பால் உற்பத்தி (மில். லீற்றர்கள்) | 208.1 | 233.4 |
| பசும்பால் | 172.4 | 184.1 |
| எருமைப்பால் | 35.7 | 49.3 |
| 3. பால் உற்பத்திகள் (மில். லீற்றர்கள்) | 13.5 | 23.3 |
| 4. உற்பத்தியாளர் விலை - பசும்பால் (ரூ./லீற்றர்) | 29.53 | 29.53 |
| 5. தேசிய முட்டை உற்பத்தி (எண்ணிக்கை) (மில்) | 1,039.8 | 1,142.2 |
| 6. தேசிய கோழி இறைச்சி உற்பத்தி ('000 மெ.தொ) | 101.5 | 99.28 |

(அ) திருத்தியமைக்கப்பட்டவை
(ஆ) தற்காலிகமானவை

மூலம் : கால்நடைவளர்ப்பு அபிவிருத்தி அமைச்சு

வீழ்ச்சி சாதகமற்ற காலநிலைமைகளால் ஏற்பட்டிருக்கையில் மிளகாய் உற்பத்தியிலான வீழ்ச்சி பெரும்போகத்தில் குறைவான மழைவீழ்ச்சி காரணமாக ஏற்பட்ட தாமதமான அறுவடையினால் ஏற்பட்டுள்ளது.

**2009இல் சீனி உற்பத்தி 31,608 மெற்றிக் தொன்களுக்கு 20 சதவீதத்தால் வீழ்ச்சியடைந்தது.** உற்பத்தியிலான வீழ்ச்சி குறிப்பாக முழுமையாக மழைநீரால் கரும்பு பயிர் செய்யப்படும் பெலவத்தையில் நிலவிய வரட்சியால் ஏற்பட்ட குறைந்தளவு கரும்பு வழங்கலால் ஏற்பட்டது. கரும்பு பயிரிடப்பட்ட நிலப்பரப்பும் வேளாண்மையாளர்கள் வாழை, சோளம், சோயா அவரை மற்றும் நெல் போன்ற ஏனைய குறுகிய காலப்பயிர்களுக்கு நகர்ந்ததன் காரணமாக வீழ்ச்சியடைந்தது. சீனி உற்பத்தியை அதிகரிக்கும் பொருட்டு வேளாண்மையாளர்களை ஈர்ப்பதற்கு கரும்புக்கு நியாயமான உற்பத்தியாளர் விலையை உறுதிப்படுத்துவது அவசியமாகும். அதேவேளை கிங்குரான மற்றும் கந்தளாயில் உள்ள செயலிழந்த சீனித் தொழிற்சாலைகளை மீள ஆரம்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியதுடன் தேசிய சீனி உற்பத்தியை அதிகரிப்பதற்கு திட்டமிடப்பட்ட ஏனைய தொழிற்சாலைகளை ஆரம்பிக்க வேண்டும். இதேவேளை, சீனி ஆராய்ச்சி நிறுவனம் உள்நாட்டில் இனப்பெருக்கம் செய்யப்பட்ட கரும்பு வகைகள், நான்கை வர்த்தகப் பயிர்ச்செய்கைக்காக இவ்வாண்டில் அறிமுகப்படுத்தியது.

**மொத்தப் பால் உற்பத்தி 2009இல் 233 மில்லியன் லீற்றர்களுக்கு 12.1 சதவீதத்தால் அதிகரித்தது.** இவ் வளர்ச்சி உயர் விலைகளாலும் பாற்பண்ணைத் தொழிலை விரிவாக்குவதற்கு நடைமுறைப்படுத்தப்பட்ட ஏனைய வழிமுறைகளாலும் உதவப்பட்டது. 2009இல் அதிகரித்த பால் உற்பத்தி சுத்தமான பசுப் பால் 184 மில்லியன் லீற்றரையும் (7 சதவீத வளர்ச்சி) எருமைப் பால் 49.3 மில்லியன் லீற்றரையும் (38 சதவீதம்) கொண்டிருந்தது. இதன்படி, 2005இன் 15 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 2009இல் நாட்டின் மொத்தப் பால் தேவையில் உள்நாட்டில் வழங்கப்பட்ட அளவு (தலைக்குரிய நுகர்வு நாளொன்றுக்கு 110 மில்லி லீற்றர்) 28 சதவீதமாக மதிப்பிடப்பட்டுள்ளது. பால் உற்பத்திகளும் இவ்வாண்டில் கணிசமான முன்னெற்றத்தைக் காட்டின. யோக்கட் உற்பத்தி 73 சதவீதத்தாலும் தயிர் உற்பத்தி 28 சதவீதத்தாலும் அதிகரித்தன. இவ்வாண்டின் மில்கோ அம்பேவல, கொழும்பு, திகன மற்றும்

பொலனறுவையில் உள்ள அவற்றின் தொழிற்சாலைகளின் புனரமைப்பை ஆரம்பித்ததுடன் நாடளாவிய பால் சேகரிப்பு வலையமைப்பையும் பலப்படுத்தியது.

**2009இல், கோழி இறைச்சி உற்பத்தி 3 சதவீதத்தால் வீழ்ச்சியடைந்த வேளையில் முட்டை உற்பத்தி ஏறத்தாழ 10 சதவீதத்தால் அதிகரித்தது.** 2008இல் தாய்க் கோழிகளின் வழங்களின் ஏற்பட்ட வீழ்ச்சியால் ஒரு நாள் கோழிக்குஞ்சின் உற்பத்தியில் ஏற்பட்ட வீழ்ச்சி மற்றும் கோழிப் பண்ணைகளிலிருந்து அறிவிக்கப்பட்ட சுகாதாரம் தொடர்பான பிரச்சனைகள், தீனிகளின் உயர்ந்தளவிலான விலைகள் கோழி இறைச்சி மற்றும் முட்டை உற்பத்தியில் ஏற்பட்ட இப் பற்றாக்குறைக்கு பங்களிப்புச் செய்தன. மேலும் ஆண்டிறுதியில் ஒரு நாள் கோழிக்குஞ்சின் வழங்களில் ஏற்பட்ட வீழ்ச்சி, முட்டைக்கான கேள்வி அதிகரிப்பால் அதன் விலைகளில் ஏற்பட்ட ஒப்பீட்டளவிலான உயர்வு ஆகியன உசிதமான முட்டையிடும் காலத்திற்குப் பின்னரும் முட்டையிடும் கோழிகளை முட்டை உற்பத்திக்கு பயன்படுத்த வேண்டிய தேவையை கோழிப்பண்ணையாளர்களுக்கு ஏற்படுத்தியது. 2009இல் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் அதிகரித்த உற்பத்தியும், முட்டை உற்பத்தி அதிகரிப்பிற்கு ஓரளவிற்கு பங்களிப்புச் செய்தது.

### மீன்பிடி

**ஆண்டு மீன் உற்பத்தி 2009இல் 339,730 மெற்றிக்தொன்களுக்கு 6.5 சதவீதத்தால் அதிகரித்தது.** ஆழ்கடல் மீன் உற்பத்தி 6.8 சதவீதத்தால் வளர்ச்சியடைந்திருக்கையில் நன்னீர் மீன் உற்பத்தி 4.7 சதவீதத்தாலும் வளர்ச்சியடைந்தது. ஆழ்கடல் துறையிலான வளர்ச்சி பெரும்பாலும் இவ்வாண்டில் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் மீன்பிடி மீதான கட்டுப்பாடுகள் தளர்த்தப்பட்டமை மற்றும் கிழக்கு மாகாணத்தில் மீன்பிடியாளர்களின் புனரமைப்பு செயற்றிட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டமையாலும் 2009இல் 9.1 சதவீதத்தால் வளர்ச்சியடைந்தமைக்கு கரையோர மீன்பிடியே தூண்டுதலாக இருந்தது. எனினும், கரைகடந்த ஆழ்கடல் மீன் உற்பத்தி 3.2 சதவீதத்தால் சிறிதளவிலேயே அதிகரித்தது. வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களிலிருந்தான அதிகரித்த மீன் வழங்கலும் இவ்வாண்டில் ஆழ்கடல் மீன் விலைகளிலான குறைந்த தளம்பலுக்கு காரணமாகியது. நன்னீர் மீன் உற்பத்தியில் ஏற்பட்ட சிறு அதிகரிப்பு நீர்த்தேக்க மீன் உற்பத்தியில் ஏற்பட்ட 5 சதவீத அதிகரிப்பினதும் இறால் பண்ணையிலான 60 சதவீத அதிகரிப்பினதும் நன்னீர் மீன்வளர்ப்பு உற்பத்தியில் ஏற்பட்ட 22 சதவீத வீழ்ச்சியினதும் இணைந்த விளைவாகும். நன்னீர் மீன் உற்பத்தியிலான மோசமான செயலாற்றம் பெரும்பாலும் உலர்ந்த வானிலை நிலைமைகளால் ஏற்பட்டது. எனினும், இறால் பண்ணைக் கைத்தொழில் முன்னைய ஆண்டில் இறால் கைத்தொழிலைப் பாதித்த வெள்ளைப் புள்ளி நோயிலிருந்து மீட்சியடைந்தது.

**அட்டவணை 2.6 — மீன் உற்பத்தி**

'000 மெற்றிக்தொன்கள்

| துணைத்துறை | 2008(அ) | 2009(ஆ) |
|---|---|---|
| கடல் (இ) | 275 | 293 |
| பண்ணை மீன் வளர்ப்பும் நன்னீர் மீன்பிடியும் | 44 | 47 |
| மொத்தம் | 319 | 340 |

(அ) திருத்தியமைக்கப்பட்டவை
(ஆ) தற்காலிகமானவை
(இ) கரையோர மற்றும் ஆழ்கடல் துறை

மூலம் : கடற்றொழில் நீர்வாழ் மூலவளங்கள் அமைச்சு

### காடாக்கல்

**காடாக்கல் திணைக்களம் சமூகப் பங்கேற்பினூடாக மரங்களின் எண்ணிக்கையை அதிகரிப்பதற்கு பங்கேற்கும் காடாக்கல் நிகழ்ச்சித்திட்டத்தை நடைமுறைப்படுத்தியது.** காடுகளை அபிவிருத்தி செய்வதற்காக சமூகத்தின் பங்கேற்புடனான நிகழ்ச்சித்திட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்கு ஆர்வலர்களுடன் உடன்படிக்கையில் கைச்சாத்திடுவதற்கு காடுகள் பாதுகாப்பு ஆணையாளருக்கு அதிகாரமளிக்கும் பொருட்டு 2009இல் காடாக்கல் சட்டத்திற்கு திருத்தம் ஒன்று கொண்டு வரப்பட்டது. இதன்படி, வீட்டுத்தோட்ட அபிவிருத்தி, பாசனக் கால்வாயின் கரையோரங்களில் மரங்களை நடுதல், நீர்த்தேக்கங்களின் நீர் ஏந்து பகுதிகளை புனரமைப்பு செய்தல், தரம் குறைந்த சதுப்பு நில மரங்களைப் புனரமைப்பு செய்தல், என்பன அம்பாறை, திருகோணமலை மற்றும் மட்டக்களப்பு மாவட்டங்களில் நடைமுறைப்படுத்தப்பட்டது. இத்துடன், 877 எக்டேயரில் மீள்காடாக்கம் 2009ல் பூர்த்தி செய்யப்பட்டது.

**இலங்கைத் தேயிலைச் சபை, தேயிலை சிறு உடமையாளர் அபிவிருத்தி அதிகாரசபை மற்றும் தேயிலை ஆராய்ச்சி நிறுவனம் என்பன உற்பத்தி, விளைச்சல் மற்றும் தரமான தேயிலையை அதிகரிப்பதற்கு பங்களிப்புச் செய்தன.** இவ்வாண்டில், தேயிலை மீள்நடுகை உதவுதொகைத் திட்டம் (எக்டேயர் ஒன்றுக்கு ரூ.200,000) மற்றும் தேயிலை வளமாக்கி உதவுதொகைத் திட்டம் (50 கிலோக்கிறாமுக்கு ரூ.1,000) முறையே ரூ.179 மில்லியன், ரூ.4,621 மில்லியன் செலவில் தேயிலை சிறு உடமைகள் அபிவிருத்தி மேலாண்மைச் சபையூடாக தேயிலைச் சிறு உடமையாளர்களுக்கு தொடர்ந்து வழங்கப்பட்டது. இதன்படி, தேயிலைச் சிறு உடமையாளர்களின் கீழ் 777 எக்டேயர்கள் இவ்வாண்டில் மீள்நடுகை செய்யப்பட்டன. 2009இல் சிறு உடமையாளர் துறையால் தேசிய தேயிலை உற்பத்திக்கான பங்களிப்பு 76 சதவீதமாக விளங்கியதுடன் இது இத் துறையால் இதுவரை அடையப்பட்ட உச்சப் பங்களிப்பாகும். உலகளாவிய நெருக்கடி காரணமாக பாதிப்புக்குள்ளான தேயிலை உற்பத்தியாளர்களுக்கு உதவுவதற்கு அறிமுகப்படுத்தப்பட்ட வட்டி உதவுதொகைத் திட்டத்தின் கீழ் அரசு 168 தொழிற்சாலைகள் தொடர்பாக ரூ.45 மில்லியனைச் செலவழித்தது. இதேவேளை, காலநிலை மாற்றங்கள் மற்றும் பூச்சி மற்றும் நோய்த் தாக்கங்களுக்கு ஈடுகொடுக்கக் கூடியதை அதிகரிப்பதற்கு மீள்நடுகைச் செயல்முறையில் தேயிலை ஆராய்ச்சி நிறுவனத்தால் அபிவிருத்தி செய்யப்பட்ட உயர் விளைச்சலைக் கொண்ட பதியங்களை நடுவது மிகவும் முக்கியமானதாகும். இதேவேளை, மண்ணைப் பாதுகாக்கும் நிகழ்ச்சித்திட்டங்களைப் பலப்படுத்துவதற்கும் சேதன வளமாக்கியின் பயன்பாட்டை அதிகரிப்பதற்கான நிகழ்ச்சித்திட்டங்களும் உற்பத்தித்திறனை அதிகரிப்பதற்கு சமஅளவில் முக்கியமானதாகும். அதேவேளை, பெறுமதி கூட்டப்பட்ட தேயிலைகளின் ஏற்றுமதிகளை அதிகரிக்கச் செய்வதை ஊக்கமளிப்பதற்கும் தேயிலையை நுகரும் பிரதான நாடுகளில் இலங்கைத் தேயிலையின் வியாபார அடையாளங்களை ஏற்படுத்துவதற்கும் இலங்கை

தேயிலைச் சபையும் பரந்தளவான வியாபார அடையாள ஊக்குவிப்பு மற்றும் பொதுப்படையான தேயிலை ஊக்குவிப்புச் செயற்பாடுகளையும் நடைமுறைப்படுத்தியது. இத்துடன், வெளிநாட்டு நுகர்வோர்களிடையே இலங்கையில் ஓசோன் சிநேகபூர்வமான தூய்மையான தேயிலை உற்பத்தியை ஊக்குவிக்கும் பொருட்டு ஓசோன் சிநேகபூர்வமான தூய்மையான இலங்கைத் தேயிலை அடையாளச் சின்னத்தைப் பதிவு செய்வதற்கான செயற்றிட்டத்தை இலங்கைத் தேயிலைச் சபை அறிமுகப்படுத்தியது. வெளிநாட்டு நுகர்வோர்களின் கரிசனையாகவும் வந்துள்ள ஆகக் குறைந்த மீதி மட்டங்களுடன் செய்யப்பட்ட தேயிலையை திருப்திப்படுத்துவதனூடாக உணவுப் பாதுகாப்புப் பிரச்சனைகளை பயனுறும் வகையில் தீர்ப்பதற்கு ஒருங்கிணைந்த பூச்சிகொல்லி முகாமைத்துவத்தில் விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டங்களை தேயிலை ஆராய்ச்சி நிறுவனம் நடத்தியது.

**நாட்டின் தேயிலை துறையினை அபிவிருத்திச் செய்வதற்கு அரசாங்கம் பலவேறு நடவடிக்கைகளை மேற்கொண்டபோதிலும் சராசரி தேயிலை விளைவு இலங்கையின் போட்டியாளர்களை விட குறைவாகவே காணப்பட்டது.** தற்போதைய சராசரி விளைவு கெக்ரேயர் ஒன்றிற்கு 1550 கி.கி ஆகவிருப்பதுடன் இந்தியாவின் சராசரி விளைவு (கெக்ரேயர் ஒன்றிற்கு 1800 கி.கி) மற்றும் கென்யாவின் சராசரி விளைவு (கெக்ரேயர் ஒன்றிற்கு 2400 கி.கி) ஆகியவற்றுடன் ஒப்பிடுகையில் மிகவும் குறைவானதாகும். உற்பத்தித் திறனை அதிகரிப்பதே பெருந்தோட்ட துறையினருக்கும், சிறு தேயிலை உடைமையாளர்களுக்கும் முக்கிய பிரச்சினையாகவுள்ளது. உயர் வளர்ச்சிப் பிரதேசங்களிலுள்ள தேயிலைச் செடிகளில் 90 சதவீதத்திற்கு அதிகமானவை 100 ஆண்டுகள் பழமையானதாக இருப்பதுடன் தாழ்நில வளர்ச்சிப் பிரதேசங்களில் பெரும்பாலான தேயிலைச் செடிகளின் வகைகள் முப்பது ஆண்டுகள் பழமையானவையாகவும் இருக்கின்றன. எனவே மீள் நடுகைச் செயற்பாடுகள் ஒவ்வொரு ஆண்டுகளிலும் குறைந்தது மூண்று சதவீதமாவது மேற்கொள்ளப்படல் வேண்டும். இருந்த போதிலும் தேயிலைத் துறையின் தற்போதைய மீள் நடுகை வீதம் (0.7 சதவீதம்) தேசிய ரீதியில் குறைவானதாகும் என்பதை உணர்த்துகின்றது. எனவே தற்போதைய மீள் நடுகைத் திட்டங்கள் மேலும் விரிவாக்கப்படுவது இன்றியமையாததாகும். அதேவேளை தேயிலை ஆராச்சி நிறுவனத்தினால் அபிவிருத்தி செய்யப்பட்ட மீள் நடுகைக்கு பயன்படுத்தப்படும் முன்னேற்றகரமாக்கப்பட்ட படியெடுப்புச் செடியைப் பிரபல்யப்படுத்துவது காலநிலைத் தாக்கங்கள் மற்றும் நோய்களிலிருந்து தாவரங்களைப் பாதுகாப்பதற்கு அவசியமானதாகும். உற்பத்தித் திறனை அதிகரிப்பதற்கு நிலப்பாதுகாப்புத் திட்டங்கள் மற்றும் சேதன பசளைகளைப் பயன்படுத்துதல் என்பனவும் முக்கியமானவையாகும்.

**கிராமிய பொருளாதார நடைமுறைகள் மற்றும் தொழில்நுட்பங்களை முன்னேற்றுவதனூடாக இறப்பர் ஆராய்ச்சி நிலையமும் இறப்பர் அபிவிருத்தித் திணைக்களமும் கடந்த ஆண்டுகளாக இறப்பரின் உற்பத்தித்திறனை அதிகரிப்பதற்கு தொடர்ந்து பங்களிப்புச் செய்தது.** விஞ்ஞான ரீதியிலான பயிரிடலில், இறப்பர் ஆராய்ச்சி நிறுவனம் உற்பத்தித் திறனைத் தடுக்கும் பயிரிடலைத் தடுப்பதற்கு எக்டேயருக்கு 515 - 520 மரங்கள் கொண்ட அது விதந்துரைத்த பயிரிடல் அடர்த்தியை மீளாய்வு செய்த வேளையில் லேற்றெக்ஸ் அறுவடையாளர்களின் பற்றாக்குறையை பயனுறும் வகையில் தீர்ப்பதற்கு நான்கு நாட்கள் பாலெடுத்தல் முறைமையை அறிமுகப்படுத்தியது. பாரிய அளவிலான பெருந்தோட்டத்துறை தொடர்பாக அபிவிருத்தி செய்யப்பட்ட ஒரு நாளில் புகை மூலம் உலர்த்தும் முறைமையைப் பின்பற்றுதல், மருத்துவக் கையுறை தயாரிக்கும் கைத்தொழிலில் பயன்படுத்தப்படவிருக்கும் குறைந்த ஊட்டச்சத்து செறிந்த லேற்றெக்ஸ்ஸின் அபிவிருத்தி மற்றும் உயர் விளைச்சலைத் தரும் ஐந்து புதிய பதியங்களை அறிமுகப்படுத்தல் என்பவற்றுடன் சேர்ந்து இறப்பர் ஆராய்ச்சி நிலையம் இவ்வாண்டில் இறப்பர் தொழில்நுட்பத்தை அபிவிருத்தி செய்வதற்கும் பங்களிப்புச் செய்தது.

**இறப்பர் துறையின் அபிவிருத்திக்காக 2009இல் பல வழிமுறைகள் நடைமுறைப்படுத்தப்பட்டன.** உலகளாவிய நிதியியல் நெருக்கடி காரணமாக இயற்கை இறப்பரின் விலைகள் வீழ்ச்சியடைந்து செல்லும் நிலையில் இறப்பர் பயிரிடுவோருக்கு உதவுவதற்கும் பயிரிடுவோர் ஆகக் குறைந்தது கிலோக்கிறாம் ஒன்றுக்கு ரூ.175 ஐ பெறுவதை உறுதிப்படுத்துவதற்கும் அரசு உத்தரவாதமளிக்கப்பட்ட விலைத் திட்டத்தை 2009இல் அறிமுகப்படுத்தியது. இத் திட்டத்தின் கீழ், ரூ.25 மில்லியன் கொண்ட நிதியம் 3,131 சிறு இறப்பர் உடமையாளர்களிடையே பகிர்ந்தளிக்கப்பட்டது. இதேவேளை, மரபு ரீதியான பிரதேசங்கள் (715 எக்டேயர்கள்) மற்றும் மரபு ரீதியற்ற பிரதேசங்கள் (441 எக்டேயர்கள்) இரண்டிலும் இறப்பரின் புதிய நடுகை மீது உதவுதொகையாக ரூ.138 மில்லியன் வழங்கப்பட்ட வேளையில் இறப்பரின் 1,002 எக்டேயரில் மீள்நடுகைக்கான உதவுதொகையாக ரூ.209 மில்லியனும் வழங்கப்பட்டது.

**2009இல் தெங்கு ஆராய்ச்சி நிறுவனம், தெங்குப் பயிர்ச்செய்கைச் சபை மற்றும் தெங்கு அபிவிருத்தி அதிகாரசபை என்பன இத் துறையில் கணிசமான வளர்ச்சியை உறுதிப்படுத்துவதற்கு பல செயற்றிட்டங்களை நடைமுறைப்படுத்தியது.** தென் மாகாணத்தில் கிட்டத்தட்ட 332,000 தென்னை மரங்கள் (இப் பிரதேசத்திலுள்ள தென்னை மரங்களின் 15 சதவீதம்) தென்னோலை வாடல் நோயாலும் தென்னங்குருத்து அழுகல் நோயாலும் பாதிப்புள்ளாயிருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது. நாட்டின் ஏனைய பகுதிகளுக்கு இந் நோய்கள் பரவுவதைத் தடுப்பதற்கு தென்னை ஆராய்ச்சி நிறுவனம் தென்னை அபிவிருத்திச் சபையுடன் இணைந்து பணியாற்றுவதன் மூலம் ஏற்புடைய வழிமுறைகளை எடுத்திருக்கையில் கூடுதலாகப் பாதிக்கப்பட்ட பிரதேசங்களில் நோய்களைக் கட்டுப்படுத்துவதற்கான உபாயங்களை விருத்தி செய்கிறது. அதேவேளை, தெங்குப் பயிர்ச்செய்கைச் சபை 2009இல் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்களை தொடர்ந்து நடத்தியது. இதன்படி, 3,020 எக்டேயர்களில் மீள்நடுகை மேற்கொள்ளப்பட்டுள்ளதுடன் 3,945 எக்டேயர்கள் கொண்ட புதிய காணிகள் தெங்குப் பயிர்ச்செய்கையில் கொண்டு வரப்பட்ட கிட்டத்தட்ட 1.7 மில்லியன் விதைகள் இவ்வாண்டில் பகிர்ந்தளிக்கப்பட்டன. தெங்குப் பாவனையிலான விரயம் தொடர்பாக தெங்கு அபிவிருத்தி அதிகாரசபையால் நடத்தப்பட்ட ஆய்வு வீட்டலகு மட்டங்களில் சமையல் நோக்கங்களுக்காக பயன்படுத்தப்படும் தேங்காயில் கிட்டத்தட்ட 35 சதவீதம் விரயமாக்கப்படுவதையும் இது வினைத்திறனற்ற பிரித்தெடுப்பு முறைமைகள் காரணமாக ஆண்டொன்றுக்கு 500 - 530 மில்லியன் காய்களுக்குச் சமமானதென்பதையும் தெரியப்படுத்துகிறது.

இவ்வாண்டுக் காலத்தில் ஏற்றுமதிப் பயிர்களை மேம்படுத்தும் பொருட்டு பல செயற்றிட்டங்கள் மேற்கொள்ளப்பட்டன.

**இவ்வாண்டுப் பகுதியில் ஏற்றுமதிப் பயிர்களை மேம்படுத்தும் பொருட்டு பல்வேறு செயற்றிட்டங்கள் மேற்கொள்ளப்பட்டன.** பெருந்தோட்டத் துறையிலும் அதேபோன்று வடக்கு, கிழக்கு மாகாணங்களிலும் மிளகு, கொக்கோ, கறுவா மற்றும் கோப்பி பரப்பளவு விரிவடைந்தமை, உயர்தர பயிரிடல் பொருட்கள் வழங்கப்பட்டமை, வேளாண்மையாளர்களுக்கு எவ்வித செலவுமில்லாமல் ஏற்றுமதி வேளாண்மைத் திணைக்களத்தினால் விரிவாக்கற் பணிகள் வழங்கப்பட்டமை என்பன அத்தகைய செயற்றிட்டங்களில் காணப்பட்டன.

**நெல் துறை ஊக்குவிப்பு வழிமுறைகள் மற்றும் ஆதாயமான விலைகளுக்குப் பதிலிறுத்தும் வகையில் அண்மைக் காலங்களில் மீள்எழுச்சியுற்றுக் காணப்படுகிறது.** வேளாண்மையாளர்கள் நியாயமான விலைகளைப் பெறுவதை உறுதிப்படுத்துவதற்கு நாட்டு நெல்லுக்கு கிலோக்கிறாமொன்றிற்கு ரூ.28 படியும் சம்பா நெல்லுக்கு கிலோ கிறாமொன்றுக்கு ரூ.30 படியும் உத்தரவாதமளிக்கப்பட்ட விலைகளிலான நெல் கொள்வனவுத் திட்டம் தொடர்ந்து செயற்பட்டது. இத் திட்டத்தின் கீழ், 2009இல் 50,439 மெற்றிக்தொன் நெல்லைக் கொள்வனவு செய்வதற்கு அரசு ரூ.1,429 மில்லியனைச் செலவிட்டு சந்தை விலைகளை விரும்பத்தக்க மட்டத்தில் வைத்திருக்க உதவியது.

**உள்நாட்டு உணவு உற்பத்தியை அதிகரிப்பதற்கு "அப்பி வவமு நட்ட நகெமு" என்ற தேசிய பிரசாரம் 2009இலும் தொடர்ந்து நடைபெற்றது.** இவ்வாண்டினுள் 75,752 ஏக்கர் கைவிடப்பட்ட நிலம் பயிர்ச்செய்கையின் கீழ் கொண்டு வரப்பட்டதுடன் தேசிய உற்பத்திக்கு 91,000 மெற்றிக்தொன் நெல்லைச் சேர்த்தது. மேலும், வீட்டுத் தோட்ட அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் நாடு முழுவதும் 300,000 வீட்டுத் தோட்டங்கள் அபிவிருத்தி செய்யப்பட்டன. மரக்கறிகள் மற்றும் பழங்களின் அறுவடைக்குப் பிந்திய இழப்புகளைக் குறைக்கும் பொருட்டு, மொத்தமாக 45,000 பிளாத்திக்குக் கூடைகள் வேளாண்மையாளர்களிடையேயும் ஏனைய ஆர்வலர்களிடையேயும் பகிர்ந்தளிக்கப்பட்டன.

**வேளாண்மைத் திணைக்களம் இவ்வாண்டில் பல எண்ணிக்கையான ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்திச் செயற்றிட்டங்கள், விரிவாக்கப் பணிகள், விதை உற்பத்தி, தரத்தை மேம்படுத்தும் நிகழ்ச்சித்திட்டங்கள் என்பவற்றை நடைமுறைப்படுத்தியது.** குறுகிய காலப் பயிர் (2 1/2 மாதம்) வகைகளுக்கு அதிகரித்துச் செல்லும் கேள்வியை ஈடுசெய்வதற்கு அரிசி ஆராய்ச்சி அபிவிருத்தி நிறுவனத்தால் விதை உற்பத்தி நிகழ்ச்சித்திட்டமொன்று அபிவிருத்தி செய்யப்பட்டது. பூச்சிகள் மற்றும் நோய்கள் மற்றும் சுற்றாடல் அழுத்தங்களுக்குத் தாக்குப்பிடிக்கக் கூடியதும் எக்டேயர் ஒன்றுக்கு 9 மெற்றிக்தொன்களுக்கும் கூடுதலான உள்ளார்ந்த வளம்மிக்க விளைச்சலைக் கொண்ட 3 1/2 மாத அரிசி வகை பயிர்ச்செய்கைக்கு விடுவிக்கப்பட்டது. திணைக்களம் இரு புதிய மிளகாய் இனங்களான "எம் 1 கிறீன்" மற்றும் "கல்கிறியகம தேர்வு" மற்றும் பொதுப் பயிர்ச்செய்கைக்கான "தம்புள்ளைத் தேர்வு" உள்ளிட்ட ஏனைய களப் பயிர்களின் பல்வேறான புதிய இனங்களையும் விடுவித்தது. இவ்வாண்டில் தோட்டக்கலை பயிர் ஆராய்ச்சி அபிவிருத்தி நிறுவனத்தின் குறிப்பிடத்தக்க சாதனைகளில் ஒன்றாக "மா போன்ற மூட்டுப் பூச்சி" இன் குடித்தொகையை குறிப்பிடத்தக்களவில் குறைக்க உதவிய வெளிநாட்டிலிருந்து கொண்டு வரப்பட்ட ஒட்டுண்ணியை விடுவித்ததன் மூலம் "பப்பாசியில் மாவு போன்ற மூட்டுப் பூச்சி" இன் உயிரியல் கட்டுப்பாடு விளங்கியது.

**வேளாண்மையாளர்கள் ஏனைய களப் பயிர்களின் பயிர்ச்செய்கையிலிருந்து உயர்நிதி ஆதாயங்களைப் பெற்ற போதிலும் தற்போதைய உற்பத்தி மட்டங்கள் பலதரப்பட்ட காரணங்கள் காரணமாக கேள்வியை ஈடுசெய்ய போதுமானவையாக அமையவில்லை.** குறைந்த உற்பத்தித்திறன், உயர் உற்பத்திச் செலவு, தரமான விதைகள் கிடைக்காமை, பூச்சிகள் மற்றும் நோய்கள் கூடியளவில் நிகழ்தல், சந்தைப்படுத்தும் முறைமையிலான குறைபாடு மற்றும் களஞ்சிய வசதிகளின் பற்றாக்குறை இத் துறையின் வளர்ச்சியைத் தடுத்தது. 2009இல் அறுவடைக்குப் பின்னரான தொழில்நுட்ப நிறுவனம் பெரிய வெங்காயத்துக்கான முன்னேற்றமடைந்த களஞ்சியக் கட்டமைப்பை அறிமுகப்படுத்தியதன் மூலம் அறுவடைக்குப் பின்பான இழப்புகள் மரபுவழி களஞ்சியப்படுத்தல் முறைகளில் மூன்று மாதங்களின் பின்பான 30 இலிருந்து 50 சதவீத இழப்புகளுடன் ஒப்பிடுகையில் அறுவடைக்குப் பின்பான இழப்புகளை 12 சதவீதத்திற்குக் குறைத்தது.

**நெல் மற்றும் சிறு உடமையாளர்களை உள்ளடக்கிய வளமாக்கி உதவித்திட்டம் 2009இலும் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டது.** நெல் பயிர்ச்செய்கைக்கு 50 கிலோக்கிறாம் மூடை ஒன்றுக்கு ரூ.350 வீதம் வளமாக்கியின் அனைத்து வகைகளும் வழங்கப்பட்டிருக்கையில் தேயிலை மற்றும் இறப்பர் சிறு உடமையாளர்களுக்கு கலப்பு வளமாக்கியின் 50 கிலோக்கிறாம் மூடை ஒன்று ரூ.1,000 வீதம் வழங்கப்பட்டது. இவ்வாண்டில், வளமாக்கி உதவுதொகை நிகழ்ச்சித்திட்டம் மீதான அரச செலவினம் 2008இன் ரூ.26 பில்லியனுடன் ஒப்பிடுகையில் ரூ.27 பில்லியனாக (2009/2010 பெரும்போகத்துக்கான வளமாக்கி செலவின் ஒரு பகுதியையும் உள்ளடக்குகிறது) விளங்கியது. இந் நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் 2008/2009 பெரும்போகத்தில் நெல்லுக்கான வளமாக்கி வழங்கல்கள் பயிர் செய்யப்பட்ட பரப்பளவிலான அதிகரிப்பு காரணமாக 242,093 மெற்றிக் தொன்களுக்கு 9 சதவீதத்தால் அதிகரித்ததுடன் 2009 சிறுபோகத்தில் வளமாக்கி வழங்கல்கள் பயிர் செய்யப்பட்ட பரப்பளவில் ஏற்பட்ட வீழ்ச்சி காரணமாக 150,375 மெற்றிக்தொன்களுக்கு 32 சதவீதத்தால் வீழ்ச்சியடைந்தது. எனினும், வளமாக்கி உதவுதொகையிலான அதிகரிப்பிற்குப் பின்பு தேயிலை சிறு உடமையாளர்களால் வளமாக்கிப் பாவனை அதிகரிக்கப்பட்டதன் முக்கிய காரணத்தால் தேயிலைத் துறைக்கான வருடாந்த வளமாக்கி வழங்கல்கள் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் 172,680 மெற்றிக்தொன்களுக்கு 31 சதவீதம் கொண்ட கணிசமான அதிகரிப்பைக் காட்டியது.

**அரசு முன்பு போர் நிகழ்ந்த பிரதேசங்களில் பாற்பண்ணை மற்றும் மீன்பிடித் துறைகளை அபிவிருத்தி செய்வதற்கு விசேட கவனத்தைச் செலுத்தியது.** கால்நடை அபிவிருத்தி அமைச்சு பாற்பண்ணைத் துறையை ஊக்கப்படுத்துவதற்கு குறுகியகால மற்றும் நடுத்தரகால அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தை வட மாகாணத்தில் தொடங்கி வைத்தது. இவை வேளாண்மையாளர்களுக்கு விலங்குகளை வழங்கல், கால்நடை வளர்ப்பு கூட்டுறவுச் சங்கங்களை பலப்படுத்வதும் மீள ஒழுங்கமைத்தலும், பால் சேகரிப்பு வலையமைப்பை மீள ஏற்படுத்தல், பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள், மிருக

2

தேசிய உற்பத்தியும் செலவினமும்

சிறப்புக்குறிப்பு 3

## இலங்கையில் உணவுப் பாதுகாப்பு

உணவுப் பாதுகாப்புக் கோட்பாடு தேசிய மட்டத்திலும் உலகளாவிய மட்டத்திலும் "அனைவருக்கும் உணவு" கிடைக்கச் செய்வது என பொதுவாக விரைவிலக்கணம் செய்யப்படுகிறது. உணவு மற்றும் வேளாண்மை அமைப்பானது "சுறுசுறுப்பானதும் ஆரோக்கியமானதுமான வாழ்க்கைக்கு போதுமான உணவு எல்லோருக்கும் எல்லா வேளைகளிலும் கிடைப்பது" என்பதே உணவுப் பாதுகாப்பு என்று உணவின் கிடைப்பனவினை வலியுறுத்துகின்ற விதத்தில் அதற்கு வரைவிலக்கணம் வழங்கியிருக்கிறது(1996)[1]. உண்மையில், நாட்டிற்குள்ளேயோ அல்லது வெளியிலிருந்து இறக்குமதி செய்யப்படுவதன் மூலமோ கிடைக்கத்தக்கதாகவுள்ள உணவு போதுமானதாக இல்லையெனினும் உணவைப் பெற்றுக்கொள்வதற்கு மக்கள் இயலக் கூடியவர்களாக இருப்பது நாட்டின் உணவுப் பாதுகாப்பினை உறுதிப்படுத்துவதற்கு இன்றியமையாததாகும். மேலும் உணவுப் பாதுகாப்பின் உள்நோக்கம் யாதெனில் சமூகத்திலுள்ள அனைத்து மக்களிடமிருந்தும் பட்டினியையும் ஊட்டச் சத்தின்மையினையும் அகற்றி விடுவதேயாகும். இதன்படி, உணவுப் பாதுகாப்பு என்ற கோட்பாடு இரண்டு தத்துவங்களை அதாவது, போதுமான ஊட்டச்சத்துடன் கூடியதும் பாதுகாப்பானதுமான உணவின் கிடைப்பனவு மற்றும் அத்தகைய உணவினைப் பெற்றுக் கொள்ளக்கூடிய இயலுமை என்பனவற்றினை வலியுறுத்துகின்றது.

### இலங்கையில் உணவுப் பாதுகாப்பின் தற்போதைய நிலைமை

தற்பொழுது, இலங்கை அதன் உணவுத் தேவைப்பாடுகளில் பெரும்பாலானவற்றை அதாவது தானியங்கள், பருப்பு வகை, பால், மீன், இறைச்சி, காய்கறிகள் மற்றும் பழவகைகள் என்பனவற்றை நாட்டிற்குள்ளேயே உற்பத்தி செய்து கொள்கிறது. குறிப்பாக, நாட்டின் திட உணவாக விளங்கும் அரிசியின் மொத்தத் தேவையில் சராசரியாக ஏறத்தாழ 95 சதவீதம் நாட்டிலேயே உற்பத்தி செய்யப்படுவதுடன் மீதி இறக்குமதி செய்யப்படுகிறது. கோதுமை மாவின் தேவை முழுமையாக இறக்குமதி மூலமே பூர்த்தி செய்யப்படுகின்றது. உணவுப் பாதுகப்பின் முக்கிய அம்சமாகக் கருதப்படும் ஊட்டசத்தின் முக்கிய மூலமாக விளங்கும் உடன் மீனின் பெரும்பாலும் முழுத் தேவையும் நாட்டிலேயே உற்பத்தி செய்யப்படுகின்ற வேளையில் தகரத்திலடைக்கப்பட்ட மீன், கருவாடு போன்ற சில மீன் உற்பத்திகள் இறக்குமதி செய்யப்படுகின்றன. தற்பொழுது மொத்த உள்நாட்டுப்பால் உற்பத்தி நாட்டின் பால் தேவையில் ஏறத்தாழ 30 சதவீதத்தினை ஈடுசெய்ய மட்டுமே போதுமானதாகும். நாடு சோளம், கடலை மற்றும் ஏனைய தானியங்கள் மற்றும் உருளைக்கிழங்கு, மிளகாய் மற்றும் பெரிய வெங்காயம் போன்றவற்றை உற்பத்தி செய்வதற்கான உயர்ந்த வளத்தை கொண்டிருந்த போதும் அத்தகைய பயிர்களின் உள்ளூர் உற்பத்திகளின் தற்போதைய மட்டம் நாட்டின் தேவையைப் பூர்த்தி செய்யப் போதுமானதாக இல்லை. இதன் விளைவாக நாட்டின் உணவுத் தேவையில் குறிப்பிடத்தக்க பங்கினை இறக்குமதி மூலமே ஈடுசெய்ய வேண்டியுள்ளது.[2]

உள்நாட்டு உற்பத்தியினை அதிகரிப்பது அல்லது இறக்குமதி செய்வது நாட்டின் உணவுக் கிடைப்பனவினை அதிகரிக்கும். எனினும், வீட்டு அலகு மட்டத்தில் உணவுப் பாதுகாப்பு வறிய வீட்டு அலகுகளாக இருக்குமிடத்து, குறைவாக வருமானம் அல்லது அத்தகைய அடிப்படை உணவுகளின் விலை உயர்வாக இருப்பதன் காரணமாக அவர்களின் அடிப்படை உணவுகளைப் பெற முடியாமல் போகலாம்.

சி.கு அட்டவணை 3.1

முக்கிய உணவுப் பண்டங்கள் தொடர்பான இலங்கையின் உணவு ஐந்தொகை

| விடயம் | 2005 | | | 2008 | | |
|---|---|---|---|---|---|---|
| | உற்பத்தி (மெ. தொ.'000) | இறக்குமதி (மெ.தொ.'000) | கிடைக்கத்தக்க தலைக்குரிய வருமானம் (கி.கி/ ஆண்டு) | உற்பத்தி (மெ. தொ.'000) | இறக்குமதி (மெ.தொ.'000) | கிடைக்கத்தக்க தலைக்குரிய வருமானம் (கி.கி/ ஆண்டு) |
| அரிசி (நெல்) | 2,349 | 76 | 101 | 3,875 | 84 | 123 |
| சோளம் | 42 | 147 | 3 | 113 | 83 | 2 |
| கோதுமை | - | 842 | 42 | - | 541 | 26 |
| வெங்காயம் | 109 | 121 | 8 | 107 | 173 | 9 |
| சீனி | 54 | 444 | 24 | 38 | 563 | 29 |
| உருளைக்கிழங்கு | 79 | 41 | 5 | 75 | 99 | 7 |
| உடன் மீன் | 163 | 4 | 4 | 319 | 9 | 6 |
| பசும்பால் | 137 | - | 4 | 146 | - | 4 |
| தேங்காய் எண்ணெய் | 20 | - | 1 | 51 | - | 2 |

1 உலக உணவு மாநாடு - 1996

2 2006, 2007 மற்றும் 2008இன் மொத்த நுகர்வுப் பொருள் இறக்குமதியில் உணவு இறக்குமதிகள் முறையே 43 சதவீதம், 47 சதவீதம், 53 சதவீதம் காணப்பட்டன. மேலதிக விபரங்களுக்கு இலங்கை மத்திய வங்கியின் ஆண்டறிக்கை 2008இன் சிறப்புக்குறிப்பு 7இனைப் பார்க்க.

கடந்த பல ஆண்டுகளாக வறுமையை ஒழிப்பதில் இலங்கை திருப்திகரமான முன்னேற்றத்தினை அடைந்திருக்கிறது. வறுமைக் கோட்டிற்கு கீழே உள்ளவர்களின் விகிதம் 2000ஆம் ஆண்டின் 22 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 2007இல் 15.2 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தது. எனினும், நாட்டின் குறிப்பிட்ட சில பகுதிகளிலும் பெருந்தோட்டத் துறையிலும் வறுமையானது 27 சதவீதம் முதல் 34 சதவீதம் வரை உயர்வாகக் காணப்படுகின்றது. இதன் காரணமாக இலங்கை உணவுப் பாதுகாப்பினை மேம்படுத்துவதற்காக வறுமை ஒழிப்பு முயற்சிகளை தொடர்ந்தும் வலியுறுத்தி வருகின்றது.

இலங்கையை ஒத்த வருமான மட்டங்களைக் கொண்ட பெரும்பாலான நாடுகளுடன் ஒப்பிடுகையில் இலங்கை சிறந்த அடிப்படைச் சுகாதார குறிகாட்டிகளைக் கொண்டிருக்கின்றது என்பது ஏற்றுக் கொள்ளப்பட்டிருக்கிறது. எனினும், ஊட்டசத்துக் குறைபாடு தொடர்பான சில குறிகாட்டிகள் இலங்கையில் குறிப்பிடத்தக்களவிற்கு உயர்வாகக் காணப்படுகின்றன. இலங்கை குடித்தொகை சுகாதார அளவீடு (2006-07) ஏறத்தாழ 18 சதவீதமான குழந்தைகள் குறைந்த நிறையுடன் பிறக்கின்ற வேளையில் [3]ஐந்து வயதிற்குக் குறைவான பிள்ளைகளிடையே தீவிரமான ஊட்டச்சத்தின்மைகள் (எடை குறைவு), கடுமையான ஊட்டச்சத்தின்மை (வளர்ச்சி குறைவு) குறைவான நிறை என்பன முறையே 15 சதவீதமாகவும் 4 சதவீதமாகவும் 22 சதவீதமாகவும் காணப்படுவதாகக் குறிப்பிடுகின்றது. மேலும் குறைந்தபட்ச சமச்சீரான சத்துணவிற்குக் குறைவான உணவினை உட்கொள்ளும் குடித்தொகை ஏறத்தாழ 51 சதவீதமாகக் காணப்படுகின்றது (2006/ 2007). இது குறிப்பிடத்தக்களவிற்கு உயர்வான மட்டமாகும்[4].

### பாதுகாப்பான உணவினை அதிகரிப்பது தொடர்பான அரசாங்கத்தின் கொள்கை

அரசாங்கத்தின் பத்தாண்டு கொள்கைக் கட்டமைப்பில், உணவின் கிடைப்பனவினை உறுதிப்படுத்தி மக்களின் கலோரி மற்றும் புரத நுகர்வுகளை அதிகரிப்பதற்கான முக்கிய பங்களிப்புக் காரணியாக வேளாண்மை உற்பத்தியை அதிகரிப்பதற்கான அவசியம் அடையாளம் காணப்பட்டிருக்கிறது. இலங்கை மக்களின் உணவு மற்றும் ஊட்டச்சத்து பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்கான உள்நாட்டு உற்பத்தியினை மேம்படுத்தும் பொருட்டு "அபிவகமு ரட்ட நகமு" என்றழைக்கப்படும் நாம் பயிரிடுவோம் நாட்டை உயர்த்துவோம் என்ற தேசிய நிகழ்ச்சித்திட்டத்தினை நடைமுறைப்படுத்தியிருக்கிறது. இந் நாடளாவிய நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் அரசாங்கத்தின் உதவியுடன் பயிரிடப்பட்ட நிலைப்பரப்பு விரிவடைந்தமையின் விளைவாக அண்மைய ஆண்டுகளில் அரிசி உற்பத்தி விரைவாக அதிகரித்திருக்கிறது. 2009இல் இம் மட்டும் 75,752 ஏக்கர் கைவிடப்பட்ட நெற்செய்கை நிலம் பயிரிடப்பட்டமையின் மூலம் ஏறத்தாழ 91,000 மெற்றிக் தொன் நெல் மேலதிகமாக உள்நாட்டு உற்பத்திக்குக் கிடைத்திருக்கிறது. வேளாண்மை உற்பத்தியை அதிகரிப்பதற்காக வளமாக்கி மற்றும் பல்வேறு ஊக்குவிப்புக்கள் மற்றும் சலுகைகள் உதவுதொகை வழங்கப்பட்ட உள்ளீடுகள் போன்ற பல்வேறு ஊக்குவிப்புக்கள் வழங்கப்பட்டிருக்கின்றன.

3 இலங்கை மத்திய வங்கியின் ஆண்டறிக்கை 2008
4 தொகைமதிப்பு புள்ளி விபரத்திணைக்களம்

அரசாங்கம் பாதுகாப்பினூடாக உணவு உற்பத்தியினை ஊக்குவிப்பதற்காக வரிக் கொள்கையினையும் பயன்படுத்தி வருகின்றது. சோளத்தின் இறக்குமதி மீதான கட்டுப்பாடுகள் அதேபோன்று தேவையான வேளைகளில், உதாரணமாக கோதுமைத் தானியம் போன்ற குறிப்பிட்ட சில பொருட்களுக்கான வரி விலக்கல்களை அளிப்பதன் மூலம் இறக்குமதியை ஊக்குவித்தல் என்பனவற்றிற்கு வரிக் கொள்கை பயன்படுத்தப்படுகின்றது. மேலும், அரசாங்கம் நெல்லிற்கு உத்தரவாத விலையினை அறிமுகப்படுத்தியிருக்கிறது. இது வேளாண்மையாளர்களுக்கு குறைந்தபட்ச விலையை உறுதிப்படுத்தியிருப்பதனால் நெற்செய்கையில் ஈடுபட இது அவர்களை ஊக்குவித்திருக்கிறது. அரசாங்கம் தெரிந்தெடுக்கப்பட்ட அரிசி வகைகள் மற்றும் பால் உற்பத்திகள் உட்பட சில அத்தியாவசியப் பொருட்களுக்கு கீழ்மட்ட விலைகளையும் (உயர்ந்தபட்ச சில்லறை விலை) விதித்திருக்கிறது.

பாதுகாப்பற்ற உணவு நிலைமையொன்றிற்குள் நாடு சிக்குவதனைத் தடுப்பதற்காக அரசாங்கம் உணவுப் பங்கீடு, சந்தைப்படுத்தல் மற்றும் களஞ்சியப்படுத்தல் போன்ற விடயங்களிலும் ஈடுபட்டு வருகிறது. இது, தேசிய நெற் கொள்வனவு நிகழ்ச்சித்திட்டத்தின் கீழான அரிசி தாங்கியிருப்பினை பேணுவது, நாட்டின் சந்தையில் அரிசி பற்றாக்குறை ஏதும் காணப்படும் வேளையில் அதற்கேற்ப தேவையான வேளையில் இறக்குமதியூடாக அரிசியைப் பெற்றுக்கொள்ளுதல், கூட்டுறவுச் சங்கங்களின் விலையமைப்பினை விரிவாக்குதல் மற்றும் "லக் சதோசா" விற்பனை நிலையங்களையும் பொருளாதார நிலையங்களையும் நிறுவுதல் என்பனவற்றை உள்ளடக்கியுள்ளது. மேலும் கிராமிய வீதிகளின் விலையமைப்பினை மேம்படுத்துவதற்காகவும் கிராமிய மக்களின் வாழ்வாதாரத்தினை உயர்த்துவதற்குமாக "மகநகும" மற்றும் "கமநகும" போன்ற செயற்றிட்டங்களை அரசாங்கம் நடைமுறைப்படுத்திய வேளையில், வேளாண்மைத் துறைக்கு உயர்ந்தளவு கடன்களை வழங்குமாறு வர்த்தக வங்கிகளுக்கு பணிப்புரைகள் விடுக்கப்பட்டன. இதற்கமைய 2009இல் வேளாண்மைத் துறைக்கு வர்த்தக வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்களும் முற்பணங்களும் ரூ.129.9 பில்லியனுக்கு 11.5 சதவீதத்தினால் அதிகரித்தன. அரசாங்கம் மேதகு சனாதிபதியின் தலைமையில் உணவுப் பாதுகாப்பு மற்றும் வாழ்க்கைச் செலவுக் கட்டுப்பாடு மீதான அமைச்சரவைத் துணைக்குழுவொன்றினை நியமித்துள்ளது. குழுவானது நாட்டின் உணவுப் பாதுகாப்பு சந்தையின் விலை அசைவுகள் மற்றும் ஏனைய அபிவிருத்திகள் தொடர்பாக ஆராய்வதற்காகவும் இத் துறைகளில் ஏற்படுகின்ற ஏதும் பிரச்சனைகளைக் கட்டுப்படுத்துவதற்கான விதந்துரைப்புக்களை மேற்கொள்வதற்காகவும் கிரமமாகக் கூடியது. அரசாங்கம் வீட்டு அலகுகளின் உணவுப் பாதுகாப்பினை உயர்த்துவதற்காக 2009இல் நாடளாவிய முறையில் ஏறத்தாழ 300,000 வீட்டுத் தோட்டங்களை அபிவிருத்தி செய்ததன் மூலம் வீட்டுத் தோட்டங்களை மேம்படுத்திய அதேவேளையில் உள்;ர் உற்பத்தியை அதிகரிப்பதற்காக இங்குரான மற்றும் கந்தளாய் சீனித் தொழிற்சாலைகள் போன்ற தொழிற்படாதிருக்கும் கைத்தொழில்களை அரச தனியார் பங்குடமை அடிப்படையில் மீளத் தொழிற்படுத்துவதற்கும் சாதகமான முறையில் பங்களித்தது.

அதேவேளை, அரசாங்கம் சமூர்த்தி வருமானத் துணை நிரப்பு நிகழ்ச்சித்திட்டம் போன்ற நலன்புரி, உதவுதொகைத் திட்டங்களையும், கர்ப்பிணித் தாய்மார்களுக்கு ஊட்டச்சத்து பொதிகளை வழங்குதல், ஊட்டச்சத்து குறைந்த 2 - 5 வயதிற்கிடைப்பட்ட தாழ்ந்த வருமானங்களைக் கொண்ட குடும்பங்களிலுள்ள குழந்தைகளுக்கு உடன்பால் மற்றும் சமூகத்திலுள்ள மிகப் பாதிக்கப்பட்ட பிரிவினரிடையேயான ஊட்டச்சத்துக் குறைபாட்டினைக் கட்டுப்படுத்துவதற்கான பள்ளிக்கூட ஊட்டச்சத்து நிகழ்ச்சித்திட்டம் போன்றவற்றை அரசாங்கம் நடைமுறைக்கிட்டது.

**சவால்கள், பிரச்சனைகள் மற்றும் முன்னேற்றங்கள்**

உயர்ந்த உணவு விலைகள் எப்பொழுதும் வீட்டு அலகுகளின் உணவுப் பாதுகாப்பின் மீது கடுமையான சவால்களை ஏற்படுத்தி வருகிறது. குறிப்பாக ஒப்பீட்டு ரீதியில் தமது வருமானத்தில் பெரும்பங்கினை உணவின் மீது செலவிடும் தாழ்ந்த வருமானக் குடும்பங்களே இச் சவாலுக்குட்படுகின்றன. பன்னாட்டு மசகெண்ணெய் விலைகள் மீண்டும் பெருமளவிற்கு உயர்ந்து உயிரின எரிபொருள் (படிவ எரிபொருள் அல்லாத) உற்பத்திக்காக தனியார் துறைக்கான கேள்வி உயருமாயின் உலக தானிய விலைகளின் மீது அதிகரித்த அழுத்தத்தினை ஏற்படுத்தி கரிசனைகளைத் தோற்றுவிக்கும். அதிகரித்த வலு விலைகளும் வேளாண்மைப் பண்டங்களின் உற்பத்திச் செலவு அதிகரிப்பதற்குப் பங்களித்து அவற்றின் விலைகளில் அதிகரிப்புக்களை ஏற்படுத்தியிருக்கலாம். காலநிலையும் வேளாண்மைத் துறையில் தெளிவான பங்கொன்றினை ஆற்றுகின்றது. வானிலை மாற்றங்கள் தொடர்பாக ஏற்படும் மோசமான தாக்கங்களை எதிர்கொள்ளும் பொருட்டு சிறந்த நீர் முகாமைத்வ தொழில்நுட்பங்களை அறிமுகப்படுத்துவதும், குறிப்பாக சிறு வேளாண்மை உற்பத்தியாளர்களிடையே குறுங்கால கலப்பினங்களைப் பிரபல்யப்படுத்துவதும் முக்கியமானதாகும்.

அதிகரிக்கின்ற வருமானத்தின் காரணமாக, வளர்ந்து வரும் பொருளாதாரங்களிலுள்ள மக்களின் உணவுப் பழக்கவழக்கங்கள் திட உணவுகளிலிருந்து இறைச்சி, பண்ணை உற்பத்திகள் போன்ற கால்நடை உற்பத்திகளுக்கு மாற்றமடையுமென எதிர்பார்க்கப்படுகின்றது. நகர மயமாக்கல் வளர்ச்சியடைந்து மக்கள் கிராமப் புறங்களிலிருந்து நகரப் பகுதிகளுக்கு நகர்கின்றதொரு பொருளாதார வளர்ச்சியைக் கொண்டிருக்கக்கூடிய குறைந்த மத்திய தர வருமானத்திற்கு வளர்ந்து வரும் நாடாக இலங்கையும் வகைப்படுத்தப்பட்டிருக்கின்றது. ஆகவே, உணவின் நுகர்விற்கும் வழங்கலுக்குமிடையே உருவாகி வரும் இடைவெளியினை ஈடுசெய்வதற்கு வேளாண்மை மற்றும் விலங்கு வளர்ப்பில் தேவையான முதலீடுகளை மேற்கொள்வது இன்றியமையாததாகும்.

மேலும், சந்தையில் ஏற்படக்கூடிய பற்றாக்குறைகளை ஈடுசெய்வதற்கு பொருத்தமான முறையிலும் சரியான நேரத்திலும் வழிமுறைகளை மேற்கொள்ளும் பொருட்டு நாட்டில் போதுமான தானிய இருப்புக்களை மதிப்பிடுவதற்கும் பேணுவதற்குமாக தொடர்பான அரச அதிகாரிகளை அனுமதிக்கும் விதத்தில் பொருத்தமான பொறிமுறைகளை அறிமுகப்படுத்துவது அவசியமானதாகும். அதேவேளை, நீர்ப்பாசனத்தினைப் பெறுதல், சிறந்த நீர் முகாமைத்துவம் மற்றும் களஞ்சியப்படுத்தல் மற்றும் உணவு பதனிடல் தொழில்நுட்பங்கள், போக்குவரத்து வசதிகள் அறுவடைக்குப் பின்னைய இழப்புக்களைக் குறைத்தல், வங்கிக் கடன்களைப் பெறுதவற்கு வழி வகை, வங்கிக் கொடுகடனைப் பெறுதல் என்பன உட்பட மற்றைய உதவிப் பணிகள் என்பன வேளாண்மைத் துறையின் விரைந்த வளர்ச்சிக்கு வலியுறுத்தப்பட வேண்டிய விடயங்களாகவுள்ளன.

மக்களின்/ வீட்டு அலகுகளின் உணவுப் பாதுகாப்பினை உணவு உற்பத்தியினை வலுவான முறையில் அதிகரித்தல், விலைகளின் உறுதிப்பாட்டினைப் பேணுதல் மற்றும் குறைந்த வருமானத்தினைக் கொண்ட குடும்பங்களின் வருமான மட்டங்களை உயர்த்துதல் என்பனவற்றிடையே உறுதிப்படுத்த முடியும். வேளாண்மை தொடர்பான அரசாங்கத்தின் தற்போதைய முரண்பாடடைந்த கொள்கையை தொடர்கின்ற வேளையில் சமூக பொருளாதார அபிவிருத்தியினூடாக வறிய குடியிருப்பாளர்கள் உணவைப் பெறக்கூடிய தன்மையினை மேம்படுத்துவது அத்தகைய பெறுபேறுகளை எய்துவதற்கான உபாயமாக இருத்தல் வேண்டும்.

வைத்திய புலன்விசாரணை நிலையங்கள், புதிய பால் சேகரிக்கும் குளிரூட்டும் நிலையங்கள் மற்றும் கால்நடை வளர்ப்புப் பண்ணைகள் என்பவற்றை உள்ளடக்குகின்றன. இறால் பண்ணைக் கைத்தொழிலின் அபிவிருத்தியை இலக்கிடும் "கிழக்கின் உதயம்" நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் பல செயற்றிட்டங்கள் ஆரம்பித்து வைக்கப்பட்டன. "வடக்கின் வசந்தம்" நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் மீள்குடியேற்றப்பட்ட மீன்பிடியாளர்களுக்கு படகுகளையும் மீன்பிடிக் கருவிகளையும் பகிர்ந்தளித்தல், யாழ்ப்பாணம், நெடுந்தீவு மற்றும் காரைநகரில் மூன்று மீன் சந்தைகளை நிருமாணித்தல், பருத்தித்துறை மற்றும் மன்னாரில் உள்ள மீன்பிடித் துறைமுகங்களை அபிவிருத்தி செய்தல் போன்ற செயற்றிட்டங்கள் வட மாகாணத்தில் மீன்பிடிக் கைத்தொழிலை வழமைக்குக் கொண்டு வருவதை இயலச் செய்யும் விதத்தில் பூர்த்தி செய்யப்பட்டது.

**ஏற்றுமதி மற்றும் உள்நாட்டு வேளாண்மைத் துறையில், பல்வேறு துறைகளிலும் வலியுறுத்தல்கள் அவசியமாகவுள்ளன.** ஏற்றுமதித் துறையில் தேயிலை, இறப்பர் மற்றும் தெங்கின் மீள்நடுகை/ புதிய நடுகையின் தற்போதைய தீவிரம் போதுமானதாக இல்லாததால் இவற்றின் மீள்நடுகை/ புதிய நடுகை அதிகரிக்கப்பட வேண்டும். பிரதான வேளாண்மைப் பொருட்களின் விலைகளுக்கு எதிர்கால அதிர்வுகள் கடத்தப்படும் தாக்கத்தைத் தணிக்கும் பொருட்டு இவற்றுக்கான சமநிலைப்படுத்தும் நிதியங்களை நிறுவுவதும் முக்கியமானதாகும். நெல் துறையில், வளமாக்கியின் பகிர்ந்தளிப்பு வழிமுறைகளை ஒழுங்குமுறைப்படுத்துவது உட்கட்டமைப்பு வசதிகளின் மேம்பாடுகள், புதிய தொழில்நுட்பத்தைப் பின்பற்றல் (தெரிந்தெடுத்த பயிர்களுக்கான சொட்டு நீர்ப்பாசனம், தெளிப்பு முறை மற்றும் பொலித்தீன் குழாய்களூடான

நீர்ப்பாசனம் போன்ற சிறந்த நீர் முகாமைத்துவ முறைகள்), சாத்தியமானவிடத்து பண்ணையை நவீனமயப்படுத்தல் என்பனவும் வேளாண்மைத்துறையில் உற்பத்தித் திறனையும், முதலீட்டையும் அதிகரிப்பதற்கு முக்கியமானவையாகும். பண்ணை உற்பத்திகள், பழங்கள், மரக்கறிகள் அதுபோல் மீன் மற்றும் மீன் உற்பத்திகள் போன்ற வேளாண்மைப் பொருட்களின் பெறுமதி கூட்டப்பட்ட ஏற்றுமதிகளை அதிகரிக்கும் பொருட்டு உணவு பதனிடும் தொழில்நுட்பங்கள், பொதியிடல் மற்றும் அறுவடைக்குப் பின்பான தொழில்நுட்பங்கள் என்பவற்றிலான மேம்பாடுகளில் முதலிடுவது முக்கியமாகும். முன்னுரிமை அடிப்படையில் அபிவிருத்தி செய்ய வேண்டிய ஏனைய துறைகள் சிறந்த விதைகளைக் கொள்வனவு செய்வதில் ஏற்படும் உயர் செலவை வேளாண்மையாளர்கள் தாங்க முடியாததால் அவர்களது பண்ணைகளில் தரமான விதைகளை உற்பத்தி செய்வதற்கு அவர்களை இயலச் செய்வதற்கு வேளாண்மையாளர்களுக்குத் தேவையான தொழில்நுட்ப அறிவை வழங்கல் மற்றும் முன்னேற்றகரமான கலப்பு விதைகளை சந்தையில் கிடைக்கச் செய்தல், பருவகாலமற்ற காலப்பகுதிகளில் நன்மையைப் பெறுவதற்கு தேவைக்கதிகமான அறுவடையினை களஞ்சியப்படுத்தும் தொழில்நுட்பங்களை மேம்படுத்தல், வங்கிக் கடன்களை கூடுதலாகக் கிடைக்கச் செய்தல் என்பவற்றை உள்ளடக்குகிறது.

## கைத்தொழில்

**கைத்தொழில் துறை 2008இன் 5.9 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 4.2 சதவீத வளர்ச்சியைப் பதிவு செய்தது.** சுரங்கமகழ்தல் மற்றும் கல்லுடைத்தல், தயாரிப்பு மற்றும் கட்டடவாக்கம் ஆகிய துணைத் துறைகள் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் மெதுவடைந்தன. எனினும், மின்வலு, வாயு மற்றும் நீர் துணைத் துறை முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் உயர் வீதத்தில் வளர்ச்சியடைந்தது. கைத்தொழில் துறையின் பங்கு 2008இன் மொ.உ.உற்பத்தியின் 28.4 சதவீதத்திலிருந்து 2009இல் 28.6 சதவீதத்திற்கு சிறிதளவால் அதிகரித்தது.

**தயாரிப்புத் துறை வெளியீட்டில் 90 சதவீதத்திற்கும் கூடுதலாக வகைகூறும் தொழிற்சாலைக் கைத்தொழில் 2008இன் 5.0 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 2009இல் 3.4 சதவீத வளர்ச்சியைப் பதிவு செய்தது.** உணவு, பானம் மற்றும் புகையிலை உற்பத்திகள் வகை தவிர்ந்த தொழிற்சாலைக் கைத்தொழிலின் அனைத்து முக்கிய வகைகளும் ஏற்றுமதி மற்றும் இறக்குமதிச் சந்தைகள் இரண்டிலும் கைத்தொழில் பொருட்களுக்கான குறைந்த கேள்வி காரணமாக 2009இல் குறைந்த வளர்ச்சி வீதங்களைப் பதிவு செய்தன. உலகளாவிய பொருளாதார மந்தநிலை பன்னாட்டுச் சந்தைக் கேள்வியை கணிசமானளவில் சுருங்கச் செய்தது. செலவழிக்கத்தக்க வருமானத்தின் சுருக்கம் மற்றும் உள்நாட்டுப் பொருளாதாரச் செயற்பாடுகளிலான மெதுவடைவின் காரணமாக பெருமளவு உள்நாட்டுக் கேள்வியும் ஒடுங்கியது. எனினும், பிரதான ஏற்றுமதி முடிவிடங்களின் பொருளாதாரங்களில் ஏற்பட்ட படிப்படியான மீட்சி, முக்கியமாக புதிதாக விடுவிக்கப்பட்ட வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களிலிருந்தான உள்நாட்டுக் கேள்வியில் ஏற்பட்ட அதிகரிப்பு மற்றும் தோற்றம் பெற்றுவரும் உகந்த பொருளாதாரச் சூழல் காரணமாக தொழிற்சாலைக் கைத்தொழில் 2009இன் இரண்டாம் அரைப்பகுதியிலிருந்து மிதமான மீட்சியை எடுத்துக்காட்டியது.

**அட்டவணை 2.7 — கைத்தொழிலில் கூட்டப்பட்ட பெறுமதி (நிலையான 2002 விலைகளில்)**

| வகை | ரூபா மில்லியன் | | சதவீத மாற்றம் (%) | |
|---|---|---|---|---|
| | 2008 | 2009(அ) | 2008 | 2009(அ) |
| 1.உணவு, குடிபானங்கள், புகையிலை உற்பத்திகள் | 174,794 | 185,142 | 5.2 | 5.9 |
| 2.புடவைகள், அணியும் ஆடைகள் தோல் உற்பத்திகள் | 87,215 | 87,762 | 3.1 | 0.6 |
| 3.மரம், மர உற்பத்திகள் | 1,085 | 1,125 | 2.3 | 3.7 |
| 4.தாள் உற்பத்திகள், வெளியீடு, அச்சுப்பதிப்பு | 1,598 | 1,635 | 6.3 | 2.3 |
| 5.இரசாயனம், பெற்றோலியம், நிலக்கரி, இறப்பர்,பிளாத்திக்கு உற்பத்திகள் | 58,650 | 59,706 | 6.4 | 1.8 |
| 6.உலோகமல்லாக் கனிப்பொருள் உற்பத்திகள் | 15,306 | 14,794 | 5.2 | -3.3 |
| 7.அடிப்படை உலோக உற்பத்திகள் | 958 | 965 | 3.0 | 0.7 |
| 8.உருவமைக்கப்பட்ட உலோக உற்பத்திகள்,பொறிகள் மற்றும் போக்குவரத்துக் கருவிகள் | 31,702 | 32,794 | 5.6 | 3.4 |
| 9.வேறு எங்கும் குறிப்பிடப்படாத தயாரிப்பு உற்பத்திகள் | 1,907 | 2,004 | 11.2 | 5.1 |
| மொத்தம் | 373,215 | 385,927 | 5.0 | 3.4 |

(அ) தற்காலிகமானவை

மூலம்: தொகைமதிப்புப் புள்ளிவிபரத் திணைக்களம்

**ஏற்றுமதி மற்றும் உள்நாட்டுச் சந்தை இரண்டையும் நோக்காகக் கொண்ட கைத்தொழில்கள் 2009இல் கலப்பான செயலாற்றத்தைக் காட்டின.** ஏற்றுமதிச் சந்தையை நோக்காகக் கொண்ட கைத்தொழில்களின் வெளியீட்டுக்கான பிரதான பங்களிப்பாளர்களான அணியும் ஆடைகள், இறப்பரை அடிப்படையாகக் கொண்ட பொருட்கள், வைரம் பதனிடல், இரத்தினக்கல் மற்றும் ஆபரணம் மற்றும் பொறி மற்றும் போக்குவரத்துக்கருவி 2009இல் மெதுவடைவைப் பதிவு செய்திருக்கையில் பெரும்பாலும் உள்நாட்டுச் சந்தையில் கவனம் செலுத்தும் உணவு மற்றும் பானங்கள் கைத்தொழில்கள் குறிப்பாக 2009இன் இரண்டாம் அரைப்பகுதியில் மேம்படத் தொடங்கியது. கட்டடவாக்கத் துணைத் துறையின் படிப்படியான மீட்சி 2009இன் பிற்பகுதியில் சீமெந்து மற்றும் கட்டடப் பொருட்கள் கைத்தொழில்களின் சார்பு ரீதியான உயர் வெளியீட்டில் பிரதிபலிக்கப்பட்டது.

**தொழிற்சாலைக் கைத்தொழில் வெளியீட்டில் 46 சதவீதத்திற்கும் கூடுதலாக பங்களிப்புச் செய்யும் உணவு, பானங்கள் மற்றும் புகையிலை உற்பத்தி வகைகள் 2008இன் 5.2 சதவீத வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 2009இல் 5.9 சதவீதத்தால் அதிகரித்தது.** வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களிலான சந்தை விரிவாக்கம் மற்றும் சுற்றுலாத் துறையின் மேம்பாடடைந்த செயலாற்றத்தால் உதவப்பட்ட இவ் வெளியீட்டிற்கு உணவு, பானங்கள் மற்றும் புகையிலை உற்பத்திவகைகளின் கீழ்வரும் அனைத்துக் கைத்தொழில்களும் பங்களிப்புச் செய்தன. விசுக்கோத்துகள், பானங்கள், பால் மற்றும் தெங்கை அடிப்படையாகக் கொண்ட பொருட்கள் பதனிடப்பட்ட உணவு தயாரிக்கும் கைத்தொழில்கள் 2009இல் அவற்றின் சந்தை விரிவாக்க முன்னேற்பாடுகளை தொடர்ந்து முன்னெடுத்ததுடன் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டுச் சந்தைகளை ஈர்ப்பதற்காக பெறுமதி கூட்டப்பட்ட உயர்தரமுடைய உற்பத்திகள் பலவற்றை அறிமுகப்படுத்தியது. "சகலற்ற முல்தன" நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் உள்நாட்டில் உற்பத்தி செய்யப்பட்ட அரிசி நுகர்வை அதிகரிப்பதற்கும் அரிசி மாவை அடிப்படையாகக் கொண்ட வெதுப்பகப் பொருட்களை ஊக்குவிப்பதற்கும் கைத்தொழில் அபிவிருத்தி அமைச்சு அரிசி மா உற்பத்தி மேம்பாட்டு நிகழ்ச்சித்திட்டத்தை நடைமுறைப்படுத்தியது. பாற்பண்ணைக் கைத்தொழிலின் இயலளவு தொழிற்சாலைகளை


நவீனப்படுத்துவதனூடாகவும் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் புதிய தொழிற்சாலைகளையும் பால் சேகரிப்பு நிலையங்களைத் திறப்பதனூடாகவும் விரிவாக்கப்பட்டது. அரசின் குடிவகை விரோத மற்றும் புகையிலை விரோத முன்னெடுப்புக்களுடன் இணைந்து செல்லும் வகையில் குடிவகை மற்றும் புகையிலை உற்பத்திகளின் வெளியீடு தொடர்ந்து வீழ்ச்சியடைந்தது. சுற்றுலாச் செயற்பாடுகளின் விரைவு மற்றும் சந்தை விரிவாக்கத்துடன் 2010இலும் அதற்கு அப்பாலும் உணவு மற்றும் பானங்கள் கைத்தொழில்கள் விரைந்த வீதத்தில் வளர்ச்சியடையுமென எதிர்பார்க்கப்படுகிறது.

**ஏற்றுமதியை நோக்காகக் கொண்ட புடவை, அணியும் ஆடைகள் மற்றும் தோல் உற்பத்திகள் கைத்தொழில் வகை 2009இல் சிறிய வளர்ச்சியைப் பதிவு செய்தது.** பன்னாட்டுக் கேள்வியிலான வீழ்ச்சி சிறிய மற்றும் நடுத்தர அளவு ஆடைத் தயாரிப்பாளர்களை கடுமையாகப் பாதித்தது. வங்கிகளின் முன்னெச்சரிக்கையுடனான கடன் வழங்கல், உயர் வட்டி வீதங்கள் மற்றும் வங்கிப் பிணையங்களும் இக் கைத்தொழில்களைப் பாதித்தன. இதேவேளை, ஆடைக் கைத்தொழிலிலுள்ள பிரதான பங்கேற்பாளர்கள் உயர்தரமான உற்பத்திகளுக்கான நன்மதிப்பைப் பேணுவதன் மூலமும், உலக வர்ததக அடையாளங்களைக் கொண்ட உற்பத்திகளை உற்பத்தி செய்வதன் மூலமும் பொருட்களை வழங்குவதில் கால எல்லையை நிறைவு செய்வதன் மூலமும் 2009இல் ஏற்றுமதிச் சந்தைகளில் போட்டி வாய்ந்ததாக தொடர்ந்து இருக்க முடிந்தது. பசுமை உற்பத்திகள் மீதான அதிகரித்த கவனம், கூடிய பெறுமதியைக் கொண்ட சிறிய சந்தைகள் மீதான பலமான செறிவு, உலகளாவிய பொருளாதாரச் சூழலின் படிப்படியான மீட்சி என்பன 2009இன் பிற்பகுதியில் ஆடைக் கைத்தொழில் மீட்சியடைவதற்குப் பங்களிப்புச் செய்தது.

**இரசாயனம், பெற்றோலியம், நிலக்கரி, இறப்பர் மற்றும் பிளாத்திக்கு உற்பத்திகள் வகை 2008இன் 6.4 சதவீத வளர்ச்சியுடன் ஒப்பிடுகைளில் 2009இல் 1.8 சதவீதம் கொண்ட குறைந்த வளர்ச்சியைப் பதிவு செய்தது.** இவ்வகையின் குறைந்த செயலாற்றம் மிகப் பெரிய துணை வகையாகவும் ஏற்றுமதி சார்ந்த இரண்டாவது பெரிய சந்தையாகவும் விளங்கிய இறப்பரை அடிப்படையாகக் கொண்ட உற்பத்திகளிலான மெதுவடைவால் பெரும்பாலும் உந்தப்பட்டது. உலகளாவிய பொருளாதார மந்தநிலை மற்றும் குறைந்த போட்டித் தன்மைக்கு இட்டுச் சென்ற அதிகரித்துச் செல்லும் உற்பத்திச் செலவு இறப்பரை அடிப்படையாகக் கொண்ட கைத்தொழிலின் செயலாற்றத்தைப் பாதித்த முக்கிய தடைகளாக விளங்கியது. ஐக்கிய அமெரிக்காவின் கைத்தொழிலின் மோசமான செயலாற்றம் காரணமாக திண்ம டயர்களுக்கான கேள்வி குறிப்பிடத்தக்க வீழ்ச்சியைப் பதிவு செய்தது. இதேவேளை, கட்டவாக்கத் துணைத்துறையின் மெதுவடைவு பிளாத்திக்கு, பிவிசி மற்றும் பூச்சுக் கைத்தொழில்களின் வெளியீட்டைப் பாதித்தது. எனினும், 2009இன் நான்காம் காலாண்டில் படிப்படியான உலகளாவிய பொருளாதார மீட்சியுடன் இறப்பரை அடிப்படையாகக் கொண்ட பொருட்களின் வெளியீடு மேம்பட்டது. இறப்பரை அடிப்படையாகக்கொண்ட பொருட்களின் உள்ளார்ந்த வளத்தை இனங்கண்ட பின்பு உலகின் நான்காவது பெரிய டயர் தயாரிப்புக் கம்பனி உள்நாட்டு திண்ம டயர் உற்பத்தியாளருடன் இணைந்த துணிகரமுயற்சிச் செயற்றிட்டமாக இலங்கையில் முதலிட்டது.

**சீமெந்து மற்றும் கட்டடப் பொருட்களால் கூடுதலாகப் பங்களிப்புச்செய்த உலோகமல்லாக் கனிப்பொருட்கள் வகையின் வெளியீடு கட்டடவாக்கத் துணைத்துறையிலான**

வரைபடம் 2.3 கைத்தொழிலில் கூட்டப்பட்ட பெறுமதியின் உள்ளடக்கம் - 2009 (2002 நிலையான விலைகளில்)




அட்டவணை 2.8 முதலீட்டுச் சபையல்லா தனியார்த்துறைக் கைத்தொல்களின் தொழிற்சாலை இலாப விகிதங்கள் (அ)

| வகை | மொத்த உற்பத்திச் செலவு (ரூபா.மில்லியன்) | | உற்பத்தியின் மொத்தப் பெறுமதி (ரூபா மில்லியன்) | | தொழிற்சாலை இலாப விகிதம் (சதவீதம்) | |
|---|---|---|---|---|---|---|
| | 2008(ஆ)) | 2009((இ) | 2008(ஆ) | 2009(இ) | 2008(ஆ) | 2009(இ) |
| 1. உணவு, குடிபானங்கள், புகையிலை உற்பத்திகள் | 120,090 | 131,619 | 140,703 | 154,492 | 14.7 | 14.8 |
| 2. புடவைகள், அணியும் ஆடைகள், தோல் உற்பத்திகள் | 32,209 | 35,591 | 36,789 | 40,284 | 12.4 | 11.6 |
| 3. மரம், மர உற்பத்திகள் | 2,479 | 2,791 | 2,812 | 3,166 | 11.9 | 11.9 |
| 4. தாள் உற்பத்திகள், வெளியீடு, அச்சுப்பதிப்பு | 8,058 | 8,945 | 9,200 | 10,203 | 12.4 | 12.3 |
| 5. இரசாயனம், பெற்றோலியம், நிலக்கரி, இறப்பர், பிளாத்திக்கு உற்பத்திகள் | 62,234 | 72,067 | 73,519 | 84,767 | 15.3 | 15.0 |
| 6. உலோகமல்லாக் கனிப்பொருள் உற்பத்திகள் | 38,388 | 44,914 | 44,872 | 51,962 | 14.4 | 13.6 |
| 7. அடிப்படை உலோக உற்பத்திகள் | 4,026 | 4,492 | 4,689 | 5,209 | 14.2 | 13.8 |
| 8. உருவமைக்கப்பட்ட உலோக உற்பத்திகள், பொறிகள் மற்றும் போக்குவரத்துக் கருவிகள் | 24,077 | 27,810 | 28,034 | 32,183 | 14.1 | 13.6 |
| 9. வேறு எங்கும் குறிப்பிடப்படாத தயாரிப்பு உற்பத்திகள் | 4,855 | 5,467 | 5,546 | 6,234 | 12.5 | 12.3 |
| மொத்தம் | 296,416 | 333,695 | 346,164 | 388,501 | 14.4 | 14.1 |

(அ) 515 முதலீட்டுச் சபையல்லாத் தனியார்துறை நிறுவனங்களிலிருந்து பெறப்பட்ட தகவல்களை அடிப்படையாகக் கொண்டது.
(ஆ) திருத்தியமைக்கப்பட்டவை
(இ) தற்காலிகமானவை

மூலம் : இலங்கை மத்திய வங்கி

அட்டவணை 2.9

**முதலீட்டுச் சபையல்லா தனியார்த்துறைக் கைத்தொழில்களின் உள்நாட்டுச் செலவு அமைப்பு (அ)**
**(மொத்த உற்பத்திச் செலவின் சதவீதமாக)**

| வகை | வலுவும் எரிபொருளும் | | கூலி | | மூலப்பொருட்கள் | | வட்டி | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | 2008 | 2009 | 2008 | 2009 | 2008 | 2009 | 2008 | 2009 |
| 1 . உணவு, குடிபானங்கள், புகையிலை உற்பத்திகள் | 4.1 | 3.8 | 10.5 | 10.7 | 40.1 | 40.8 | 1.8 | 2.1 |
| 2 . புடவைகள், அணியும் ஆடைகள், தோல் உற்பத்திகள் | 5.4 | 5.2 | 15.4 | 15.5 | 13.6 | 13.8 | 3.0 | 3.4 |
| 3 . மரம், மர உற்பத்திகள் | 10.0 | 10.2 | 16.5 | 16.7 | 33.3 | 33.6 | 4.8 | 5.0 |
| 4 . தாள் உற்பத்திகள், வெளியீடு, அச்சுப்பதிப்பு | 4.8 | 4.9 | 13.2 | 13.3 | 19.8 | 20.2 | 3.9 | 4.2 |
| 5 . இரசாயனம், பெற்றோலியம், நிலக்கரி, இறப்பர், பிளாத்திக்கு உற்பத்திகள் | 7.5 | 7.1 | 13.8 | 13.9 | 31.2 | 31.5 | 4.2 | 4.4 |
| 6 . உலோகமல்லாக் கனிப்பொருள் உற்பத்திகள் | 21.6 | 21.4 | 15.4 | 15.5 | 29.8 | 30.1 | 4.1 | 4.5 |
| 7 . அடிப்படை உலோக உற்பத்திகள் | 10.6 | 10.3 | 11.3 | 11.1 | 36.5 | 36.4 | 2.8 | 2.9 |
| 8 . உருவமைக்கப்பட்ட உலோக உற்பத்திகள் பொறிகள் மற்றும் போக்குவரத்துக் கருவி | 5.9 | 5.7 | 12.8 | 12.9 | 27.4 | 27.6 | 4.7 | 5.2 |
| 9 . வேறு எங்கும் குறிப்பிடப்படாத தயாரிப்பு உற்பத்திகள் | 5.9 | 5.8 | 12.3 | 12.2 | 34.8 | 35.0 | 1.9 | 2.1 |
| மொத்தம் | 7.2 | 7.0 | 12.7 | 12.8 | 33.2 | 33.5 | 3.0 | 3.3 |

(அ) 515 முதலீட்டுச் சபையால்லாத் தனியார்துறை நிறுவனங்களிலிருந்து பெறப்பட்ட தகவல்களை அடிப்படையாகக் கொண்டது.

மூலம் : இலங்கை மத்திய வங்கி

**மெதுவடைவு காரணமாக 2009இல் 3.3 சதவீதம் கொண்ட எதிர்க்கணிய வளர்ச்சியைப் பதிவு செய்தது.** சந்தையை மீள அடைவதற்கு அழகு மற்றும் நவீனத்துவத்தில் கூடியளவு ஒருமுகப்படுத்தப்பட்டு கூடிய பெறுமதியைக் கொண்டுள்ள சிறிய சந்தைகளை அடைவதற்கு மட்பாண்டம் மற்றும் ஓட்டுக் கைத்தொழில் பல்வேறு உற்பத்திகளை ஆரம்பித்தது. வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் புனருத்தாபனம் மற்றும் மீள் நிருமாணம் தொடர்ந்து இடம்பெற்றமை, பிரதான உட்கட்டமைப்புச் செயற்றிட்டங்களை நடைமுறைப்படுத்தப்பட்டமை, தனியார் கட்டடவாக்கச் செயற்பாடுகளின் மீட்சி மற்றும் கடன்பெறும் செலவு குறைக்கப்பட்டமை இக் கைத்தொழில்களின் வளர்ச்சி வாய்ப்புக்களுக்ககுத் தூண்டுதலை வழங்கும். 2009இல் சாப்பாட்டு மேசைப் பொருள், பதனிடப்பட்ட வைரம், இரத்தினக்கற்கள், மற்றும் ஆபரணத்திற்கான ஒடுங்கிய கேள்வி பிரதான வர்த்தகப் பங்காளர் நாடுகளிலான பொருளாதார மந்த நிலையிலிருந்தான மீட்சியுடன் தொடர்ந்து முன்னேற்றமடையுமென எதிர்பார்க்கப்படுகிறது.

**உருவமைக்கப்பட்ட உலோக உற்பத்திகள், பொறி மற்றும் போக்குவரத்துக் கருவி வகையின் வளர்ச்சி 2009இல் மெதுவடைந்தது.** கப்பல மற்றும் படகு கட்டல், மின்னியல் மற்றும் இலத்திரனியல் பொருத்தல் கைத்தொழல்களை உள்ளடக்கும் இத்துறையின் வளர்ச்சி பிரதான வர்த்தகப் பங்காளர்களின் பொருளாதாரங்களின் ஆழமான பொருளாதார மெதுவடைவாலும் வீழ்ச்சியடைந்த உள்நாட்டுக் கேள்வியாலும் பாதிப்படைந்தது. மீன்பிடிப் படகுகளின் தயாரிப்புக் கைத்தொழில்கள் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களிலிருந்தான அதிகரித்த கேள்வியுடன் இவ்வாண்டின் பிற்பகுதியில் நன்மையடைந்தன. உலகளாவிய வர்த்தகச் செயற்பாடுகளின் அதிகரித்துச் செல்லும் போக்கு வருங்காலத்தில் கப்பல் கட்டல் மற்றும் திருத்த வேலைக் கைத்தொழிலின் வளர்ச்சி உத்வேகத்தை வசதிப்படுத்துமென எதிர்பார்க்கப்படுகிறது. இவ்வகையின் கீழ் வளர்ச்சியடைந்துவரும் கைத்தொழிலான ஊர்தி பொருத்தும் கைத்தொழில் 2009இல் உள்நாட்டுச் சந்தைக்கு சூரிய ஒளியால் மின்னேற்றப்படும் மின்னியல் உந்து ஈருருளிகளை அறிமுகப்படுத்தியது. பன்னாட்டு மற்றும் உள்நாட்டுச் சந்தைகளில் போதிய உள்ளார்ந்த வளத்தைக் கொண்டுள்ள மின்னியல் மற்றும் இலத்திரனியல் கைத்தொழிலுக்கு கைத்தொழில் பரவலாக்கமும் கூடிய முதலீடும் அத்தியாவசியமாகும்.

**இலங்கை, பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் பெற்றோலியத் தூய்மியின் குறைந்த வெளியீட்டின் காரணமாக முக்கிய அரசதுறைக் கைத்தொழில் வெளியீடு 2008 உடன் ஒப்பிடுகையில் 2009இல் மெதுவடைவைப் பதிவு செய்தது.** பல ஆண்டுகளாக அரசதுறை வெளியீட்டின் பிரதான பங்காளரான இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனம் 2009இல் அரசதுறை வெளியீட்டின் 95 சதவீதத்திற்கும் கூடுதலானதற்குப் பங்களிப்புச் செய்தது. எனினும், தேசிய கடதாசிக் கம்பனி, அரச மரக் கூட்டுத்தாபனம், இலங்கை இறப்பர் தயாரிப்பு மற்றும் ஏற்றுமதிக் கூட்டுத்தாபனம் என்பன 2009இல் சாதகமான வளர்ச்சியைப் பதிவு செய்தன. அரசதுறைக் கைத்தொழில்களை மீள ஒழுங்குமுறைப்படுத்தும் அரசின் கொள்கையுடன் தேசத்தைக் கட்டியெழுப்பும் அமைச்சு தொழில்நுட்ப முன்னேற்றத்திற்கு உதவியதுடன் அரச நிறுவனங்களுக்கான கடதாசித் தேவைகளை வழங்குவதற்கு தேசிய கடதாசிக் கம்பனியின் தொழிற்பாட்டை ஒழுங்கு முறைப்படுத்தியதுடன் செயலிழந்த கடதாசித் தொழிற்சாலைகளை மீளத் திறந்தது. இலங்கைக் கனிப்பொருள் லிமிட்டெட்டின் வெளியீடு உலகளாவிய பொருளாதார மந்த நிலையால் பாதிப்படைந்தது.

**முதலீட்டுச்சபையல்லா தனியார்துறைக் கைத்தொழிலில் தொழிற்சாலை இலாப விகிதம் 2008இல் பதிவு செய்யப்பட்ட சிறிய வீழ்ச்சியைத் தொடர்ந்து 2.1 சதவீதத்தால் மேலும் வீழ்ச்சியடைந்தது.** 2009இல் இலாபகரத் தன்மையில் ஏற்பட்ட வீழ்ச்சி மூலப் பொருட்கள், நிதி மற்றும் கூலிகளின் அதிகரித்த செலவுகளுக்கு மத்தியில் விற்பனையில் ஏற்பட்ட வீழ்ச்சியினால் பெரிதும் ஏற்பட்டதாகும். கைத்தொழில் துறையிலுள்ள முக்கிய பங்கேற்பாளர்கள் முன்னேற்றமடைந்த உற்பத்தித்திறன் மற்றும் வினைத்திறன், ஒழுங்கு முறைப்படுத்தல் தொழிற்பாடுகள், சந்தைப்படுத்தும் செலவை குறைவாக வைத்திருத்தல், சில வசதிகளை வெளி மூலங்களிலிருந்து பெற்றுக் கொள்ளல் என்பவற்றூடாக உற்பத்திச் செலவை குறைப்பதற்கு வழிமுறைகளை எடுத்தனர். 2009இன் மூன்றாம் காலாண்டிலிருந்து ஏற்றுமதி மற்றும் இறக்குமதிச் சந்தைகள் இரண்டினதும் முன்னேற்றத்துடன் கைத்தொழில்களின் இலாப மட்டம் மீட்சியடையத் தொடங்கியது. கூலிச் செலவுகளைக் கட்டுப்படுத்துவதற்கு கைத்தொழிலாளர்கள் புதிய ஆட்சேர்ப்புகளைப் பின் போட்டனர். ஒப்பந்தங்களின் எண்ணிக்கையைக் குறைத்தனர். உற்பத்தித்திறன் மேம்பாடுகளைப் பின்பற்றும் அதேவேளை மேலதிக நேர வேலையை மட்டுப்படுத்தினர். தொழிற்சாலைக் கைத்தொழிலின்

**அட்டவணை 2.10 முதலீட்டுச் சபையல்லா தனியார் துறைக் கைத்தொழில்களின் தொழிலாளர் உற்பத்தித்திறன் சுட்டெண் (அ)**

1995 =100

| வகை | 2008 | 2009 | மாற்றம் (%) |
|---|---|---|---|
| 1 . உணவு, குடிபானங்கள், புகையிலை உற்பத்திகள் | 142.4 | 146.0 | 2.5 |
| 2 . புடவைகள் அணியும் ஆடைகள் தோல் உற்பத்திகள் | 125.7 | 127.6 | 1.5 |
| 3 . மரம், மர உற்பத்திகள் | 111.0 | 114.0 | 2.7 |
| 4 . தாள் உற்பத்திகள், வெளியீடு, அச்சுப்பதிப்பு | 111.4 | 114.0 | 2.3 |
| 5 . இரசாயனம், பெற்றோலியம், நிலக்கரி, இறப்பர், பிளாத்திக்கு உற்பத்திகள் | 155.4 | 159.4 | 2.6 |
| 6 . உலோகமல்லாக் கனிப்பொருள் உற்பத்திகள் | 122.7 | 123.8 | 0.9 |
| 7 . அடிப்படை உலோக உற்பத்திகள் | 109.6 | 110.8 | 1.1 |
| 8 . உருவமைக்கப்பட்ட உலோக உற்பத்திகள் பொறிகள் மற்றும் போக்குவரத்துக் கருவி | 135.8 | 139.1 | 2.4 |
| 9 . வேறு எங்கும் குறிப்பிடப்படாத தயாரிப்பு உற்பத்திகள் | 120.3 | 122.9 | 2.2 |
| மொத்தம் | 132.1 | 134.7 | 2.0 |

(அ) 515 முதலீட்டுச்சபையல்லாத் தனியார்துறை நிறுவனங்களிலிருந்து பெறப்பட்ட தகவல்களை அடிப்படையாகக் கொண்டது.

மூலம்: இலங்கை மத்திய வங்கி

மொத்த உற்பத்திச்செலவின் சதவிதமாக வலு மற்றும் எரிபொருளின் விலைகளின் குறைப்புடன் 2.8 சதவீதத்தால் வீழ்ச்சியடைந்திருக்கையில் உள்நாட்டு மூலப்பொருட்களின் செலவு 0.9 சதவீதத்தால் அதிகரித்தது.

**நிச்சயமற்ற உலகளாவிய நிலைமைகளால் ஏற்படுத்தப்பட்ட சவால்களுக்கு முகம் கொடுப்பதற்கு அநேகமான இலங்கை உற்பத்தியாளர்கள் புதிய மற்றும் கூடிய பெறுமதியைக் கொண்ட சிறு சந்தைகளை மையப்படுத்தி பொருட்களைப் பரவலாக்குவதன் மூலம் நேரத்துடனான முன்னேற்பாட்டு நடவடிக்கையை எடுத்தனர்.** குறிப்பாக, ஆடைத்துறையிலுள்ள தயாரிப்பாளர்கள் சூழல் சிநேகமான தயாரிப்பு நடைமுறைகள் மற்றும் பன்னாட்டு தொழிலாளர் நியமங்களால் அவர்களின் உற்பத்திகளை வேறுபடுத்துவதற்கான வழிமுறைகளை மேற்கொண்டனர். பரஸ்பரமற்ற வர்த்தக உடன்படிக்கைகள் மீது அளவுக்கதிகமாக தங்கியிருத்தல் நீடித்து நிலைத்திருக்கமாட்டாததால் கைத்தொழிலாளர்கள் உற்பத்தியில் உற்பத்தித் திறனையும் வினைத்திறனையும் அதிகரிக்க வேண்டும்.

**அரசு 2009இல் கைத்தொழில்துறையின் அபிவிருத்தியில் தீவிரமாக ஈடுபட்டு பிராந்திய கைத்தொழில்மயப்படுத்துதல் மற்றும் சிறிய மற்றும் நடுத்தர அளவு கைத்தொழில்களில் கூடிய கவனம் செலுத்துகிறது.** இது குறிப்பாக வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களிலுள்ள செயலிழந்த தொழிற்சாலைகளை மீளத் திறப்பதில் கவனம் செலுத்தும் அதே வேளையில் வரவு செலவுத் திட்டச் சலுகைகள், நிதியியல் மற்றும் தொழில்நுட்ப உதவி, உட்கட்டமைப்பு வசதிகளைத் தரமுயர்த்தல், அனைத்து மாவட்டங்களையும் உள்ளடக்கி கைத்தொழில் பேட்டைகளை நிறுவுதல் என்பவற்றை வழங்குவதன் மூலம் சமமான கைத்தொழில் அபிவிருத்திக்கு உதவியது. கைத்தொழில் தளத்தை பிராந்திய மயப்படுத்துவதில் கவனம் செலுத்தும் "கமற்ற கா்மாந்த" மற்றும் "நபயும் சிறிலங்கா" - 300 தொழில் முயற்சி நிகழ்ச்சித் திட்டம் போன்ற பல சிறப்பு நிகழ்ச்சித் திட்டங்கள் அரசால் நடைமுறைப்படுத்தப்படும் அதே வேளையில் 2009 இறுதியில் "கமற்ற கா்மாந்த" நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் 132 செயற்றிட்டங்களுக்கு ஒப்புதலளிக்கப்பட்டதுடன், இதில் 46 கைத்தொழில்கள் வர்த்தகத் தொழிற்பாட்டிலும் 33 கைத்தொழல்கள் தொழிற்பாடுகளை ஆரம்பிப்பதற்கான பல்வேறு கட்டங்களிலும் காணப்பட்டன. வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் புதிதாக விடுவிக்கப்பட்ட பகுதிகளின் புனருத்தாபனம் மற்றும் அபிவிருத்திக்காக "வடக்கின் வசந்தம்" மற்றும் "கிழக்கின் உதயம்" நிகழ்ச்சித் திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டன.

**பிராந்தியங்களில் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு முதலீடுகளை ஊக்குவிப்பதற்கு கைத்தொழில் பேட்டைகளையும் சிறப்பு பொருளாதார வலயங்களையும் நிறுவுதல் செயற்பாட்டில் இருந்தது.** கைத்தொழில் அபிவிருத்தி அமைச்சால் ஆரம்பிக்கப்பட்ட பிரதேச கைத்தொழில் அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் கைத்தொழில் பேட்டை நிறுவுவது தொடர்பாக நடைபெற்றுவரும் பணி விரைவாக முன்னேறி வருகிறது. புத்தளம் கைத்தொழில் பேட்டையின் உட்கட்டமைப்பு அபிவிருத்தி வேலைகள் பூர்த்தியுறும் நிலையில் உள்ளது. மேலும் எம்பிலிப்பிட்டி, கலிகமுவ என்பவற்றின் உட்கட்டமைப்பு அபிவிருத்தியின் குறிப்பிடத்தக்க பகுதி பூர்த்தி செய்யப்பட்டதுடன் பலேகொடவத்த (மத்துகம) மற்றும் மாதம்பையிலுள்ள கைத்தொழில் பேட்டைகளின் ஆரம்பவேலை நடைபெற்று வருகிறது. திருகோணமலை (கப்பல்துறை) கைத்தொழில் பேட்டையின் உட்கட்டமைப்பு அபிவிருத்தி வேலை 2009இல் பூர்த்தி செய்யப்பட்டது. தொழில் முயற்சி அபிவிருத்தி மற்றும் முதலீட்டு ஊக்குவிப்பு அமைச்சு ஹொறானையில் புடவை பதனிடும் வலயத்தின் ஆரம்ப வேலையையும் பூர்த்தி செய்ததுடன் திருகோணமலை, புத்தளம், அம்பாறை, அம்பாந்தோட்டை மற்றும் மட்டக்களப்பில் உள்ள ஐந்து சிறப்புப் பொருளாதார வலயங்களின் ஆரம்ப வேலையை ஆரம்பித்தது.

**2009இல் கைத்தொழில் துறையின் அபிவிருத்திக்கான நிறுவன ரீதியிலான உதவிகள் தொடர்ந்தது.** முதலீட்டுச் சபை "நிபயும் சிறிலங்கா" பிரதேச கைத்தொழில் மயமாக்கல் நிகழ்ச்சித்திட்டத்தின் நடைமுறைப்படுத்தலை தொடர்ந்து நிறைவேற்றியதுடன், இதன் கீழ் 58 புதிய கைத்தொழில்கள் நிறுவப்பட்டன, 18 நலிவடைந்த கைத்தொழில்கள் புதுப்பிக்கப்பட்டன, 5 கைத்தொழில்கள் விரிவாக்கப்பட்ட அதேவேளையில் 8 தொழிற்சாலைகள் கொழும்பு மற்றும் கம்பகா மாவட்டங்களுக்கு வெளியே அவற்றை மீள அமைப்பதற்கு ஒப்புதல் வழங்கப்பட்டது. மேலும், ஏற்றுமதி அபிவிருத்தி சபை ஏற்றுமதிச் சந்தையை நோக்காகக் கொண்ட கைத்தொழில்களை ஊக்குவிப்பதற்கு வர்த்தக கண்காட்சிகள், பொருட்காட்சிகள், பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் ஏனைய பல செயற்பாடுகளை ஒழுங்கு செய்தது. வேளாண்மையை அடிப்படையாகக் கொண்ட கைத்தொழில்களின் பெறுமதிகூட்டலை அதிகரிப்பதற்கு வரவு செலவுத்திட்டம் 2009இல் அறிவிக்கப்பட்டவாறு ஏற்றுமதி அபிவிருத்திச்சபை அனைத்து ஒன்பது மாகாணங்களிலும் வேளாண்மை ஏற்றுமதி வலையங்களை நிறுவுவதற்கும் முன்னெடுப்புகளை மேற்கொண்டது. 2009இல் உலக எபி (EFFZE) விருதை வென்ற முதலாவது ஆசிய வர்த்தக அடையாளச் சின்னமான "பழி பாவமற்ற ஆடைகள்" உலகளாவிய சந்தைப்படுத்தல் பிரசாரத்தின் கட்டம் III ஐ இணைந்த ஆடைகள் அமைப்பின் கூட்டம் நடத்தியது. துல்கிரியவிலுள்ள மாஸ் (MAS) துணி வகைப் பேட்டையில் அமைந்துள்ள ஆடைப் புத்தாக்கம் மற்றும் பயிற்சி நிலையம் ஆடைக் கைத்தொழிலில் மனிதவள அபிவிருத்தியில் தொடர்ந்து ஈடுபட்டது. இயற்கையான இரத்தினக்கற்களை வெப்பத்தின் மூலம் கையாளப்பட்ட கற்களிலிருந்து வேறுபடுத்தி பரிசோதனை அறிக்கைகளை வழங்குவதற்கும் பன்னாட்டு நியமங்களின்படி அருமையாகக்

கிடைக்கும் இரத்தினக்கற்களுக்கு உறுதியளிப்பதற்கும் இரத்தினக்கற்கள் பரிசோதனை ஆய்வுகூடத்தை நிறுவுவதற்கான அனைத்து ஒழுங்குகளையும் தேசிய இரத்தினக்கற்கள் மற்றும் ஆபரண அதிகாரசபை இறுதிப்படுத்தியது. இரத்தினக்கற்கள் மற்றும் ஆபரணத் துறையின் அபிவிருத்தியின் முக்கியத்தை தெளிவாக அறிந்ததன் மூலம் வங்கிக் கணக்குகளிலான வெளிநாட்டுச் செலாவணி வருமானத்தின் 50 சதவீதம் மூலப்பொருட்களின் இறக்குமதிகளுக்காக பயன்படுத்தப்படுவதற்கு அனுமதிக்கப்பட்ட அதேவேளை இரத்தினக்கல் மற்றும் ஆபரணக் கைத்தொழிலுக்கு கொடுகடன் வசதிகளை நீடிப்பதற்கு வங்கிகளை ஊக்கப்படுத்துவதற்காக கொடுகடன் உத்தரவாதத் திட்டமொன்று இலங்கை மத்திய வங்கியால் அறிமுகப்படுத்தப்பட்டது.

**கைத்தொழில் பணி பணியகத்தின் நிபுணத்துவப் பணிகளின் உதவியுடன் கைத்தொழில் அபிவிருத்தி அமைச்சு 2009இல் அதன் உற்பத்தித்திறன் மேம்பாட்டு நிகழ்ச்சித் திட்டத்தின் இரண்டாம் கட்டத்தை தொடர்ந்து மேற்கொண்டது.** தேசிய உற்பத்தித் திறன் செயலகம் உற்பத்தித்திறன் மீதான அதன் வருடாந்தப் போட்டியை நடத்தியது. தொழில் உறவுகள் மனிதவலு அமைச்சு உலகளாவிய நிதியியல் நெருக்கடியிலிருந்து எழும் தொழில் இழப்பைத் தீர்ப்பதற்கு அவசர திருத்த வழிமுறையாக உத்தேசிக்கப்பட்ட தொழிலின்மை நன்மை காப்புறுதித் திட்டத்தினூடாக நிவாரணத்தை வழங்குவதற்கு ஆர்வலர்களின் இணக்கத்துடன் முறைமையியலை உருவாக்குவதற்கு நடவடிக்கையை ஆரம்பித்தது.

**உலகளாவிய பொருளாதார நெருக்கடிக்கு முகங்கொடுப்பதற்காக கைத்தொழில் மற்றும் பாதிக்கப்பட்ட ஏனைய துறைகளுக்கான சிறப்புத் தூண்டல் பொதியை வழங்குவதற்கு அரசு உரிய நேரத்தில் வழிமுறைகைளை மேற்கொண்டது.** இதன்படி, ஏற்றுமதிக்கான உயர் பெறுமதி கூட்டப்பட்ட பொருளைத் தயாரிக்கும் கைத்தொழில் நிறுவனங்கள்மீது விதிக்கப்பட்ட பொருளாதாரச் சேவைக் கட்டணம் ஒரு ஆண்டு காலப்பகுதிக்கு நீக்கப்பட்டது. இறப்பர் உற்பத்தித் தயாரிப்பாளர்கள் இறப்பர் வளர்ப்போரிடமிருந்து கிலோக்கிறாமொன்றுக்கு ரூ.150 கொண்ட உத்தரவாதமளிக்கப்பட்ட விலையில் லேற்றெக்ஸ் இறப்பரைக் கொள்வனவு செய்வதற்கு சலுகைகள் வழங்கப்பட்டன. இத்துடன், ஆகக் குறைந்தது 2008இல் நிலவிய மட்டத்தில் தொழில் நிலையையும் வருமான உழைப்புக்களையும் பேணிய ஆடை மற்றும் தோல் உற்பத்திகளின் தயாரிப்பாளர்களுக்கு உற்பத்தி உதவுதொகை வழங்கப்பட்டது. மேலும் இலங்கை மின்சார சபையால் விதிக்கப்பட்ட எரிபொருள் சீராக்கக் கட்டணம் 2009இல் நீக்கப்பட்டது.

**புதிய கண்டுபிடிப்புக்கள் மற்றும் புதிய தொழில்நுட்பங்கள் மீதான முதலீடு கைத்தொழில் துறையின் வளர்ச்சியை முன்னெடுத்துச் செல்வதற்கு தவிர்க்க முடியாததாகும்.** அரசு மற்றும் தனியார் துறையால் மேற்கொள்ளப்படும் இணைந்த முயற்சியாக இலங்கை நனோ தொழில்நுட்ப நிறுவனத்தை நிறுவுதல் இலங்கை உற்பத்திகளுக்கு பெறுமதியைக் கூட்டுவதுடன் பன்னாட்டுச் சந்தையில் அவற்றின் போட்டித் தன்மையையும் அதிகரிக்கிறது. இம்முன்னெடுப்புக்கள் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தியில் பெற்ற கல்விசார் அறிவிற்கு புதியவற்றை புகுத்தும் வர்த்தக ரீதியாக நீடித்து நிலைத்திருக்கும் பொருட்கள் மற்றும் பணிகளாக உருமாற்றுவதை நோக்கமாகக் கொண்டுள்ளன.

**2009இல் சிறிய மற்றும் நடுத்தர தொழில் முயற்சிகளுக்கான வசதிப்படுத்தல் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டது.** சிறிய மற்றும் நடுத்தர தொழில் முயற்சிகளால் எதிர்கொள்ளப்பட்ட பிரச்சனைகளையும் சவால்களையும் இனங்காண்பதற்கும் இத் துறையின் அபிவிருத்திக்கான விதந்துரைப்புக்களை மேற்கொள்வதற்குமாக ஆசிய சிறிய மற்றும் நடுத்தர தொழில் முயற்சிகளின் ஆசிய உச்சி மாநாடு 2009 நடத்தப்பட்டது. இலங்கை வர்த்தக மற்றும் கைத்தொழில் சம்மேளனம் சிறிய மற்றும் நடுத்தர தொழில் முயற்சிகள் போட்டித்தன்மை வாய்ந்ததாகவும், சமூகப் பொறுப்பாண்மை வாய்ந்ததாகவும் சூழல் சிநேகபூர்வமானதாகவும் இருப்பதற்கான பல்வேறு பணிகளைத் தொடர்ந்து வழங்கியதுடன் கொழும்பிலும், வெளியிடங்களிலும் ஒரே கடையில் அனைத்தையும் பெற்றுக்கொள்ளல் என்பதனூடாக சிறிய மற்றும் நடுத்தர தொழில் முயற்சிகளுக்கு உதவிப் பணிகளை வழங்குவதற்கு "துணிகர தொழில் முயற்சி - இலங்கை" என பெயரிடப்பட்ட நிகழ்ச்சித்திட்டத்தை ஆரம்பித்தது. பன்னாட்டு நிதிக் கூட்டுத்தாபனம் மாவட்ட வர்த்தக சம்மேளனத்துடன் இணைந்து வியாபாரச் தேர்ச்சிகளை அபிவிருத்தி செய்வதற்கு இலங்கையின் கிராமப் பகுதிகளில் "சிறிய மற்றும் நடுத்தர தொழில் முயற்சி அபிவிருத்திக் குழுக்கள்" என அறியப்படும் வியாபாரக் குழுக்களை நிறுவும் செயல்முறையில் ஈடுபட்டுள்ளது.

**வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்கள் விடுவிக்கப்பட்டதன் மூலம் அப்பகுதியிலுள்ள மக்களின் வாழ்க்கைத் தரங்களை உயர்த்துவதற்கு சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சி அபிவிருத்தி மிகவும் முக்கியமாக உள்ளது.** வட மாகாணத் திலுள்ள தொழில் முயற்சியாளர் பொருளாதாரச் செயற்பாடுகளை மீள ஆரம்பிப்பதற்கு நிதியியல் உதவியை வழங்குவதற்காக "வடக்கின் எழுச்சி" என்ற சிறப்புக் கடன் திட்டத்தை இலங்கை மத்திய வங்கி அறிமுகப்படுத்தியது. இதேவேளை, இலங்கை தேசிய வர்த்தக சம்மேளனம் புதிய தொழில்வாய்ப்பு வசதிகளை விரிவாக்குவதற்கும், உருவாக்குவதற்குமாக வட மாகாணத்தில் பொறி மற்றும் கருவியைப் பகிர்ந்தளித்தது. கைத்தொழில் அபிவிருத்திச் சபை உற்பத்திச் செயல்முறையை மேம்படுத்துவதற்கு யாழ்ப்பாணத்திலுள்ள சிறிய மற்றும் நடுத்தர தொழில் முயற்சிகளுக்கான பயிற்சி நிகழ்ச்சித்திட்டத்தை நடத்தியது. சிறிய மற்றும் நடுத்தர தொழில் முயற்சிகளைத் தொடங்குவதற்கும், விரிவாக்குவதற்கும் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் நுண்பாக நிதிச் செயற்பாடுகளை விரிவாக்குவதற்கும் மிகப் பெரிய வாய்ப்புக்கள் காணப்படுகின்றன.

**சிறிய மற்றும் நடுத்தர தொழில் முயற்சிகளின் அபிவிருத்தியை வசதிப்படுத்தும் நோக்கத்திற்காக நிறுவப்பட்ட லங்காபுத்ர அபிவிருத்தி வங்கி உள்ளிட்ட பல்வேறு நிறுவனங்கள் இத் துறைக்கு நிதியியல் மற்றும் தொழில்நுட்ப உதவியைத் தொடர்ந்து வழங்கின.** லங்காபுத்ர அபிவிருத்தி வங்கி கைத்தொழில் அபிவிருத்திச் சபையுடன் இணைந்து கிராமிய மட்டத்திலுள்ள சிறிய மற்றும் நடுத்தர தொழில் முயற்சிகளுக்கு அல்லது சுய வேலைவாய்ப்பு துணிகர தொழில் முயற்சிகளுக்கு குறைந்த வட்டியில் "லக்கம்" கடன்திட்டத்தை ஆரம்பித்தது. லங்காபுத்ர அபிவிருத்தி வங்கி "சியபத் புபுடுவ" என்ற சிறிய மற்றும் நடுத்தர தொழில் முயற்சித் துறையிலுள்ள இளம் தொழில் முயற்சியாளர்களுக்கு அதிகாரமளிக்கும் இன்னுமொரு கடன் திட்டத்தையும் அறிமுகப்படுத்தியது. ஆசிய அபிவிருத்தி வங்கியின் வர்த்தக நிதி வசதிப்படுத்தல் நிகழ்ச்சித்திட்டத்தின்

கீழ் சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சித் துறையிலுள்ள உள்ளூர் நிறுவனங்களுக்கும் தொழில் முயற்சியாளர்களுக்குமான வர்த்தக நிதியிடலுக்கான வசதிகள் கிடைக்கத்தக்கதாக இருக்கின்றன. மேலும், வங்கித்துறையிலிருந்து நிதி வசதிகளைப் பெறுவதற்கு குறைந்த பணவீக்கத்துடன் இணைந்து செல்லும் விதத்தில் வட்டி வீதங்களிலான குறைப்பும் சிறிய மற்றும் நடுத்தர தொழில் முயற்சிகளுக்கு உதவின.

**சுரங்கமகழ்தல் மற்றும் கல்லுடைத்தல் துணைத் துறையிலான வளர்ச்சி 2008இன் 12.8 சதவீதம் கொண்ட உயர் வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 2009இல் 8.2 சதவீதமாக விளங்கியது.** இரத்தினக்கல் அகழ்தல் துறை 17.2 சதவீதத்தால் சுருக்கமடைந்திருக்கையில் ஏனைய அகழ்வுச் செயற்பாடுகள் பெறுமதி கூட்டப்பட்ட நியதிகளில் 18.1 சதவீதத்தால் விரிவடைந்தன. இரத்தினக்கல் அகழ்தலிலான மெதுவடைவு இலங்கை மத்திய வங்கியால் தொகுக்கப்பட்ட சுட்டெண்களால் எடுத்துக்காட்டப்பட்டவாறு இரத்தினக் கற்களின் அளவு நியதிகளில் 10.1 சதவீத சுருக்கத்தைப் பிரதிபலித்தது. இது பன்னாட்டுச் சந்தைகளில் நிலவிய பாதகமான கேள்வி நிலைமைகளால் ஏற்பட்டது.

**ஏற்றுமதி வேளாண்மைப் பொருட்களுக்கான பன்னாட்டுச் சந்தைகளிலான பாதகமான அபிவிருத்திகள் மற்றும் பாதகமான வானிலை நிலைமைகள் காரணமாக தேயிலை உற்பத்தியில் ஏற்பட்ட வீழ்ச்சி ஏற்றுமதி பதனிடல் துணைத் துறையிலான வளர்ச்சி 0.7 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைய வழிவகுத்தது.** முன்னைய ஆண்டில் தொடர்பான வளர்ச்சி 5.3 சதவீதமாகும்.

**2008இல் 4.5 சதவீதத்தால் வளர்ச்சியடைந்த குடிசைக் கைத்தொழில் துணைத்துறை 2009இல் 3.3 சதவீத வளர்ச்சியைப் பதிவு செய்தது.** சிறிய அளவிலான நிருமாணச் செயற்பாடுகள், கைத்தறிகள் மற்றும் தைத்தல் செயற்பாடுகளில் ஏற்பட்ட வீழ்ச்சி, நெல் உற்பத்தியில் ஏற்பட்ட சுருக்கத்தால் விளைவிக்கப்பட்ட நெல் குத்தும் செயற்பாடுகளுக்கான குறைந்த கேள்வி, பொதுவாக ஒட்டுமொத்த பொருளாதாரச் செயற்பாடுகளில் ஏற்பட்ட மெதுவடைவு இத் துறையின் விரிவாக்கத்தை எதிர்மறையாகப் பாதித்தது.

**2008இல் 2.7 சதவீதத்தால் வளர்ச்சியடைந்த மின்வலு, வாயு மற்றும் நீர் துணைத் துறை 2009இல் 3.7 சதவீதம் கொண்ட உயர் வளர்ச்சியைப் பதிவு செய்தது.** இத் துறையினுள், மின்வலுத் துணைத் துறை 3.7 சதவீதத்தால் வளர்ச்சியடைந்தது. உயர் பெறுமதி கூட்டலைக் கொண்டுள்ள நீர் மின்வலு உருவாக்கம் 5.6 சதவீதத்தால் சுருக்கமடைந்திருக்கையில் வெப்ப மின்வலு உருவாக்கம் 3.7 சதவீதத்தால் அதிகரித்தது. வாயுத் துணைத் துறையிலான பெறுமதி கூட்டல் 5.4 சதவீதத்தால் வளர்ச்சியடைந்தது. வாயு விற்பனைகள் 2008இன் 12.0 சதவீத சுருக்கத்துடன் ஒப்பிடுகையில் 6.4 சதவீதத்தால் அதிகரித்தன. 2009இல் அளவு நியதிகளின் நீர் பகிர்ந்தளிப்பு 2.0 சதவீதத்தால் அதிகரித்ததன் மூலம் நீர் துணைத்துறை 2008இன் 3.6 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 2.9 சதவீதத்தால் வளர்ச்சியடைந்தது.

**2009இல் கட்டடவாக்கத் துணைத் துறை 2008இன் 7.8 சதவீத வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் மெதுவடைவைக் கொண்ட 5.6 சதவீத வளர்ச்சியைப் பதிவு செய்தது.** அரசின் பாரிய நிர்மானத்திட்டங்களான நுரைச்சோலை, மேல் கொத்மலை போன்ற மின்சார உற்பத்தித் திட்டங்கள், வீதி அபிவித்தித் திட்டங்களான கொழும்பு - கட்டுநாயாக்கா, தென்னகப் பெருந்தெரு, ஏனைய மேம்பாலங்கள் மற்றும் கிராமிய வீதி அபிவிருத்தித் திட்டம் என்பவற்றை உள்ளடக்கிய "மக நெகும" என்பன இத்துறையின் வளர்ச்சிக்கு பங்களித்தன. இத் துறையின் மெதுவடைவு முக்கியமாக வீடமைப்பு நிருமானத்திலான மெதுவான வீழ்ச்சியானது 2009இல் இலங்கை மத்திய வங்கியின் வர்த்தகச் சுட்டெண்களின்படி கட்டடப் பொருட்களின் இறக்குமதிகளின் அளவில் ஏற்பட்ட 24.1 சதவீத வீழ்ச்சியில் பிரதிபலித்தது. வீடமைப்பு நோக்கங்களுக்காக வழங்கப்பட்ட வங்கிக் கொடுகடன் மட்டமும் 1.5 சதவீதம் கொண்ட வீழ்ச்சியைப் பதிவு செய்தது. சீமெந்து இறக்குமதிகளிலிருந்தான 14.9 சதவீத சுருக்கம் மற்றும் உள்நாட்டுச் சீமெந்து உற்பத்தியிலான 7.4 சதவீதச் சுருக்கம் கட்டடவாக்கச் செயற்பாடுகளில் ஒட்டுமொத்த மெதுவடைவைப் பிரதிபலித்தன.

### பணிகள்

**மொ.உ.உற்பத்தியின் 59.3 சதவீதம் கொண்ட ஆகக் கூடிய பங்கைக் கொண்டிருக்கும் பணிகள் துறை 2008இன் 5.6 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 3.3 சதவீதத்தால் வளர்ச்சியடைந்தது** பணிகள் துறையிலான மெதுவடைவு சர்வதேச வியாபாரத் துறையிலான சுருக்கம் குறிப்பாக இறக்குமதி வா்தகத் துணை த்துறையில் எற்பட்ட பின்னடைவால் பெரும்பாலும் ஏற்பட்டது.

**மொத்த விற்பனை மற்றும் சில்லறை வர்த்தகத் துணைத் துறை 2008இன் 4.7 சதவீத வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 0.3 சதவீதம் கொண்ட சிறிதளவு சுருக்கத்தைப் பதிவு செய்தது.** இம் மெதுவடைவு, இறக்குமதி வர்த்தகத் துணைத் துறை 6.6 சதவீதத்தால் குறைவடைந்தும் ஏற்றுமதி வர்த்தக துணைத் துறை 5.2 சதவீதத்தால் குறைவடைந்தும் காணப்பட்ட வெளிநாட்டு வர்த்தகத் துறையிலான பின்னடைவிலிருந்து ஏற்பட்டது. வெளிநாட்டு வர்த்தகச் செயற்பாடுகளிலான மெதுவடைவு உலகளாவிய பொருளாதார மெதுவடைவு காரணமாக ஏற்றுமதிகளிலிருந்தான சாதகமற்ற கேள்வி நிலைமைகளால் பெரிதும் ஏற்பட்டது. எனினும், உள்நாட்டு வர்த்தகத் துணைத் துறையிலான விரிவாக்கம் நீடித்து நிலைத்திருந்தது.

**இறக்குமதி வர்த்தகத் துணைத்துறை முன்னைய ஆண்டின் 4.7 சதவீத விரிவாக்கத்துடன் ஒப்பிடுகையில் 6.6 சதவீதம் கொண்ட சுருக்கத்தைப் பதிவு செய்தது.** இச் சுருக்கம் இலங்கை மத்திய வங்கியின் வர்த்தகச் சுட்டெண்ணால் எடுத்துக்காட்டப்பட்டவாறு அளவு நியதிகளில் நுகர்வுப் பொருட்களின் இறக்குமதிகளில் ஏற்பட்ட 5.0 சதவீதச் சுருக்கம், இடைநிலைப் பொருட்களில் ஏற்பட்ட 13.8 சதவீதச் சுருக்கம் மற்றும் முதலீட்டுப் பொருட்களில் ஏற்பட்ட 6.4 சதவீத சுருக்கத்தினூடாக பிரதிபலிக்கப்பட்டது. நுகர்வுப் பொருட்களின் இறக்குமதிகள் மொத்த இறக்குமதிகளின் 19.6 சதவீதத்திற்கு வகைகூறியது. இடைநிலைப் பொருட்கள் வகையினுள் அளவு நியதிகளில் மசகெண்ணெய் மற்றும் கோதுமையின் இறக்குமதிகள் இவ்வாண்டில் எதிர்க்கணிய வளர்ச்சி வீதங்களை வெளிப்படுத்திய இடைநிலைப் பொருட்களின் அனைத்து ஏனைய துணை வகைகளுக்கு முரணாக முறையே 11.5 சதவீதத்தாலும் 11.7 சதவீதத்தாலும் வளர்ச்சியடைந்தது. இதேவேளை, மொத்த இறக்குமதிகளில் முதலீட்டுப் பொருட்கள் 22.0 சதவீதமாக மட்டும் விளங்கியது. இலங்கை மத்திய வங்கியின் வர்த்தகச் சுட்டெண்களின்படி இவ்வாண்டில் கட்டடப் பொருட்களினதும் போக்குவரத்தக் கருவியினதும் இறக்குமதிகள் முறையே 24.1 சதவீதத்தாலும் 1.2 சதவீதத்தாலும் சுருங்கின.

**ஏற்றுமதி வர்த்தகத் துணைத்துறை 2008இன் 0.9 சதவீதம் கொண்ட சிறிய வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 5.2 சதவீதத்தால் சுருக்கமடைந்தது.** குறிப்பாக தேயிலை ஏற்றுமதிகளிலான சுருக்கம் காரணமாக வேளாண்மை ஏற்றுமதிகள், அளவு நியதிகளில் 5.9 சதவீதத்தால் சுருக்கமடைந்தது. புடவை மற்றும் ஆடைகள், ஏனைய கைத்தொழில் ஏற்றுமதிகளின் அளவுகள் முறையே 4.0 சதவீதத்தாலும் 31.4 சதவீதத்தாலும் சுருக்கமடைந்ததன் காரணமாக கைத்தொழில் ஏற்றுமதிகள் 13.9 சதவீதம் கொண்ட எதிர்க்கணிய வளர்ச்சியைப் பதிவு செய்தது. குறிப்பாக இரத்தினக்கற்களின் ஏற்றுமதிகளின் அளவு நியதிகளில் ஏற்பட்ட 10.1 சதவீத சுருக்கம் காரணமாக கனிப்பொருள் ஏற்றுமதி அளவுகள் 8.8 சதவீதத்தால் வீழ்ச்சியடைந்தன.

**உள்நாட்டு வர்த்தகத் துணைத்துறை 2008இன் 6.4 சதவீத விரிவாக்கத்துடன் ஒப்பிடுகையில் 7.0 சதவீதத்தால் விரிவடைந்தது.** இவ் வளர்ச்சி குறிப்பாக போர் முடிவடைந்த பின்பு வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களிலான பொருளாதாரச் செயற்பாடுகளில் ஏற்படட அதிகரிப்புடன் உள்நாட்டில் உற்பத்தி செய்த பொருட்களுக்கான அதிகரித்த கேள்வியால் ஏற்பட்டது.

**2009இல் சுற்றுலா விடுதி மற்றும் உணவகங்கள் துணைத் துறை போர் முடிந்த பின்பு வளமையுறத் தொடங்கியதுடன் ஒட்டுமொத்தத் துணைத்துறை 2008இன் 5.0 சதவீத சுருக்கத்துடன் ஒப்பிடுகையில் 13.3 சதவீதம் கொண்ட வளர்ச்சியைப் பதிவு செய்தது.** உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு விருந்தினர் இரவுகளில் ஏற்பட்ட முறையே 18.8 சதவீத மற்றும் 2.0 சதவீத வளர்ச்சி வீதங்களுடன் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டுச் சுற்றுலாச் செயற்பாடுகள் இரண்டிலும் இவ்வாண்டில் விரிவாக்கம் அவதானிக்கப்பட்டது. பொதுவாக, சுற்றுலா வருகைகள் 2008இன் 11.2 சதவீத சுருக்கத்துடன் ஒப்பிடுகையில் 2.1 சதவீதத்தால் வளர்ச்சியடைந்தது.

**போக்குவரத்து மற்றும் தொடர்பூட்டல் துறை 2008இன் 8.1 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 6.6 சதவீத வளர்ச்சியைப் பதிவு செய்தது.** போக்குவரத்து, சரக்குக் கையாளல் துறைமுகங்கள் மற்றும் சிவில் வான் போக்குவரத்து, அஞ்சல் மற்றும் தொலைத் தொடர்பூட்டல் ஆகிய மூன்று துணைத் துறைகளும் முன்னைய ஆண்டிலான வளர்ச்சி வீதங்களைவிடக் குறைவான வளர்ச்சி வீதங்களைக் கொண்டிருந்த போதிலும் இவ் வளர்ச்சிக்குச் சாதகமாகப் பங்களிப்புச் செய்தன.

**போக்குவரத்துத் துறையில் ஏற்பட்ட விரிவாக்கம் 2008இல் பதிவு செய்யப்பட்ட 6.3 சதவீத விரிவாக்கத்துடன் ஒப்படுகையில் 6.0 சதவீதமாகக் காணப்பட்டது.** இவ் வளர்ச்சி புகையிரதத் துணைத் துறை பயணிகள் மற்றும் பொருட்கள் போக்குவரத்துத் துணைத் துறையின் பெறுமதி கூட்டலில் ஏற்பட்ட முறையே 4.3 சதவீதம், 6.0 சதவீத விரிவாக்கத்தால் தோன்றியது. போக்குவரத்துத் துணைத் துறையிலான வளர்ச்சி பெற்றோல் விற்பனைகளில் ஏற்பட்ட 5.4 சதவீத வளர்ச்சியாலும் தன்னியக்க டீசல் விற்பனைகளில் ஏற்பட்ட 6.0 சதவீத வளர்ச்சியாலும் எடுத்துக்காட்டப்பட்டவாறு, எரிபொருள் நுகர்விலான அதிகரிப்பில் பிரதிபலிக்கப்பட்டது. எனினும், உந்து ஊர்திகளின் புதிய பதிவுகள் 2007 மற்றும் 2008இல் பதிவு செய்யப்பட்ட முறையே 0.9 சதவீதம் மற்றும் 11.0 சதவீத சுருக்கத்துடன் ஒப்பிடுகையில் 23.1 சதவீதத்தால் மேலும் சுருக்கமடைந்தது. புகையிரதப் போக்குவரத்துத் துறையிலான வளர்ச்சி, வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் அதன் தொழிற்பாடுகள் மீள ஆரம்பிக்கப்பட்ட போதும் இலங்கை புகையிரதத்தால் தொழிற்படுத்தப்பட்ட பயணிகள் கிலோமீற்றர்களிலான 2.2 சதவீத சுருக்கத்துடன் மெதுவடைந்தது.

**சரக்கு கையாளல் - துறைமுகங்கள் மற்றும் சிவில் வான் போக்குவரத்துத் துணைத்துறை வெளிநாட்டு வர்த்தகச் செயற்பாடுகளிலான மெதுவடைவுக்கு மத்தியில் 3.4 சதவீத வளர்ச்சியைப் பதிவு செய்தது.** இது, 2008இன் 8.0 சதவீத வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் ஒரு மெதுவடைவாகும். கொழும்புத் துறைமுகம் 3.5 மில்லியன் இருபது அடிக்குச் சமனான அலகுகளைக் கையாண்டதுடன் இது 6.0 சதவீதம் கொண்ட சுருக்கமாகும். கையாளப்பட்ட மொத்தச் சரக்கும் 3.6 சதவீதத்தால் வீழ்ச்சியடைந்தது. எனினும், நான்காம் காலாண்டில் துறைமுகங்களிலான விரிவடைந்த தொழிற்பாடுகளால் இத் துணைத்துறை மீட்சியடையும் அறிகுறிகளை எடுத்துக்காட்டியது.

**அஞ்சல் மற்றும் தொலைத் தொடர்பூட்டல் துணைத் துறை பெறுமதி கூட்டல் நியதிகளில் 2008இல் பதிவு செய்யப்பட்ட 22.3 சதவீத வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 2009இல் 11.7 சதவீத வளர்ச்சியை அறிவித்தது.** இவ் வளர்ச்சி கடுமையான போட்டிக்கு மத்தியிலும் பெறுமதி கூட்டப்படட பணிகள், போட்டி வீதங்கள் மற்றும் விடுவிக்கப்பட்ட பிரதேசங்களில் நுழைதல் என்பவற்றை அறிமுகப்படுத்துவதற்கு பணி வழங்குவோரால் மேற்கொள்ளப்பட்ட முன்னெடுப்புக்களால் பெறப்பட்டதாகும். தொலைபேசி இணைப்புக்களின் மொத்த எண்ணிக்கை (செல்லிடத் தொலைபேசி மற்றும் சிடிஎம்ஏ உட்பட) இவ்வாண்டில் 19.6 சதவீதத்தால் அதிகரித்திருக்கையில் செல்லிடத் தொலைபேசி இணைப்புக்களின் எண்ணிக்கை 25.9 சதவீதத்தால் வளர்ச்சியடைந்தது. தொலைபேசி அடர்த்தி (100 ஆட்களுக்கான இணைப்புக்களின் எண்ணிக்கை) 2008இன் 72 இலிருந்து 85 இற்கு அதிகரித்தது.

**வங்கித்தொழில், காப்புறுதி மற்றும் உண்மைச் சொத்துத் துணைத் துறை 2008இன் 6.6 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 5.7 சதவீதத்தால் விரிவடைந்தது.** இவ் வளர்ச்சி உலகளாவிய பொருளாதார நெருக்கடியால் ஏற்பட்ட ஒட்டுமொத்த உள்நாட்டுப் பொருளாதார மெதுவடைவு மற்றும் சில அதிகாரமளிக்கப்படாத நிதியியல் நிறுவனங்கள் முறிவடைந்தமையால் உருவாக்கப்பட்ட துறையிலான தளம்பலுக்கு மத்தியில் அடையப்பட்டது. எனினும், நாட்டில் சமாதானம் ஏற்பட்டதைத் தொடர்ந்து முதலீட்டாளர் நம்பகத்தன்மை படிப்படியாக கட்டியெழுப்பப்பட்டதன் மூலம் பணவீக்கம் வீழ்ச்சியடைந்ததால் சந்தையின் தளம்பலுறும் தன்மை இவ்வாண்டின் பிற்பகுதியில் சுமூகநிலைக்கு வந்தது. விடுவிக்கப்பட்ட பிரதேசங்களிலுள்ள மக்களுக்கு நிதியியல் பணிகள் கிடைப்பதை உறுதிப்படுத்துவதற்கு வங்கிகளால் குறிப்பிடத்தக்களவு எண்ணிக்கையான கிளைகளும் பணி நிலையங்களும் திறக்கப்பட்டன. முதலீட்டை ஊக்குவிப்பதற்கும் சந்தையில் திரவத்தன்மையை அதிகரிப்பதற்கும் வட்டி வீதங்கள் குறைக்கப்பட்டன.

**அரச பணிகள் துணைத்துறை 2008இன் 5.7 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 5.9 சதவீதத்தால் விரிவடைந்தது.** ஆயுதப்படைகள், பொலிஸ் மற்றும் கல்வித் துறைக்கான ஆட்சேர்ப்புக்கள் இவ் வளர்ச்சிக்கு முக்கிய பங்களிப்புக்களாக விளங்கின.

**தனியார் பணிகள் துணைத்துறையிலான வளர்ச்சி 2008இன் 6.5 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 5.8 சதவீதமாக விளங்கியது.** வளர்ச்சியிலான சிறு வீழ்ச்சி பொருளாதாரத்தின் பொதுவான மெதுவடைவால் ஏற்பட்டது.

## 2.3 செலவினம்

**உள்நாட்டுப் பொருளாதாரச் செயற்பாட்டால் உருவாக்கப்படும் மொத்தக் கேள்வி பொருளாதாரத்தின் தனியார் மற்றும் அரசதுறையின் நுகர்வினதும் முதலீட்டுச் செலவினத்தினதும் (மொத்த உள்நாட்டு மூலதன உருவாக்கம்) கூட்டுத்தொகையான மொத்த உள்நாட்டுச் செலவினத்தால் அளவிடப்படுகிறது.** 2009இல் மொத்த உள்நாட்டுச் செலவினம் அல்லது மொத்த உள்நாட்டுக் கேள்வி நடைமுறைச் சந்தை விலைகளில் ரூ. 5,139 பில்லியனாக விளங்கி 2.5 சதவீத அதிகரிப்பைப் பிரதிபலிக்கிறது. 2008இல் தொடர்பான அதிகரிப்பு 26.9 சதவீதமாகும். உள்நாட்டுக் கேள்வியிலான மெதுவடைவு உள்நாட்டுச் சண்டைக்குப் பின்பு, பொருத்தமான பேரண்டப் பொருளாதாரச் சூழலில் நுகர்வோர் மற்றும் முதலீட்டாளர் நம்பகத்தன்மையிலான முன்னேற்றத்தின் தாக்கம் காலம் தாழ்த்தியே பொருளாதாரத்தால் உணரப்படும் என்பதை எடுத்துக்காட்டுகிறது. எனவே, 24 ஆண்டுகளில் நாடு பதிவு செய்யப்பட்ட குறைந்த பணவீக்கம் பொதுவாக நுகர்வைத் தூண்டியிருக்கக் கூடியதாக இருந்த போதிலும் காலந் தாழ்த்திய விளைவு மற்றும் உலகளாவிய பொருளாதார வீழ்ச்சியின் விளைவுகள் காரணமாக உள்நாட்டுக் கேள்வியில் குறிப்பிடத்தக்க விரிவாக்கம் தெளிவாகத் தோன்றவில்லை. பொருளாதாரத்தில் ஒட்டுமொத்த விலைமட்டங்களிலான கணிசமான வீழ்ச்சியைப் பிரதிபலிக்கும் வகையில் உள்நாட்டுக் கேள்வியிலான மெதுவடைவு உண்மையான நியதிகளைவிட பெயரளவு நியதிகளில் முக்கியம் வாய்ந்ததாகும். மொத்த உள்நாட்டுச் செலவினத்தினதும் தேறிய இறக்குமதிகளினதும் கூட்டுத் தொகையான சந்தை விலைகளிலான மொத்த உள்நாட்டு உற்பத்தி ரூ.4,825 பில்லியனாக மதிப்பிடப்பட்டுள்ளதுடன் இது முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் 9.4 சதவீத அதிகரிப்பாகும்.

### நுகர்வு

**தனியார் மற்றும் அரச நுகர்வின் கூட்டுத்தொகையான மொத்த நுகர்வுச் செலவினம் நடைமுறைச் சந்தை விலைகளில் ரூ.3,955 பில்லியனாக மதிப்பிடப்பட்டுள்ளதுடன் முன்னைய ஆண்டில் பதிவு செய்யப்பட்ட 28.8 சதவீத விரிவாக்கத்துடன் ஒப்பிடுகையில் 4.1 சதவீத அதிகரிப்பைப் பதிவு செய்தது.** தனியார் நுகர்வு 2008இன் 28.4 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 0.6 சதவீதத்தால் சிறிதளவில் வளர்ச்சியடைந்தது. அரச நுகர்வு முன்னைய ஆண்டின் 30.6 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் மெதுவடைந்த போதிலும் 19.3 சதவீதத்தால் வளர்ச்சியடைந்தது. மொ.உ.உற்பத்தியின் சதவீதமாக தனியார் நுகர்வுச் செலவினம் 2008இன் 70.0 சதவீதத்திலிருந்து 64.3 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்திருக்கையில் அரச நுகர்வின் பங்கு 16.2 சதவீதத்திலிருந்து 2009இல் 17.6 சதவீதத்திற்கு அதிகரித்தது.

**உணவு, பானம் மற்றும் புகையிலை மீதான தனியார்துறை நுகர்வுச் செலவினத்தின் செலவினப் பங்கு, 2008இன் 37.8 சதவீதத்திலிருந்து 38.2 சதவீதத்திற்கு அதிகரித்தது.** உணவு, குடிபானம் மற்றும் புகையிலை தொடர்பான தனியார்துறைச் செலவினம் 2008இன் 18.5 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 1.7 சதவீதத்தால் வளர்ச்சியடைந்தது. கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண்ணின் துணைச் சுட்டெணணின்படி இம் மெதுவான வளர்ச்சியானது உணவு மற்றும் குடிபானம் வகைக்கான விலை அதிகரிப்புகளின் மட்டம் 2008இன் 30.5 சதவீதத்திலிருந்து 2009இல் 2.8 சதவீதத்திற்கு மெதுவடைந்ததன் விளைவாக ஏற்பட்டது. புடவை மற்றும் பாதணி மீதான செலவினம் பெயரளவு நியதிகளில் 2008இன் 14.2 சதவீத அதிகரிப்புடன் ஒப்பிடுகையில் 1.5 சதவீதத்தால் சுருங்கியது.

**அட்டவணை 2.11 கூட்டுக் கேள்வி**

| விடயம் | நடைமுறைச் சந்தை விலைகளில் (ரூ.மில்) 2007 | 2008(அ) | 2009(ஆ) | நிலையான (2002) விலைகள் (ரூ.மில்) 2007 | 2008(அ) | 2009(ஆ) |
|---|---|---|---|---|---|---|
| **அ. உள்நாட்டுக் கேள்வி** | | | | | | |
| நுகர்வு | 2,949,712 | 3,799,084 | 3,955,355 | 1,781,906 | 1,922,875 | 2,002,435 |
| (% மாற்றம்) | 20.9 | 28.8 | 4.1 | 4.5 | 7.9 | 4.1 |
| மொத்த உள்நாட்டு மூலதனவாக்கம் | 1,000,320 | 1,215,247 | 1,183,654 | 630,882 | 657,364 | 666,817 |
| (% மாற்றம்) | 21.7 | 21.5 | -2.6 | 8.0 | 4.2 | 1.4 |
| **மொத்த உள்நாட்டுக் கேள்வி** | **3,950,035** | **5,014,331** | **5,139,009** | **2,412,788** | **2,580,240** | **2,669,252** |
| **(% மாற்றம்)** | **21.1** | **26.9** | **2.5** | **5.4** | **6.9** | **3.4** |
| **ஆ. வெளிநாட்டுக் கேள்வி** | | | | | | |
| பொருட்களினதும் காரணியல்லாப் பணிகளினதும் ஏற்றுமதிகள் | 1,041,932 | 1,095,679 | 1,030,861 | 756,022 | 758,972 | 665,575 |
| (% மாற்றம்) | 17.7 | 5.2 | -5.9 | 7.3 | 0.4 | -12.3 |
| பொருட்களினதும் காரணியல்லாப் பணிகளினதும் இறக்குமதிகள் | 1,413,278 | 1,699,328 | 1,344,785 | 936,154 | 973,711 | 885,523 |
| (% மாற்றம்) | 16.9 | 20.2 | -20.9 | 3.7 | 4.0 | -9.1 |
| **தேறிய வெளிநாட்டுக் கேள்வி** | **-371,344** | **-603,649** | **-313,924** | **-180,132** | **-214,739** | **-219,948** |
| **இ. மொத்தக் கேள்வி** | **3,578,688** | **4,410,682** | **4,825,085** | **2,232,656** | **2,365,501** | **2,449,304** |
| **(% மாற்றம்)** | **21.8** | **23.2** | **9.4** | **6.8** | **6.0** | **3.5** |

(அ) திருத்தியமைக்கப்பட்டவை
(ஆ) தற்காலிகமானவை

மூலங்கள் : தொகைமதிப்பு புள்ளிவிபரத் திணைக்களம்
இலங்கை மத்திய வங்கி

அட்டவணை 2.12

**நடைமுறைச் சந்தை விலைகளில் தனியார் நுகர்வுச் செலவினத்தின் உள்ளமைப்பு**

| விடயம் | மொத்த தனியார் நுகர்வுச் செலவினத்தின் பங்கு (%) | | | சதவீத மாற்றம் (%) | |
|---|---|---|---|---|---|
| | 2007 | 2008(அ) | 2009(ஆ) | 08/07 | 09/08 |
| 1. உணவு, குடிபானங்கள் மற்றும் புகையிலை | 41.0 | 37.8 | 38.2 | 18.5 | 1.7 |
| 2. புடவையும் காலணியும் | 6.4 | 5.7 | 5.6 | 14.2 | -1.5 |
| 3. வீடமைப்பு, நீர், மின்சாரம், எரிவாயு மற்றும் ஏனைய எரிபொருட்கள் | 11.1 | 12.7 | 12.0 | 47.4 | -5.1 |
| 4. தளபாடமிடுதல், வீட்டுச் சாதனங்கள், வீட்டின் தொடர்ச்சியான பராமரிப்பு | 6.2 | 5.8 | 5.9 | 20.0 | 3.1 |
| 5. நலம் | 1.7 | 1.8 | 2.2 | 40.8 | 20.4 |
| 6. போக்குவரத்து | 19.2 | 21.8 | 21.1 | 45.9 | -2.5 |
| 7. ஓய்வு, களியாட்டமும் பொழுதுபோக்கும் | 3.6 | 3.6 | 2.9 | 29.4 | -18.5 |
| 8. கல்வி | 0.1 | 0.1 | 0.1 | 14.2 | 9.4 |
| 9. உணவகங்களும் விடுதிகளும் | 1.6 | 1.5 | 1.5 | 17.9 | 2.3 |
| 10. பல்வகைப் பொருட்களும் பணிகளும் | 4.2 | 4.9 | 5.5 | 48.7 | 13.9 |
| 11.வெளிநாட்டு வதியுள்ளோர் செலவு | 8.9 | 7.7 | 8.1 | 10.5 | 5.9 |
| 12.வதிவற்றோர் செலவு நீங்கலாக | 3.8 | 3.3 | 3.1 | 9.9 | -5.0 |
| **மொத்தத் தனியார் நுகர்வுச் செலவு** | **100.0** | **100.0** | **100.0** | **28.4** | **0.6** |

(அ) திருத்தியமைக்கப்பட்டவை
(ஆ) தற்காலிகமானவை

மூலம் : தொகைமதிப்பு புள்ளிவிபரத் திணைக்களம்

**வீடமைப்பு, நீர், மின்வலு, வாயு மற்றும் ஏனைய எரிபொருள்கள் மீதான செலவினம் 5.1 சதவீதத்தால் சுருங்கியது.** இது மசகெண்ணெயின் விலைகளில் ஏற்பட்ட வீழ்ச்சி காரணமாக உள்நாட்டுச் சந்தையில் எரிபொருள் விலைகள் 2008ஐ விட 2009இல் குறைந்தமை காரணமாக ஏற்பட்டது.

**முன்னைய ஆண்டில் 20.0 சதவீதத்தால் வளர்ச்சியடைந்த தளபாடம், வீட்டுப்பாவனை பொருட்கள் மற்றும் வழமையான பேணல் செயற்பாடுகள் மீதான செலவிடல் பெயரளவு நியதிகளில் 3.1 சதவீதத்தால் மெதுவடைந்தது.** கொநுவி சுட்டெண்ணில் இச் செலவின வகையின் துணைச் சுட்டெண் 2008இன் 14.6 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 2009இன் 9.1 சதவீதத்தால் அதிகரித்து 2009இல் விலைகள் 2008ஐ விட குறைந்த வீதத்தில் அதிகரித்ததை எடுத்துக்காட்டுகின்றது.

**2009இல் நலப் பணிகள் மற்றும் கல்வி மீதான செலவினம் முறையே 20.4 சதவீதத்தாலும் 9.4 சதவீதத்தாலும் அதிகரித்தது.** முன்னைய ஆண்டுகளைப் போலவே, மொத்தச் செலவினத்தில் இவ்விரு துறைகளினதும் பங்குகள் அநேகமாக ஏனைய அனைத்து செலவின வகைகளுடன் ஒப்பிடுகையில்தாழ்ந்த மட்டத்திலேயே தொடர்ந்தும் காணப்படுகின்றன. இவை 2009இல் நலப்பணிகளுக்கு 2008இன் 1.8 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 2.2 சதவீதமும் கல்விக்கு 2008இலும் 2009இலும் 0.1 சதவீதமாகவும் விளங்கியமை பொதுமக்களுக்கு அரசால் வழங்கப்படும் இலவசமான நலக் கவனிப்பு மற்றும் கல்வி வசதிகளின் தாக்கத்தைப் பிரதிபலிக்கிறது.

**2008இல் 45.9 சதவீதம் கொண்ட உயர் வீதத்தில் வளர்ச்சியடைந்த போக்குவரத்து மீதான செலவினம் பெற்றோல் மற்றும் டீசலின் கணிசமான கீழ் நோக்கிய விலைத் திருத்தங்கள் காரணமாக 2.5 சதவீதத்தால் சுருங்கி போக்குவரத்துச் செயற்பாடுகளில் குறைந்த செலவுகளுக்கு இட்டுச் சென்றது.** இச் செலவின வகை மீதான தனியார் நுகர்வுச் செலவினத்தின் பங்கு 21.8 சதவீதத்திலிருந்து 21.1 சதவீதத்திற்கு சிறிதளவால் வீழ்ச்சியடைந்தது. 2008இன் இறுதிக் காலாண்டில் அறிமுகப்படுத்தப்பட்ட எரிபொருள் மற்றும் பேரூந்து கட்டணங்களின் கீழ் நோக்கிய விலைத் திருத்தங்கள் 2009 முழுவதும் செலவினத்தைக் குறைப்பதில் கணிசமான தாக்கத்தை ஏற்படுத்தின.

**2008இல் 30.6 சதவீதத்தால் அதிகரித்த அரசதுறை நுகர்வுச் செலவினம் 2009இல் 19.3 சதவீதத்தால் அதிகரித்தது.** இம் மெதுவடைவு பணவீக்கத்தின் குறைந்த மட்டத்தால் பிரதிபலிக்கப்பட்டவாறு விலைமட்டங்களிலான வீழ்ச்சியாலும் இவ்வாண்டில் நிலவிய மொஉ உற்பத்திச் சுருக்கியின் குறைந்த வளர்ச்சியாலும் ஏற்பட்டது.

## முதலீடு

**நடைமுறைச் சந்தை விலைகளிலான முதலீட்டுச் செலவினம் (மொத்த உள்நாட்டு மூலதன உருவாக்கம்) ரூ.1,184 பில்லியனாக மதிப்பிடப்பட்டதுடன் இது 2008ஐக் காட்டிலும் பெயரளவு நியதிகளில் 2.6 சதவீத வீழ்ச்சியாகும்.** உண்மை நியதிகளில், முதலீட்டுச் செலவினம் 1.4 சதவீதத்தால் மட்டும் வீழ்ச்சியடைந்திருக்கையில் 2008இல் தொடர்பான வளர்ச்சி 4.2 சதவீதமாகும். முதலீட்டுச் செலவினத்தில் ஏற்பட்ட வீழ்ச்சி, உலகப் பொருளாதார வீழ்ச்சியின் காரணமாக முதலீட்டில் ஏற்பட்ட வீழ்ச்சியால் பகுதியளவில் ஏற்பட்டது. 2009இல் பொருளாதாரம் உண்மை நியதிகளில் 3.5 சதவீதத்தால் வளர்ச்சியடைந்த போதிலும் முதலீட்டு விகிதம் 24.5 சதவீதத்திற்கு 3.1 சதவீதப் புள்ளிகளால் வீழ்ச்சியடைந்து முதலீட்டிலான மெதுவடைவைச் சுட்டிக் காட்டுகிறது.

**அரச கூட்டுத்தாபனங்களின் முதலீடுகளை உள்ளடக்கிய தனியார்துறை முதலீடு மொத்த முதலீட்டின் 73 சதவீதத்திற்கு வகைகூறியதுடன் 2008இன் 15.1 சதவீத வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 2009இல் 6.9 சதவீதத்தால் சுருங்கியது.** தனியார்துறை முதலீட்டில் ஏற்பட்ட வீழ்ச்சி, பொருளாதாரத்தின் சில துறைகளில் ஏற்பட்ட சார்பு ரீதியிலான குறைந்த உண்மை வளர்ச்சி, பன்னாட்டு வர்த்தகத்திலான தளம்பல், மோதல் தீவிரமடைந்தமையின் காரணமாக ஆண்டின் முதலரைப்பகுதியில் நிலவிய நிச்சயமற்ற தன்மை, உலகளாவிய பொருளாதார வீழ்ச்சியுடன் இணைந்து செல்லும் விதத்தில் பன்னாட்டுக் கேள்வியில் ஏற்பட்ட மந்தம் காரணமாக கைத்தொழில்களில்

**அட்டவணை 2.13**

**இலங்கை முதலீட்டுச்சபை மற்றும் கைத்தொழில் அபிவிருத்தி அமைச்சு என்பவற்றின் கீழ் பதிவு செய்யப்பட்ட தொழில் முயற்சிகளிலுள்ள முதலீடும் தொழில் நிலையும்**

| | செயற்றிட்ட எண்ணிக்கை | | எதிர்பார்க்கப்பட்ட மற்றும் உண்மையான முதலீடுகள் (ரூ.மில்லியன்) | | | | | | தொழிலாளர் எண்ணிக்கை | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | 2008(அ) | 2009(ஆ) | 2008(அ) | | | 2009(ஆ) | | | 2008(அ) | 2009(ஆ) |
| | | | வெளிநாடு | உள்நாடு | மொத்தம் | வெளிநாடு | உள்நாடு | மொத்தம் | | |
| **முதலீட்டுச்சபை(1978ம் ஆண்டு 4ம் இல.சட்டத்தின் கீழ்)** | | | | | | | | | | |
| அனுமதியளிக்கப்பட்ட செயற்றிட்டங்கள் | 502 | 418 | 341,650 | 147,160 | 488,810 | 454,770 | 108228 | 562,997 | 61,068 | 129,059 |
| பிரிவு 17இன் கீழ் (இ) | 453 | 380 | 337,925 | 146,145 | 484,070 | 440,878 | 107,672 | 548,550 | 57,718 | 127,230 |
| பிரிவு 16இன் கீழ் | 49 | 38 | 3,725 | 1,015 | 4,740 | 13,892 | 556 | 14,447 | 3,350 | 1,829 |
| பிரிவு 17இன் கீழ் ஒப்பந்தமளிக்கப்பட்ட செயற்றிட்டங்கள் (இ) | 241 | 177 | 73,938 | 108,360 | 182,298 | 373,957 | 48,494 | 422,451 | 29,711 | 108,195 |
| பிரிவு 17இன் அடையப்பட்ட முதலீடுகள்(ஈ) | 1,989 | 1,922 | 440,408 | 261,416 | 701,824 | 494,460 | 276,732 | 771,192 | 458,165 | 474,128 |
| வர்த்தகத் தொழிற்பாடுகள் (ஈ) | 2,557 | 2,490 | 242,222 | 3,885,067 | 4,127,289 | 258,643 | 3,889,782 | 4,148,425 | 392,509 | 381,424 |
| பிரிவு 17இன் கீழ் (இ) (ஈ) | 1,767 | 1,726 | 224,513 | 3,875,028 | 4,099,541 | 240,271 | 3,879,874 | 4,120,145 | 357,844 | 346,536 |
| பிரிவு 16இன் கீழ் (ஈ) | 790 | 764 | 17,709 | 10,039 | 27,748 | 18,372 | 9,908 | 28,280 | 34,665 | 34,888 |
| **கைத்தொழில் அபிவிருத்தி அமைச்சு** | | | | | | | | | | |
| பதிவு செய்யப்பட்ட செயற்றிட்டங்கள் (ஈ) | 1,751 | 1,876 | வி.கி | வி.கி | 130,357 | வி.கி | வி.கி | 139,120 | 282,706 | 292,168 |


(அ) திருத்தியமைக்கப்பட்டவை
(ஆ) தற்காலிகமானவை
(இ) விரிவாக்கப்பட்ட செயற்றிட்டங்கள் உள்ளடங்கலாக
(ஈ) ஆண்டின் இறுதியில் ஒன்று சேர்ந்த தொகை


மூலங்கள் : இலங்கை முதலீட்டுச் சபை
கைத்தொழில் அபிவிருத்தி அமைச்சு

அளவுக்கதிகமான இயலளவு கிடைக்கத்தக்கதாக இருந்தமை உள்ளிட்ட பல காரணிகளால் ஏற்பட்டதாகும். எனினும், தனியார்துறைக் கொடுகடனில் ஏற்பட்ட சிறந்த செயலாற்றம், வெளிநாட்டு நேரடி முதலீட்டு உட்பாய்ச்சல்களிலான மேம்பாடு, இக் காலப்பகுதியில் முதலீட்டுப் பொருட்களின் இறக்குமதிகளிலான குறிப்பிடத்தக்க அதிகரிப்பு என்பவற்றால்

**வரைபடம் 2.4**

**ஒப்புதல் அளிக்கப்பட்டு ஒப்பந்தம் செய்யப்பட்ட முதலீட்டுச் சபைச் செயற்றிட்டங்கள்**




(அ) விரிவடைந்த செயற்றிட்டங்கள் உள்ளடங்கலாக
(ஆ) மிகின் லங்கா பிறைவேற் லிமிட்டெட் மீதான முதலீடு நீங்கலாக

எடுத்துக்காட்டப்பட்டவாறு இவ்வாண்டின் இரண்டாம் அரைப்பகுதியில் தனியார்துறை முதலீட்டில் சாதகமான போக்கு காணப்பட்டது.

**வெளிநாட்டு நேரடி முதலீட்டுப்பாய்ச்சல்கள் 2009இல் 32 சதவீதத்தால் வீழ்ச்சியடைந்ததுடன் இது ஐ.அ.டொலர் 601 மில்லியன் முதலீட்டிற்கும் வகைகூறியது.** 2009இல் வெளிநாட்டு நேரடி முதலீடு 2008 உடன் ஒப்பிடுகையில் ஐ.அ.டொலர் 288 மில்லியன் கொண்ட முதலீட்டுக் கடப்பாட்டுடன் 32 சதவீத சுருக்கத்தைப் பதிவு செய்தது. 2009இல் தயாரிப்புத் துறையில் வெளிநாட்டு நேரடி முதலீட்டுக்கான பிரதான பங்களிப்பு புடவை, அணியும் ஆடைகள் மற்றும் தோல் உற்பத்திகள் துணைத்துறையால் ஈர்க்கப்பட்டது.

**முதலீட்டுச் சபைச் சட்டத்தின் கீழ் ஒப்புதலளிக்கப்பட்ட முதலீட்டுக் கடப்பாட்டு செயற்றிட்டங்களின் எண்ணிக்கையில் ஏற்பட்ட வீழ்ச்சிக்கு மத்தியிலும் ரூ.563 பில்லியனுக்கு 15.2 சதவீதத்தால் அதிகரித்தது.** ஒப்புதலளிக்கப்பட்ட செயற்றிட்டங்களின் மொத்த எண்ணிக்கையில் 129 செயற்றிட்டங்கள் முழுமையாக வெளிநாட்டவர்களுக்குச் சொந்தமானவை, 81 கூட்டு துணிகர தொழில் முயற்சிகள், ஏனையவை உள்நாட்டவர்களுக்குச் சொந்தமானவை, 2009இல் ரூ.17.0 பில்லியன் முதலீட்டுக் கடப்பாட்டுடன் விரிவுபடுத்துவதற்காக 22 செயற்றிட்டங்களுக்கு ஒப்புதலளிக்கப்பட்டது. பணிகள்துறை 255 செயற்றிட்டங்களை ஈர்த்து முதலீட்டின் முக்கிய பெறுநராக தொடர்ந்து விளங்குகையில் தொழிற்சாலைக் கைத்தொழில் எஞ்சியதிற்கு வகைகூறியது. பணிகள் துறையின் கீழான முக்கிய பெறுநர்களாக சுற்றுலாவிடுதிகள் மற்றும் உணவகங்கள், தகவல் தொழில்நுட்பம் மற்றும் கணனி மென்கல அபிவிருத்தி, வலு உருவாக்கம், வீடமைப்பு மற்றும் சொத்து அபிவிருத்தி, கல்வி மற்றும் பயிற்சி நிறுவனங்கள், வர்த்தக இல்லங்கள், வேளாண்மை தொடர்பான செயற்றிட்டங்கள் என்பன விளங்கின. தொழிற்சாலைக் கைத்தொழிலின் கீழ், உருவமைக்கப்பட்ட உலோக உற்பத்திகள், பொறி மற்றும் போக்குவருத்துக் கருவி

வகை 2009இல் ஒப்புதலளிக்கப்பட்ட செயற்றிட்டங்களின் பெரும்பங்கை உள்வாங்கின. 2009 இறுதியில் முதலீட்டுச் சபையால் அடையப்பட்ட முதலீடு ரூ.771 பில்லியனாக விளங்கியது.

**முதலீட்டுச் சட்டத்தின் 17ஆம் பிரிவின் கீழ் 2009இல் ஒப்பந்தம் செய்யப்பட்ட முதலீடு குறிப்பிடத்தக்களவில் அதிகரித்தது.** 2009இல் ஒப்பந்தம் செய்யப்பட்ட 177 செயற்றிட்டங்களினுள் 86 செயற்றிட்டங்கள் பணிகள் கைத்தொழில்களாகவும் (ரூ.148 பில்லியன்), 77 தொழிற்சாலைக் கைத்தொழில்களாகவும் (ரூ.259 பில்லியன்) விளங்கிய வேளையில் 14 செயற்றிட்டங்கள் விரிவாக்கங்களாகவும் விளங்கின. உருவமைக்கப்பட்ட உலோக உற்பத்திகள் மற்றும் போக்குவரத்துக் கருவி துணைத்துறை 2009இல் தொழிற்சாலைக் கைத்தொழில் தொடர்பான ஒப்பந்தம் செய்யப்பட்ட முதலீட்டின் 55 சதவீதத்திற்கும் கூடுதலானவற்றை ஈர்த்தது.

**வர்த்தகத் தொழிற்பாட்டை ஆரம்பித்த முதலீட்டுச் சபைக் கைத்தொழில்களின் திரண்ட முதலீட்டுக் கடப்பாடு 2009இல் 0.5 சதவீதத்தால் சிறிதளவில் அதிகரித்தது.** இதில் உள்ளூருக்குச் சொந்தமான முதலீட்டுக் கடப்பாடு 2009 இறுதியில் 94 சதவீதத்திற்கு வகைகூறியது. ஏற்றுமதி பதனிடல் நிலையங்கள் மற்றும் கைத்தொழில் பேட்டைகளுக்கு வெளியே முதலீட்டுச் சபைச் சட்டத்தின் 17ஆம் பிரிவின் கீழ் வர்த்தகத் தொழிற்பாடுகளை ஆரம்பித்த 1,349 புதிய செயற்றிட்டங்கள் காணப்பட்டன.

**2009 இறுதியில் கைத்தொழில் அபிவிருத்தி அமைச்சின் கீழ் பதிவு செய்யப்பட்ட கைத்தொழில்கள் ரூ.139 பில்லியன் முதலீட்டுக் கடப்பாட்டுடன் 1,876 இற்கு அதிகரித்தது.** கைத்தொழில் அபிவிருத்தி அமைச்சின் கீழ் பதிவு செய்யப்பட்ட கைத்தொழில்களில் 80 சதவீதத்திற்கும் மேலானவை கொழும்பு மற்றும் கம்பகா மாவட்டங்களில் அமைந்திருந்ததுடன் மொத்த முதலீட்டில் 90 சதவீதத்திற்கும் கூடுதலானவற்றை ஈர்த்தன. உணவு, பானம் மற்றும் புகையிலை உற்பத்திகள், இரசாயனம், பெற்றோலியம், நிலக்கரி, இறப்பர் மற்றும் பிளாத்திக்குப் பொருட்கள், அணியும் ஆடைகள் மற்றும் தோல் உற்பத்திகள் தொடர்பான கைத்தொழில்கள் ரூ.90 பில்லியன் முதலீட்டுக் கடப்பாட்டுடன் 65 சதவீதமானவற்றை ஈர்த்தன.

**உயர் தளத்திற்கு மத்தியிலும் (முன்னைய ஆண்டிலான 48 சதவீத வளர்ச்சி) காரணமாக பெயரளவு நியதிகளிலான அரச முதலீடு 11.3 சதவீதத்தால் மிதமானளவில் வளர்ச்சியடைந்ததால் மொ.உ. உற்பத்திக்கு அரச முதலீட்டின் விகிதம் 2008இன் 6.5 சதவீதத்திலிருந்து 2009இல் 6.6 சதவீதம் கொண்ட சிறிய வளர்ச்சியைக் காட்டியது.** முன்னைய ஆண்டுகளைப் போலவே, குறிப்பாக வடக்கு மற்றும் கிழக்கில் புதிதாக விடுவிக்கப்பட்ட பிரதேசங்களில் மக்களின் வாழ்க்கைத் தரத்தை அதிகரிப்பதில் கவனம் செலுத்திய 'வடக்கின் வசந்தம்' மற்றும் 'கிழக்கின் உதயம்' உள்ளிட்ட பெரும்பாலும் உட்கட்டமைப்பு அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்கள் தொடர்பான முதலீட்டுச் செயற்பாடுகளில் அரசு தொடர்ந்து ஈடுபட்டது.

### மூலவளங்களின் கிடைப்பனவும் பயன்பாடும்

**மொ.உ.உற்பத்தியால் எடுத்துக்காட்டப்பட்ட பொருளாதாரத்தின் மொத்த மூலவளக் கிடைப்பனவு மற்றும் பொருட்களினதும் காரணியல்லாப் பொருட்களினதும் இறக்குமதி (வெளிநாட்டு மூலவளங்கள்) முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2009இல் 6,170 பில்லியனுக்கு 1.0 சதவீதத்தால் அதிகரித்தது.** ரூ.4,825 பில்லியன் பெறுமதியான மூலவளங்கள் கிட்டத்தட்ட 78.2 சதவீதம் உள்நாட்டிலிருந்தும் 21.8 சதவீதம் கொண்ட ரூ.1,345 பில்லியன் பெறுமதியான மூலவளங்கள் வெளிநாட்டிலிருந்தும் பெறப்பட்டன. 2009இல் உள்நாட்டு மூலவளங்களின் 9.4 சதவீத வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் வெளிநாட்டு மூலவளங்களின் கிடைப்பனவு 20.9 சதவீதத்தால் வீழ்ச்சியடைந்தது. 2009இல் உண்மை நியதிகளில் மொத்த மூலவளங்களின் கிடைப்பனவில் ஏற்பட்ட 0.1 சதவீத வீழ்ச்சி குறைந்த உண்மைப் பொருளாதார வளர்ச்சியினதும், பொருட்கள் மற்றும் பணிகளின் இறக்குமதிகளிலான வீழ்ச்சியினதும் இணைந்த விளைவாகும்.


**அட்டவணை 2.14** — **நடைமுறை சந்தை விலைகளில் மொத்த மூலவளங்களும் அவற்றின் பயன்பாடும்**

| விடயம் | சதவீதப் பங்கு | | சதவீத வளர்ச்சி | |
|---|---|---|---|---|
| | 2008(அ) | 2009(ஆ) | 2008(அ) | 2009(ஆ) |
| **அ. மூலவளங்கள்** | | | | |
| மொத்த உள்நாட்டு உற்பத்தி | 72.2 | 78.2 | 23.2 | 9.4 |
| பொருட்கள் பணிகளினது இறக்குமதிகள் | 27.8 | 21.8 | 20.2 | -20.9 |
| **மொத்தம்** | **100.0** | **100.0** | **22.4** | **1.0** |
| **ஆ. பயன்பாடு** | | | | |
| நுகர்வு | 62.2 | 64.1 | 28.8 | 4.1 |
| மொத்த உள்நாட்டு நிலையான மூலதனவாக்கம் | 18.3 | 18.6 | 26.1 | 2.9 |
| தனியார் | 14.0 | 13.6 | 19.4 | -1.7 |
| அரசு | 4.3 | 5.0 | 53.9 | 17.6 |
| இருப்புக்களின் மாற்றம் | 1.6 | 0.6 | -13.6 | -63.8 |
| பொருட்கள் பணிகளினது ஏற்றுமதி | 17.9 | 16.7 | 5.2 | -5.9 |
| **மொத்தம்** | **100.0** | **100.0** | **22.4** | **1.0** |

(அ) திருத்தியமைக்கப்பட்டவை
(ஆ) தற்காலிகமானவை

மூலங்கள்: தொகைமதிப்புப் புள்ளிவிபரத் திணைக்களம்
இலங்கை மத்திய வங்கி

**வரைபடம் 2.5** — 2009ல் பொருளாதாரம் (நடைமுறை விலைகளில்)



**அட்டவணை 2.15** **நடைமுறைச் சந்தை விலைகளில் நுகர்வு, முதலீடு மற்றும் சேமிப்புக்கள்**

| விடயம் | ரூ.மில்லியன் | | (%) மாற்றம் | | மொ.உ.உ.வின் சதவீதமாக | |
|---|---|---|---|---|---|---|
| | 2008(அ) | 2009(ஆ) | 2008(அ) | 2009(ஆ) | 2008(அ) | 2009(ஆ) |
| 1. சந்தை விலைகளில் மொத்த உள்நாட்டு உற்பத்தி | 4,410,682 | 4,825,085 | 23.2 | 9.4 | 100.0 | 100.0 |
| 2. நுகர்வுச் செலவினம் | 3,799,084 | 3,955,355 | 28.8 | 4.1 | 86.1 | 82.0 |
| தனியார் | 3,085,296 | 3,103,806 | 28.4 | 0.6 | 70.0 | 64.3 |
| அரசு | 713,788 | 851,549 | 30.6 | 19.3 | 16.2 | 17.6 |
| 3. முதலீடு | 1,215,247 | 1,183,654 | 21.5 | -2.6 | 27.6 | 24.5 |
| தனியார் | 929,115 | 865,077 | 15.1 | -6.9 | 21.1 | 17.9 |
| அரசு | 286,132 | 318,577 | 48.3 | 11.3 | 6.5 | 6.6 |
| 4. உள்நாட்டுச் சேமிப்புக்கள் | 611,598 | 869,730 | -2.8 | 42.2 | 13.9 | 18.0 |
| தனியார் | 700,048 | 1,046,661 | 1.9 | 49.5 | 15.9 | 21.7 |
| அரசு | -88,450 | -176,931 | -53.3 | -100.0 | -2.0 | -3.7 |
| 5. உள்நாட்டுச் சேமிப்புக்கள் - முதலீட்டு இடைவெளி | -603,649 | -313,924 | -62.6 | 48.0 | -13.7 | -6.5 |
| 6. வெளிநாட்டிலிருந்தான தேறிய காரணி வருமானம் | -105,031 | -55,814 | -168.9 | 46.9 | -2.4 | -1.2 |
| 7. வெளிநாட்டிலிருந்தான தேறிய தனியார் மாற்றங்கள் | 277,711 | 336,578 | 13.3 | 21.2 | 6.3 | 7.0 |
| 8. தேசிய சேமிப்புக்கள் | 784,278 | 1,150,494 | -6.1 | 46.7 | 17.8 | 23.9 |

(அ) திருத்தியமைக்கப்பட்டவை
(ஆ) தற்காலிகமானவை

மூலங்கள் : தொகைமதிப்பு புள்ளிவிபரத் திணைக்களம்
இலங்கை மத்திய வங்கி

**பயன்பாட்டில் நுகர்வின் பங்கு, 2008இன் 62.2 சதவீதத்திலிருந்து 4.1 சதவீத வளர்ச்சியுடன் (2008இல் 28.8 சதவீதம்) 64.1 சதவீதத்திற்கு மேம்பட்டதுடன் முதலீட்டின் பங்கு 18.3 சதவீதத்திலிருந்து 2.9 சதவீத வளர்ச்சியுடன் (2008இல் 26.1சதவீத வளர்ச்சி) பெயரளவு நியதிகளில் 18.6 சதவீதத்திற்கு அதிகரித்தது.** இதன் விளைவாக பொருட்கள் மற்றும் காரணியல்லாப் பணிகளின் ஏற்றுமதிகள் 5.9 சதவீதத்தால் வீழ்ச்சியடைந்திருக்கையில் அதன் சார்பு ரீதியிலான பங்கு 1.2 சதவீதப் புள்ளிகளால் 16.7 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்து நுகர்வு மற்றும் முதலீட்டில் வளர்ச்சியைப் பிரதிபலிக்கிறது.

**நடைமுறை விலைகளில் பொருட்கள் மற்றும் பணிகளின் மொத்த வழங்கலில் 45.1 சதவீதப் பங்குடன் உள்நாட்டுப் பணிகள் உள்நாட்டு வர்த்தகம், வங்கித்தொழில் காப்புறுதி மற்றும் உண்மைச் சொத்து போன்ற துணைத்துறைகளுடன் உள்நாட்டுப் பொருட்களை விஞ்சிச் செயலாற்றியதுடன் போக்குவரத்து மற்றும் தொலைத் தொடர்பூட்டல் கணிசமானளவில் பங்களிப்புச் செய்தது.** 2009இல் உள்நாட்டுப் பணிகள் மற்றும் உள்நாட்டுப் பொருட்கள் 2008 உடன் ஒப்பிடுகையில் முறையே 10.2 சதவீதத்தாலும் 8.3 சதவீதத்தாலும் விரிவடைந்தன. இறக்குமதி செய்யப்பட்ட பொருட்களின் பங்கு 2008இன் 25.0 சதவீதத்திலிருந்து 2009இல் 19.0 சதவீதத்திற்கு சுருக்கமடைந்தது. எனினும், இறக்குமதி செய்யப்பட்ட பணிகளின் பங்கு முன்னைய ஆண்டின் 2.8 சதவீதம் கொண்ட அதே மட்டத்திலேயே மாறாதிருந்தது.

**கேள்விப் பக்கத்தில், நடைமுறை நியதிகளில் நுகர்வின் பங்கு 64.1 சதவீதத்திலும், மூலதன உருவாக்கம் 19.2 சதவீதத்திலும் ஏற்றுமதிகள் 16.7 சதவீதத்திலும் காணப்பட்டது.** மொத்த உள்நாட்டுக் கேள்வியில், தனியார்துறை அரச முதலீடு மற்றும் நுகர்வில் ஏற்பட்ட கணிசமான விரிவாக்கத்தைத் தொடர்ந்து முன்னைய ஆண்டைவிட குறைந்த பங்குகளுடன் நுகர்வின் 78 சதவீதத்திற்கும் முதலீட்டின் 73 சதவீதத்திற்கும் வகைகூறியது.

## சேமிப்புகள்

**உலகளாவிய பொருளாதார வீழ்ச்சி காரணமாக, குறிப்பாக சார்பு ரீதியில் குறைந்த பொருட்களின் விலைகளால் விளைவிக்கப்பட்ட மொத்த நுகர்வுச் செலவினத்திலான மெதுவான வளர்ச்சி காரணமாக உள்நாட்டுச் சேமிப்புகள் மற்றும் தேசிய சேமிப்புகள் இரண்டும் 2008இன் சேமிப்புகளுடன் ஒப்பிடுகையில் குறிப்பிடத்தக்களவில் வளர்ச்சியடைந்தன.** மூலவள இடைவெளி காரணமாக, மொ.உ.உற்பத்தியின் விகிதமாக உள்நாட்டுச் சேமிப்புகள் - முதலீட்டு இடைவெளி 2008இல் பதிவு செய்யப்பட்ட 13.7 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 6.5 சதவீதமாக காணப்பட்டது. மூலவள இடைவெளியிலான வீழ்ச்சி சென்மதி நிலுவையில் நடைமுறைக் கணக்குப் பற்றாக்குறையிலான மேம்பாட்டுடன் இணங்கிச் செல்லும் வகையில் காணப்பட்டது.

**தனியார் சேமிப்புகள் மற்றும் அரச சேமிப்புக்களை உள்ளடக்கிய உள்நாட்டுச் சேமிப்புகள் 2009இல் ரூ.870 பில்லியனாக மதிப்பிடப்பட்டுள்ளதுடன், இது முன்னைய ஆண்டைவிட 42.2சதவீத அதிகரிப்பாகும்.** உள்நாட்டுச் சேமிப்புகளிலான அதிகரிப்பு பெரும்பாலும் தனியார் சேமிப்பிலான மேம்பாட்டால் ஏற்பட்டதாகும். தனியார் சேமிப்புகள் 49.5 சதவீதத்தால் மேம்பட்டிருக்கையில் அரச வரவு செலவுத்திட்டத்தின் நடைமுறைக் கணக்கு நிலுவையாக வரைவிலக்கணம் செய்யப்பட்ட அரசின் சேமிப்புகள் 2008இன் 100.0 சதவீத வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் தொடர்ந்து எதிர்க் கணியமாக விளங்கி மேலும் மோசமடைந்தது.

**உள்நாட்டுச் சேமிப்புக்கள், தேறிய வெளிநாட்டு தனியார் மாற்றல்கள் மற்றும் வெளிநாட்டிலிருந்தான தேறிய காரணி வருமானத்தின் கூட்டுத்தொகையான தேசிய சேமிப்புகள் 2009இல் ரூ.1,150 பில்லியனாக மதிப்பிடப்பட்டு முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் 46.7 சதவீத முன்னேற்றத்தைப் பதிவு செய்தது.** தேசிய சேமிப்புகள் விகிதம் (தேசிய சேமிப்புகள்/ மொ.உ.உற்பத்தி) 2009இல் 6.1 சதவீதப் புள்ளிகளால் 23.9 சதவீதத்திற்கு அதிகரித்தது. தேசிய சேமிப்புக்களில் ஏற்பட்ட முன்னேற்றம் தேறிய காரணி வருமானம் மற்றும் தேறிய தனியார் மாற்றல்கள் இரண்டினதும் சாதகமான செயலாற்றத்தால் ஏற்பட்டது. வெளிநாட்டிலிருந்தான தேறிய காரணி வருமானம் எதிர்கணியமாக தொடர்ந்து விளங்கிய போதிலும் காரணிக் கொடுப்பனவுகளில் ஏற்பட்ட வீழ்ச்சியுடன் இவ்வாண்டில் மேம்பாடடைந்தது. தொழிலாளர் பணவனுப்பல்களை உள்ளடக்கியுள்ள தேறிய தனியார் நடைமுறை மாற்றல்கள் 2009இல் ரூ.337 பில்லியனுக்கு 21.2 சதவீதத்தால் அதிகரித்தது.